# ஆதாரக் கல்வி

6 11-12

மார்ச் - ஏப்ரல், 1954

TN3ம211, N48
N54.6.11-12
208950

# ஆதாரக்கல்வி

ஆண்டு சந்தா
ரூ 3—0—0

தனிப்பிரதி
அணா 0—4—0

மலர் 6 | மார்ச் 1954 | கலை 11


681

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆசிரியர்களே! கவனியுங்கள்!! —தலையங்கம் | 1 |
| 2. | கடமையில் தவறும் ஆசிரியர்கள் | 2 |
| 3. | இதுதான் சிறந்த வழி | 3 |
| 4. | கல்வி விதிகள் திருத்தங்கள் | 4 |
| 5. | உபாத்தியாயர்களும் தேர்தலும் | 5 |
| 6. | திரிதோஷங்களும் உணவும் —பி. வி. | 6 |
| 7. | வாழ்த்துரை! —சி. இராசலட்சுமி ஆசிரியை | 8 |
| 8. | கடவுளின் இயல்பு —பெ. சி. குமரவடிவேல் செட்டியார் | 9 |
| 9. | திருப்பாவை-திருவெம்பாவை —ஸ்ரீமான் திரு. ரா. கோவிந்தராஜ ஐயர், B.A.L.T. | 12 |
| 10. | கல்வி நம் செல்வம்! —S. S. ராகவன் | 16 |
| 11. | உபநிஷதச் சிறு கதைகள் —"ஆசி" | 22 |
| 12. | எது நாகரீகம் | அட்டை 2 |
| 13. | பாசமே நித்தம் வீசுமே! —S. S. ராகவன் | அட்டை 3 |


681
1-54


## ஆதாரக்கல்வி காரியாலயம்

நெ 87, ஆச்சாரப்பன் தெரு,

சென்னை-1.

# ஏது நாகரீகம்

நாகரீகம் என்பது இன்றளவில் மக்களை மக்களும், தேசத்தை தேசமும் அடக்கி, அடிமைகொண்டு ஆள ஆசைப்படுவது என்றுள்ளது. இந்த நாகரீகம் வளர்ச்சி யடைந்தே வருமானால் உலகம் அழியும் என்பதை நன்கு உணர்ந்துதானோ என்னவோ இன்றைய நாகரீகத்தின் உறைவிடமாம், அமெரிக்க நாட்டு ஜனாதிபதியார் அணுசக்தி கட்டுப் பாட்டை வற்புறுத்தி பேசி வருகிறார்.

இச் சூழ்நிலையில் நாகரீகம் என்றால் என்ன? அதன் லட்சணம் யாது? என்பதைப் பார்ப்போம்.

நாகரீகம் என்பதை ஆங்கிலத்தில் (Civilization) என்கின்றனர். இச் சொல் நம் தாய்மொழியில் பல்லாயிர ஆண்டுகட்கு முன்பே வழங்கி வந்துள்ளது. ஒரு தேசத்தின் நாகரீக வளர்ச்சியை எதைக்கொண்டு அளவிடுவது? சோப்பும், பவுடரும், இது போன்ற வாழ்க்கைக்கு அவசியமற்ற பொருள்கள் அதிகம் உற்பத்தியாவதைக் கொண்டா? அல்லது எல்லா வேலைகளையும் இயந்திரங்களே செய்ய மனிதர்கள் உண்பதும்கேளிக்கைகளில் காலம் கழித்து, போர்வெறி கொண்டு அலைவதைக் கொண்டா? அல்ல. இது அழியும் நாகரீகம். என்றாகிலும் இது அழிவதோடு உலகையும் அழிக்க வகை கோலும்.

ஒரு தேசத்தின் நாகரீக வளர்ச்சியை அத் தேசத்தின் மக்களிடத்தே உள்ள பண்புகளைப் பார்த்தே தேர்வு கொள்ளுதல் வேண்டும் இதற்கு சான்று வேண்டுமெனில் நம் பழம்பெரு நூல்களில் ஆதாரங்கள் உள்ளன. இன்னும், என்றும் மனித வாழ்க்கைக்கு அவசியமும், உலகத்திலுள்ள எல்லா மொழியினராலும் போற்றப்படுவதும், ஐக்கிய நாட்டுச் சபையால் எல்லா பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப் பட்டதுமான திருக்குறளிலே வள்ளுவப் பெருந்தகையார் நாகரீகம் என்பது என்ன என்பதை தெளிவாக்கியுள்ளார்.

எல்லோராலும் விரும்பத்தக்க நாகரீகம் வேண்டுமென்பவர்கள் சிறந்த நற்பண்புடையவர் தனக்குக் கொடுப்பது விஷம் என்றும் அஃதால் நமக்குத் தீங்கு நேரிடும் என்பதை நன்கு உணர்ந்தும், மறக்காமல் அதனை உட்கொள்வார்கள் என்றும் பொருள்பட

பெயக் கண்டும் நஞ்சு உண்டு
அமைவர் நயத்தக்க நாகரீகம் வேண்டு
பவர்—என்கிறார்.

இதிலிருந்து மனிதனின் குணங்கள் நயமான முறையில் சித்தரிக்கப்படுகிறது.

பின்னும் இதனையே நற்றிணை என்ற பழம் பெருநூல் ஒன்றிலே புலவர் ஒருவர் தனக்கு முன்னிருந்து மிகவும் நெருங்கிய நட்புள்ளவர் கொடுக்கும் விஷத்தையும் சிறந்த பண்புடையோர் உண்பார்கள் என்றும் பொருள்பட

முந்தை இருந்து நட்டோர் கொடுப்
பின் நஞ்சும் உண்பர் நனி நாகரீகர்—
என்கிறார்.

இனி இவைகளிலிருந்து நாம் அறியக் கிடப்பது, நாகரீகம் என்பது வெளி வேஷமன்று. மனித உள்ளத்தே தழைத் தோங்கும் சிறந்த பண்பாடே என்பது தெளிவு.

இது பக்தை மீராவும், ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளும் விஷம் உண்டதை நினைவு படுத்தவில்லையா;

என்? நம் காலத்தில் நம்முடன் வாழ்ந்து நமக்கும் உலகுக்கும் பேருண்மைகளை போதித்த காந்தியடிகளார் வாழ்க்கை நமக்கு சிறந்த நாகரீகத்தை எடுத்துக் காட்டவில்லையா? அவருக்கு நாம் செய்யும் ஒரே கைமாறு அவருடைய கொள்கைகள் எங்கும் பரவ வழி செய்வதோடு ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் கடைப்பிடிக்க வேண்டும். அப்போது தான் உலகில் உண்மையான நாகரீகம் வளர்ந்து; "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற அமுத வாக்யங்கள் உயிர் பெறும் அதுவன்றோ நாகரீகம்!

(கிராமோதயம்)


# ஆதாரக்கல்வி

ஆசிரியர்: அ. கி. சு. சர்மா

கல்வி 6 | விஜய, மாசி—மார்ச், 1954 | கலை 11


## ஆசிரியர்களே! கவனியுங்கள்!!

"உங்கள் தொழிலை அரசியலில் புகுத்தாதீர்கள். அதை தனியாக வைத்துக்கொள்ளுங்கள்.

ஆரம்ப ஆசிரியர்களுக்கு வெகு சீக்கிரத்தில் ஏதாவது அனுகூலம் அளிக்க முதல் மந்திரி முயன்றுக்கொண்டிருக்கிறார்.

புது ஆரம்பக்கல்வி திட்டம் காரணமாக, இருக்கும் ஆசிரியர்கள் வெளியேற்றப் படுவரோ என்று பீதியடைய தேவையில்லை"

என்று மந்திரி ஸ்ரீ ராஜாராம் ஆசிரியர்களுக்கு உறுதி கூறினார். இத்தகைய உறுதி மொழிகள் ஏனைய மந்திரிகளால் ஆசிரியர் கூட்டங்களில் பேசுகையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், ஆசிரியர்கள் உள்ளம் நிம்மதியடைந்த பாடில்லை. எனவே, சர்க்கார் இத்தகைய சாந்தமற்ற நிலைமையைப் போக்கடிக்கும் வகையில் உத்திரவுகளை பிரப்பித்து ராஜ்ய சர்க்கார் கல்வியிலாக்கா அதிகாரிகளுக்கு உடனடியாக அனுப்பிவைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

பொது மக்களிடத்தில் பல அரசியல் கட்சிக்காரர்கள் பலரகமான கருத்து வேற்றுமைகளை புகுத்துவதினாலும் பல பத்திரிக்கைகளைப் படித்து அதனால் ஏற்படக்கூடிய கருத்து வேற்றுமைகள் பொது மக்களிடையே நிலவி வருவதாலும் கிராமத்திலுள்ள ஆசிரியர்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யும் முறையில் அவர்களுக்கு போதிய மனோவலிமை இல்லாமலிருப்பதைக் காண்கிறோம். இத்தகைய சூழ்நிலையிலிருந்து வெளியேற, தன்னம்பிக்கையும் கொடுத்த திட்டத்தை அமுலுக்கு கொண்டுவரும் வகையில் விடாமுயற்சியையும் கையாண்டாலொழிய வேறு வழியில்லை. மேலும் நாட்டின் நலனையே குறிக்கோளாகக் கொண்டு காந்திய முறையிலேயே புதிய சமுதாயத்தை உருவாக்கக் கடமைப்பட்டுள்ளோம் என்ற திட நம்பிக்கையோடு தம் கடமையை நிறைவேற்றுமாறு ஆசிரியர்களை வேண்டிக்கொள்கிறோம்.

# கடமையில் தவறும் ஆசிரியர்கள்

சென்னை கல்வி விதிகளுக்குத் திருத்தங்கள் கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றின்படி ஒரு பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியரோ அல்லது வேறு ஆசிரியர் யாராவதுமோ தம் கடமைகளைச் செய்வதில் அசிரத்தையாக இருந்ததாக அல்லது ஏதாவது ஒழுங்கீனம் செய்ததாக காணப்பட்டால் கல்வி இலாகா டைரக்டர் உரிய விசாரணை நடத்தி சந்தர்ப்பத்தின் தேவைக்கேற்ப குறிப்பிட்ட காலத்துக்கோ அல்லது நிரந்தரமாகவோ ஒருவர் தலைமை ஆசிரியராக அல்லது ஆசிரியராக இருக்க அருகதையற்றவர் என அறிவிக்கலாம்.

விசாரணையின் தன்மை, 154-வது விதியில் சொல்லப்பட்டுள்ளபடி இருக்கும். டைரக்டரின் உத்தரவுகளை ஆட்சேபித்து சர்க்காருக்கு அப்பீல் செய்து கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது.

விதி 154-க்குப் பதிலாகப் பிரசுரிக்கப்பட்டுள்ள மற்றொரு திருத்தம் கூறுவதாவது:—

ஜில்லா கல்வி அதிகாரியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஆரம்பப் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள் அல்லது தலைமை ஆசிரியர்களில் ஒருவரின் நடத்தை அல்லது ஒழுக்கம் மோசமானதென நிரூபிக்கப்பட்டால் அல்லது நாச வேலைகளில் ஈடுபட்டதாக அல்லது பங்கு கொண்டதாக நிரூபிக்கப் பட்டால் அல்லது தம் கடமைகளைச் செய்வதில் அசிரத்தையாக இருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டால் அவரது சர்டிபிகேட்டை டிவிஷனல் இன்ஸ்பெக்டர் எந்தச் சமயத்திலும் 'சஸ்பெண்டு' செய்யலாம். கல்லூரி கிரேடு நீங்கலாக வேறெந்த கிரேடையும் சேர்ந்த ஆசிரியர்களின் சர்டிபிகேட்டுகள் அவ்வாறு அவரால் சஸ்பெண்டு செய்யப்படலாம்.

பிரஸ்தாப தவறுகளுக்காக எந்த கிரேடையும் சேர்ந்த ஆசிரியர்களின் சர்டிபிகேட்டுகளை எந்தச் சமயத்திலும் 'சஸ்பெண்டு' அல்லது கான்சல் (ரத்து) செய்ய டைரக்டருக்கு திருத்தம் அதிகாரம் அளிக்கிறது.

ஒரு ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியர் ஒரு கோர்ட்டில் தண்டிக்கப் பட்டால் ஒழிய. அல்லது அவர் மீதுள்ள புகார்கள் பற்றி எழுத்து மூலமாக அவருக்கு அறிவிக்கப்பட்டு டிவிஷனல் இன்ஸ்பெக்டர் அல்லது டைரக்டர் அல்லது இவர்கள் நியமிக்கும் ஒரு அதிகாரியால் பூரணமாக விசாரணை நடத்தப்பட்டால் ஒழிய மேற்கண்ட சஸ்பென்ஷன் அல்லது ரத்து உத்தரவிடப்படலாகாது.

## விசாரணை தன்மை

நடத்தப்பட இருக்கும் விசாரணையின் தன்மை வருமாறு:—

சம்பந்தப்பட்ட ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியரின் நடத்தை அல்லது வேலை பற்றி ஜில்லா கல்வி அதிகாரி அல்லது இன்ஸ்பெக்ட்ரஸ் டைரக்டருக்கு அல்லது டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்கு ஒரு பூர்வாங்க அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். டைரக்டர் அல்லது டிவிஷனல் இன்ஸ்பெக்டர் உண்மையிலேயே வழக்கு இருக்கிறது என்று கருதினால் மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து இன்ஸ்பெக்டிங் ஆபீஸருக்கு (ஐ. ஓ.) உத்தரவுகள் அனுப்பப்படும். பின் அவர் குற்றப் பத்திரிகை தயாரித்து எழுத்து மூலமாக விளக்கம் கோரி அதைச் சம்பந்தப்பட்ட ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியருக்கு அனுப்பி



# இதுதான் சிறந்த வழி

உரிமை என்பது என்ன? கடமையின் கனிவாகிய பயன்தானே! கடமையைச் சரிவரப் பொறுப்புணர்ச்சியுடன் நிறைவேற்றாத ஒருவன் உரிமைக்குப் போராடலாமா?

உரிமை—தானே உறுவது. கடமை—காலந்தவறாமல் கருவி கரணங்களைக்கொண்டு செயல் முறையில் நிறைவேற்றுவது. உழவன் கடமை உழுது பயிர்செய்தல், எருதின் கடமை ஏரிழுத்தலும், வண்டியிழுத்தலும், கொல்லன் கடமை இரும்பைக்கொண்டு சிதறாமல் சிதையாமல் உதவிக்கான பொருள்களை உருவாக்குதல், தலைவன் கடமை, கடமையைக் கருத்தோடு நிறைவேற்றியவனுடைய உரிமையைப் பாதுகாத்தல். இந்த உரிமையும் கடமையும் அறிவுடைய மக்கள் அனைவரிடமும் கலந்துதான் இருக்கின்றன.

கடமையைச் செய்யத் தவறியவன் உரிமைக்காக உதவியை நாடுகிறான். கடமையே உரிமைக்கு உதவி என ஒவ்வொருவரும் மனம் கொள்ளுதல் வேண்டும்.

சூரியன், சந்திரன், காற்று இவை கடமையில் தவறுவதில்லை, காலமும் மீறுவதில்லை. மனிதனும் அவற்றோடொத்து இயங்கவேண்டும். காலக் கருவியாகிய கதிரவனைப் படைத்துத்தந்த கடவுட் கருத்தும் அதுதான். உரிமை கடமையை அறிந்து நிறைவேற்றும் உழைப்பினளவே; அதனை அளிப்பவன் கடமையைச் செய்தலால் எய்தும் பயனை அடைபவனே. அவன் மன விரிவினளவே உரிமை. ஆதலால், உரிமையை விரும்பும் ஒவ்வொருவரும் கடமையைத் தவறாமல் செய்து கடமையைக் கொள்பவனுடைய மனத்தைக் கனிவிப்பதே சிறந்த வழி.

---

வைப்பார். விளக்கத்தைப் பெற்று மானேஜரின் குறிப்புக்களுடன் தம் குறிப்புக்களையும் சேர்த்து ஐ. ஓ. டைரக்டருக்கு அல்லது டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்கு அனுப்புவார். பின்னர் தண்டனை அளிக்க அதிகாரம் பெற்றுள்ள அதிகாரி வழக்கின் தாராதரத்திற்கு ஏற்பத்தக்க உத்தரவுகள் பிறப்பிப்பார்.

பெரும்பாலான வழக்குகளில் நேரடி விசாரணை அவசியமாயிருக்காது. எனினும் விசாரணை அதிகாரிகள் நேரடி விசாரணை அவசியமெனக் கருதினால் அது நடத்தப்படலாம்.

டைரக்டரே முதலில் உத்தரவு பிறப்பித்தால் சர்க்காருக்கும், டிவிஷனல் இன்ஸ்பெக்டர்கள் உத்தரவு பிறப்பித்தால் டைரக்டருக்கும் அப்பீல் செய்து கொள்ளலாம்.

## ஒப்பந்த அமைப்பு திருத்தம்

10-வது ஷரத்துக்கான 28-வது அனுபந்தத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒப்பந்த நகல் அமைப்பும் திருத்தம் செய்யப்படுகிறது. தற்போதுள்ளதற்குப் பதிலாகக் கீழ்க்கண்ட திருத்தம் பிரசுரிக்கப் பட்டுள்ளது:—

இந்த ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்டுள்ள இரு தரப்பாரில் யாரும் ஒப்பந்த நிபந்தனைகளைக் கடைப்பிடிக்கத் தவறினால் பாதிக்கப்படும் தரப்பார் கல்வி இலாகா டைரக்டர் அல்லது டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்கு முறையிட்டுக் கொள்ள உரிமையுண்டு. முன்னவர் அல்லது பின்னவர் இவ்விஷயமாகத் தக்க உத்தரவுகள் பிறப்பிப்பர். எனினும் டைரக்டர் உத்தரவுகளை ஆட்சேபித்து சர்க்காருக்கும், டிவிஷனல் இன்ஸ்பெக்டர் உத்தரவுகளை ஆட்சேபித்து டைரக்டருக்கும் அப்பீல் செய்து கொள்ள உரிமை உண்டு.

# கல்வி விதிகள் திருத்தங்கள்

## தென் இந்திய ஆசிரியர் சங்க அபிப்பிராயம்

தென் இந்திய ஆசிரியர்கள் சங்க நிர்வாகக் கமிட்டி ஸ்ரீ எஸ். நடராஜன் தலைமையில் நடைபெற்றது.

விசேஷ (ஸ்பெஷல்) கட்டணங்கள் வசூல் சம்பந்தமாகவுள்ள கட்டுப்பாடுகள்பற்றி போர்டு விவாதித்தது. கட்டுப்பாடுகள் சம்பந்தமாக பிற்பாடு தெரிவிக்கப்பட்ட வியாக்யானங்களால், மானேஜ்மெண்டுகளுக்கும் கல்வி ஸ்தாபன தலைவர்களுக்கும் மனக்கசப்பு ஏற்பட்டதாகவும், மாணவர்களது அறிவு அபிவிருத்திக்கு பள்ளிக்கூடங்களுக்கு வெளியேயும் பல நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவசியமாதலால் அவை பற்றி சட்ட திட்டங்களை தக்க முறையில் மாற்றியமைக்க வேண்டுமென்றும் கமிட்டி கோரியது.

கல்வி விதிகளில் விதி 98 (பி) 154 ஆகிய பிரிவுகளை திருத்தம் செய்து கெஜட்டில் பிரசுரிக்கப் பட்டது குறித்து கமிட்டி பரிசீலித்தது. விதி 98 (பி)க்கு செய்யப்பட்ட திருத்தத்தினால் ஆசிரியர்களும், தலைமையாசிரியர்களும் பாதிக்கப் படுவார்களென்றும் அவர்கள் மானேஜ்மெண்டுகளுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தப்படி கடமையில் தவறுதலுக்காக நடவடிக்கை எடுக்க ஏற்கனவே வசதி இருப்பதாயும் தற்போதைய திருத்தத்தினால் கல்வி இலாகா இந்த ஒப்பந்தம் சரிவர அமுல் நடத்தப்படுவது அப்பீல் கோர்ட்டாக இருப்பதற்குப் பதிலாக பிராசிகூட்டராக மாறிவிடுகிறதென்றும் கமிட்டியினால் கருதப் பட்டது. 'அசிரத்தை', 'முறையற்றது' என்ற தெளிவற்ற பதங்களின் கீழ் கொண்டு வரப்படும் குற்றங்களுக்கெல்லாம், டிஸ்மிஸ் செய்யவும் சஸ்பெண்டு செய்யவும் இத் திருத்தம் கடுமையான அதிகாரத்தை அதிகாரிகளுக்கு அளிக்கிறது. 154-ம் பிரிவுக்கு செய்யப்படும் திருத்தமும் அனாவசியமானது. இதனால் எந்த ஆசிரியரும், அமைதியாக தம் தொழிலை நடத்த முடியாமல் போகும். ஆகவே திருத்த யோசனையை நிறுத்தி வைத்து இவ்விஷயமாக தீவிரமாக பரிசீலிக்க கமிட்டி சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறதுஎன்று கமிட்டி மேலும் தெரிவித்தது. இதுபற்றியும்ஸ்பெஷல் கட்டணங்கள் சம்பந்தமாயும் கல்வி மந்திரியை பேட்டிகாண முடிவு செய்யப்பட்டது.

## புது ஆரம்பக் கல்வி திட்டம்

புதிய ஆரம்பக் கல்வித் திட்டம் பற்றியும் பரிசீலிக்கப் பட்டது. இத் திட்டம் பற்றி இச்சங்கம் தெரிவித்த குறைபாடுகளை மத்திய கல்வி ஆலோசனை போர்டு கவனித்தது குறித்தும் ஆதாரக்கல்வியை ராஜ்யம் முழுவதும் பரப்பும் வரை இத் திட்டத்தை ஒரு இடைக்கால திட்டமாகத்தான் இருக்கவேண்டுமென்று சிபாரிசு செய்தது குறித்தும் இச்சங்கம் சந்தோஷம் தெரிவித்தது.

தற்சமயம் சம்பள உயர்வு அளித்தால், புதுக் கல்வித் திட்டத்தை நிறைவேற்ற லஞ்சம் கொடுத்தது போல் கருதப்படும் என்ற காரணம் காட்டி ஆசிரியர்கள் சம்பள உயர்வுப் பிரச்னையைத் தள்ளி வைக்கக் கூடாதென்றும் கமிட்டி வற்புறுத்தியது.



# உபாத்தியாயர்களும் தேர்தலும்

உபாத்தியாயர்கள் ஆசிரியர் தொகுதியில் மட்டுமே தேர்தலுக்கு நிற்கலாம். அப்படியின்றி ஸ்தல ஸ்தாபனங்களுக்கோ சட்ட சபைகளுக்கோ அபேட்சகராக போட்டியிட ஆசிரியர்களை அனுமதிக்கும் பள்ளிக் கூடங்களுக்கு மான்யம் அளிப்பதை சர்க்கார் நிறுத்திவிடும் என்று சென்னை சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளது

1954 பிப்ரவரி மாதக் கடைசியிலிருந்தே இந்த உத்தரவு அமுலுக்கு வந்து விட்டது.

தனிப்பட நிர்வாகத்திலுள்ள பள்ளிகளின் நிர்வாகிகள் தங்கள் உபாத்யாயர்களிடமிருந்து இம்மாதிரி தேர்தலுக்கு நிற்கக்கூடாது என்ற உறுதி மொழியைப் பெறலாம் என்று சர்க்கார் தன் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது.

## முதியோர் கல்வியை சீரமைக்க திட்டம்

முதியோர் கல்வியை எப்படி நன்கமைத்து சரியாக்கி பலனளிக்கச் செய்வதென்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறதென்று கல்வி மந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமணியம் அறிவித்தார்.

முதியோர் கல்வி என்பது வெற்றிகரமானதாக இல்லாததால் அதற்கு செலவிடப்படும் நிதியை குழந்தைகள் படிப்புக்கு செலவிடுவதைப் பற்றிய கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும் என்றார் மந்திரி.

---

வங்க ஆசிரியர்கள் ஸ்டிரைக் சம்பந்தமாகக் கமிட்டி தனது கருத்தைத் தெரிவிக்கையில் சர்க்கார் நிலைமையை உணர்ந்திருப்பது கண்டு சந்தோஷம் தெரிவித்தது. கோரிக்கைகள் பொதுஜன கவனத்தை கவர்ந்துள்ளதால் இனி ஸ்டிரைக்கை தொடர்ந்து நடத்த வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டது.

கவுன்சிலுக்கு ஆசிரியர் தொகுதி தேர்தல் சம்பந்தமாக அபேட்சகர்கள் சங்கத்துக்கு விஸ்வாசமாக இருத்தல் தொழிலுக்கு செய்துள்ள சேவை. சட்ட சபையில் தொழிலைப் பற்றி எடுத்துரைக்கக்கூடிய சக்தி இவைகளை மனதில் கொண்டு ஆசிரியர்கள் ஓட்டளிக்கக் கேட்டுக் கொண்டது.

மிஸ். ஜே. எம். ஜெரார்டு நன்கொடை வந்தனத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆரம்பத்தில் திருவாங்கூர் ராஜ்ய ரிடயர்டு டி. பி. ஐ. ஸ்ரீ எ. கோபால மேனன் காலமானதற்கு கமிட்டி அனுதாபத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியது.

# திரிதோஷங்களும் உணவும்

பி. வி.

பஞ்ச பூதங்களால் ஆனது நம் உடல். அவற்றில், வாதம் உடல் முழுவதிலும்–ரத்தம் மாமிசம் எலும்பு ஆகிய எல்லாவற்றிலும்–பரவியிருப்பது. மிக நுண்ணிய அவயவங்களிலும், காலிலிருந்து தலைவரையிலும் ரத்த ஓட்டம் நடைபெறுவதற்கு வாதத்தின் வேகமே துணை செய்கிறது.

ஆனால் இந்த வாதம் அல்லது வாயு உடம்புக்கு வேண்டிய அளவுக்கு மேல் இருந்தால் நோய் வந்து விடும். அப்பொழுது அதிகப்படி வாயுவைக் குறைத்து உடம்பைச் சம நிலையில் வைத்துக் காப்பாற்ற வேண்டும்.

ஒரு தாய், கர்ப்ப காலத்தில் தன் உடலில் இந்தக் கப வாத பித்தங்களில் எதை உடலில் அதிகமாகக் கொண்டிருக்கிறாளோ, அதே அளவில் குழந்தையின் உடலிலும் அந்தப் பொருள் இருந்து விடுகிறது. வாதம் அதிகரித்த தாயின் வயிற்றில் ஊறிய குழந்தை தன் உடலிலும் வாத குணத்தை அதிகமாகக் கொண்டிருக்கும். இப்படிப்பட்டவர்கள் ஆகாரத்தாலும் வாதத்தை விருத்தி செய்து கொண்டால், பல வாத நோய்களால் அவதிப்படுகிறார்கள். இந்த உடலுக்கு சூடு உண்டாகும்படி செய்வது பித்தம். நம் உடலில் இருக்கும் இயல்பான சூட்டையே பித்தம் என்கிறோம். நாம் உடலைப் போஷிக்கச் சாப்பிடும் உணவுப் பொருள்கள் எல்லாவற்றையும் ஜீரணிப்பது பித்தமே. பித்தம் அல்லது ஜாடராக்கினி ஒழுங்கு தவறாமல் இருந்தால், ஜீரணசக்தி, தாகம், பசி, அழகு, அறிவாற்றல் எல்லாவற்றையும் வளர்க்கிறது. எந்த காரணத்தாலாவது உடலில் பித்தம் அதிகரித்தால் நோய் உண்டாகிறது. உடலில் பித்தம் குறைந்தாலும் அப்படியே ஆகும். ஜீரணசக்திக்கு ஆதாரம் பித்தம்; ஆகையால், உடலில் பித்தத்தின் ஓட்டம் தடைப்பட்டால் ஜீரண கருவிகளில் கடுமையான நோய் உண்டாகும்.

பஞ்ச பூதங்களில் நீரும் ஒன்று. இது உடல் முழுதும் பரவி, சுபாவமாய் மிருதுவாகவும் குளிர்ச்சியாகவும் இருக்கும். எலும்பு, சதை, கொழுப்பு, மஜ்ஜை, ரத்தம் முதலியவற்றில் காணும் குளிர்ச்சியைக் கபம் என்கிறோம்: இது வயிற்றில் தங்கி நாம் சாப்பிடும் உணவை மாவு போல் மசிக்கிறது. உடலின் பல்வேறு பகுதிகளில் கபம் பல்வேறு செயல்களை நடத்துகிறது. அது கூடியோ குறைந்தோ காணப்பட்டால் உடலில் பல நோய்கள் தோன்றுகின்றன.

வாத பித்த கபங்கள் மிகுந்து அவை உடலுக்கு கேடு செய்யும் சமயத்தில், அவற்றை ஒரே சொல்லில் 'திரிதோஷம்' என்பார்கள். ஒரு வகையில் மனித உடலுக்கு வாத பித்த கபங்கள் அவசியமாக இருப்பதால் அவற்றைத் தாதுக்கள் என்றும் சொல்லுகிறார்கள். உடலில் நோய் இல்லாமல் சுயேச்சையாக நாம் நடமாட வேண்டுமென்றால் வாத பித்த கபங்கள் சமநிலையில் இருக்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

**வாத உடல்காரர் என்பதற்கு அடையாளம்:** சாதாரணமாக இவர்கள் கடினமான ஒற்றை நாடி உடல் உள்ளவர்கள்; தூக்கம் வராமல் கஷ்டப்படுவார்கள். பேசுவதில் திறமை, நல்ல திடமான கொள்கை, அற்பக் காரணத்துக்குக் கோபித்தல், பயம், அதிருப்தி, ஞாபகக் குறைவு, பொறுமையின்மை, வெடு வெடுத்தல் முதலியவை இவர்களிடம் அமைந்திருக்கும். இவர்கள் தலையிலும் உடலிலும் ரோமங்கள் உறுதியாகவும் தெளிவாகவும் தெரியும். இவர்கள் குளிர் தாங்க மாட்டார்கள். நடக்கும் போது கீல்களிலிருந்து 'கிர்' 'கிர்' என்று சத்தம் கேட்கும். வாதம் மிக அதிகமானால் முகம் வறண்டுபோகும். நாக்கில் உப்புக்கரிக்கும். சிறு நீர் சிவப்பாக இருக்கும். இவர்கள் தூக்கத்தில் ஆகாயத்தில் எழும்பிப் பறப்பதுபோல் சொப்பனம் காண்பார்கள்.

**உணவு:** வாதத்தை அதிகரிக்கச் செய்யும் பொருள்களை விட்டு விட வேண்டும். துவர்ப்பு, கசப்பு, மிகக் காரமான உணவுகள், புழுங்கல் அரிசி, பிஸ்கோத்து, கள், ரொட்டி முதலியவற்றையும் குளிர்ச்சியான உணவுகளையும் உண்ணக் கூடாது. உலர்த்திய கீரைகள், காய்ந்த மாமிசம், வேர்க்கடலை, உளுத்தம் பருப்பு, அவரைப் பருப்பு பட்டாணி, கடலைப் பருப்பு முதலியவற்றை முக்கியமாய் மழைக்காலத்தில் விட்டுவிட வேண்டும். தித்திப்பு, புளிப்பு, உப்புச் சேர்த்த பண்டங்களையும் நெய், துவரம் பருப்பு முதலிய எண்ணெய்ப் பொருள்களையும் இவர்கள் உபயோகிப்பது நலம். சாப்பிடும் உணவு சூடாக இருக்கவேண்டும். பட்டினி கிடக்கக் கூடாது.

**பித்த உடல்காரர்களின் அடையாளம்**

இவர்களால் உஷ்ணத்தைத் தாங்க முடியாது. இவர்களுக்கு ஏராளமாக வேர்வை விடும். குளிர்ந்த உணவுகளின் மேல் அதிக ஆசை இருக்கும். சாதாரணமாக, இவர்களுடைய உள்ளங்கை, உள்ளங்கால், கண்கள் ஆகியவற்றில் எரிச்சல் இருக்கும். இவர்களுக்குப் பசிதாகம் அதிகமாக இருக்கும். இவர்களுடைய தலை மயிர் பொன்னிறமாய் இருக்கும்; தலையில் வழுக்கை விழுந்திருக்கலாம். மயிர்க் கால்கள் தேய்ந்திருக்கும். இவர்கள் வருந்தி வேலை செய்ய இயலாத மென்மையான உடலை உடையவர்கள். கோபம் வந்தபோதும் வெயிலிலும் இவர்களுடைய கண்கள் சிவந்து விடும். இவர்களுக்குச் சிரங்கு சொறி போன்ற சரும நோய்கள் அடிக்கடி வந்து தொந்தரவு கொடுக்கும். இவர்கள் உடம்பில் மச்சம் நிறைய இருக்கும். பித்தம் தலைக்கேறினால் வாய் புளிக்கும்; சிறுநீர் மஞ்சளாக இருக்கும். வேர்வை நாறும். இவர்கள் கனவில் நெருப்பையும் ஒளியுள்ள பொருள்களையும் காண்பார்கள்.

**உணவு:** சரியான காலத்தில் சாப்பிடாததாலும், துவர்ப்பு, கசப்பு, உப்புப் பொருள்களைத் தின்பதாலும், கள், சாராயம் குடிப்பதாலும் எண்ணெயில் வதக்கிய கறி காய்களை உண்பதாலும் பித்தம் அதிகரிக்கும். நல்லெண்ணெய், கிராம் பின் இலை, மீன், ஆட்டு மாமிசம், புளித்த தயிர், தயிரில் தெளிந்த நீர், வெண்ணெய் எடுக்காத மோர், புளிப்பு உள்ள பழங்கள், சூடாக இருக்கும் உணவு இவை எல்லாம் பித்தத்தை மிகுதியாக்கும்; மிக ஆபத்தை உண்டாக்கும், இவற்றைக் கட்டாயம் நீக்கவேண்டும்.

**கபம் அதிகம் உள்ளவர்கள்:** இவர்கள் சாந்தமாக இருப்பார்கள், தலையில் மயிர் அடர்ந்திருக்கும். சிறு தூக்கமும் சோம்பேறித் தனமும் இருக்கும். போதும் போதாமல் குறைவாய்ச் சாப்பிட்டாலும் இவர்கள் உடம்பில் கொழுப்பு உற்பத்தி ஆகும். உடல் வருந்த வேலை செய்தாலும் இளைப்படைய மாட்டார்கள். கபம் மேல் நோக்கியபோது, ஜீரணசக்தி குறைந்து வாய் தித்திப்பாகவும் உப்பாகவும் இருக்கும். இவர்கள் கனவில்

நீர் நிலை முதலியவற்றைக் காண்பார்கள்.

உணவு: தித்திப்பு, புளிப்பு, உப்பு, காரம், குளிர்ச்சி இவை உள்ள உணவைச் சாப்பிட்டால் கபம் (இருமல்) அதிகரிக்கும். பார்லி, கோதுமை, துவரை, அவரைப் பருப்பு, தயிர், பால், தித்திப்புக் கலந்த அன்னம், தாளித்த சாதம், வெல்லம், வாழைப் பழம், பப்பாளி, சுரைக்காய் இவற்றை விலக்கவேண்டும். கசப்புப் பொருள், முறைப்படி சாப்பாடு, உடல் பயிற்சி, உபவாசம், சூடான பண்டங்கள் இவை இவர்களுக்கு நன்மை செய்யும்.

மேலே சொன்ன மூன்று தாதுக்களின் இந்த அறிகுறிகளை அறிந்து பத்தியத்தை அநுசரிக்க வேண்டும். வாத பித்த கபங்கள் கலப்புள்ள மனிதர்கள் அதற்குத் தகுந்தபடி கலப்பு உணவு சாப்பிட வேண்டும்.

இங்கே மற்றொரு விஷயமும் சொல்லவேண்டி யிருக்கிறது. இளமையில் கபமும் முதுமையில் வாதமும் அதிகரிக்கும். நோய் வரு தடுக்கத் தம் தம் உடலுக்கு ஒத்துக்கொள்ளும் உணவையே எவரும் சாப்பிட வேண்டும். மருந்து சாப்பிடுவதை விட உணவு சாப்பிடுவதைக் கவனித்து ஒழுங்கு படுத்திக்கொண்டு, இயற்கையை ஒட்டி வாழப் பழக வேண்டும்.

அப்போது முதுமையிலும்கூடத் தாது விருத்தியுடனும் பலத்துடனும் நீடித்து வாழலாம்.

உணவு விஷயத்தில் தகுந்த ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளுபவர்கள் தம் வாழ்க்கையில் கூடிய மட்டும் திரிதோஷத்தின் பிடியிலிருந்து விடுபடுவார்கள். நம் உடலுக்கு ஒவ்வாத உணவைச் சாப்பிடுவதால் ஆரோக்கியம் கெடுகிறது. நாக்குக்கு அடிமைப் படுகிறோம். உசிதம் இல்லாத நாகரிகத்துக்கு அடி கோலி அதன் பலனாக அற்பாயுளையும் தேடிக் கொள்கிறோம். இயற்கை வாழ்க்கை, நோயிலிருந்து நம்மை விடுவிக்கும்.

(மஞ்சரி)

---

# வாழ்த்துரை!

(ஸ்ரீ. இராஜலட்சுமி ஆசிரியை)

ஆசிரியர் அவல நிலையை
ஆணித்தரமாக எடுத்துக்காட்டி
தேச மக்கள் நலத்திற்காகவும்
நற்கருத்துக்களைப் புகட்டி
நேசம் கொண்டே அரசினருடன்
நேர்மையை விளக்கிடும்
மாசில்லா இதழாக
ஆசிரியர் மதியை வளர்த்திட
மாசம் ஒரு முறை வெளிவரும்
ஆதாரக் கல்வியே வாழ்க!



# கடவுளின் இயல்பு

(பெ. சி. குமரவடிவேல் செட்டியார் பெரியகுளம்)

1. "இருவேறு உலகத்தியற்கை
திருவேறு தெள்ளிய ராதலும் வேறு"

என வள்ளுவரின் கூற்றுப்படி வாழ்க்கை இருவகையாக நடைபெறுகின்றது. மக்களில் சிலர் பொருள் நோக்கமாக வாழ்க்கை நடத்துகின்றனர். சிலர் அறிவுநோக்கமாக வாழ்க்கை நடத்துகின்றனர். அறிவு என்பது உணர்வின் தெளிவு. ஆழ்ந்த நினைப்பு உள்ளவர்க்கே இவ்வுணர்வின் தெளிவு ஏற்படும். பண்டைநாளிலே, மக்கள் தெளிவு காணும் முறையிலே தங்கள் வாழ்க்கையை நடத்தினர். அன்னவர் பொருளை முதன்மையாகக் கருதாமல் உண்மைத்தெளிவு காண்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

2. பண்டை மக்கள் பலவகையான நிலங்களில் வாழ்ந்து வந்தனர். எதையும் உற்றுப்பார்ப்பதில் மிக வல்லவர்களாக இருந்தனர். இரவெல்லாம் இருளில் உறங்கிக்கிடந்த மக்கள், பொழுது புலர்ந்தவுடன், ஒருவித உணர்ச்சிபெற்று மகிழ்ச்சி அடைகின்றனர். பலவகையான இடங்களில் வாழ்ந்த அன்னவர்கள், இயற்கை வளங்களைச் சுற்றிச் சுற்றிப் பார்த்து வியப்படைந்தனர். இருட்டில் தெரியாதிருந்த செடி கொடி மரங்களும், பறவைகளும், விலங்குகளும் பொழுது புலர்ந்தவுடன் தெளிவாகத் தெரிகின்றன. மக்களைப்போலவே அவைகளும், இரவெல்லாம் உறங்கிக் கிடந்து, பொழுது புலர்ந்தவுடன் கிளர்ச்சியுற்று, விளங்கி மகிழ்ச்சியடைகின்றன. இவற்றை மக்கள் காண்கின்றனர். இரவெல்லாம் இருளாக இருந்த உலகம் பொழுது புலர்ந்த உடனே பேரொளியோடு விளங்குவதைக்கண்டு, மக்கள் களிப்படைகின்றனர். இதற்குக்காரணம் என்ன? மக்கள் இவற்றை நுணிக்கி ஆராய முற்பட்டனர். சூரியனே இவற்றிற்குக் காரணமென முடிவுகொண்டனர். மக்களுக்கும், மற்ற உயிர்களுக்கும் வந்த வாழ்வு சூரியனாலேதான் என்ற முடிவையும் கண்டனர். அவர்களுடைய எண்ணங்களெல்லாம் பல வகையில் பரவ விடாமல், ஒருமுகமாகச் சூரியனே கவர்ந்தான். சூரியன் புறப்படும் காட்சியும் மறையுங் காட்சியும், மக்கள் உள்ளங்களை அப்படியே கவ்விக்கொண்டன. ஆழ்ந்து யோசிக்கும் எண்ணங்கள் அவர்களைப் பின்பற்றத் தொடங்கின. சூரியன் காலையில் உதயமானவுடன், உறங்கிக்கிடந்த உயிர்களெல்லாம் எழுந்து நடமாடுகின்றன. குவிந்து இருந்த தாமரை இதழ்கள் விரிந்து மலர்கின்றன. நினைத்துப்பார்த்தால் சூரியன் அசைவும், ஒளியுமே உலகத்தில் உண்டாகும் மாறுபாடுகளுக்குக் காரணங்களாக உள்ளன. சூரியன் வெப்பத்தினாலும், அசைவினாலும், மலைகளிற் சிலபகுதிகள் பிளந்து விடுகின்றன. காற்றினாலும் மழையினாலும் அவைகள் ஒன்றின்மேல் ஒன்று விழுந்து, சிறுசிறு கற்களாக மாறுகின்றன; பின் மணலாகின்றன; அதன்பின் மண்ணாகின்றன. இவ்விதமாக எல்லாப் பொருள்களும் உயிர்களும் சூரிய இயக்கத்தினால் பலவகையான அசைவுகளைப் பெறுகின்றன. தோன்றுதல், நிகழ்தல், மறைதல், மீண்டும் தோன்றும் ஆற்

றல் பெறுதல்யென தொழில்களில் ஈடுபடுகின்றன. இவற்றை மக்கள் பின்னும் உற்றுநோக்கி ஆராயத் தலைப்பட்டனர்.

3. கல், மண், இரும்பு முதலிய உயிரற்ற பொருள்கள் இருந்த இடத்திலே கிடக்கின்றன. அசைவதே இல்லை. மக்களும், மற்ற உயிர்களும் அசைத்தால் அவை அசைகின்றன. இதனால் உயிரற்ற பொருள்களை அசைக்க உயிருள்ள பொருள்கள் தேவை யெனத் தெளிவாகின்றது.

சூரியன் உயிரில்லாத பொருள். அதனை அசைத்து அதன் மூலம் உலகத்தை இயக்குதற்கு ஒரு பேராற்றல் வாய்ந்த உயிர்ப் பொருள் வேண்டுவது அவசியம் "அ" என்னும் எழுத்து எல்லா எழுத்துக்களுக்கும் தலைமையாயிருப்பது போல எல்லா உயிர்களுக்கும், அப் பேராற்றல் பெற்ற உயிர்ப் பொருள் தலைமையாக இருக்க வேண்டும். இவற்றைப் பண்டைமக்கள் கூர்மையாக எண்ணி எண்ணிப் பார்த்து ஒரு உறுதியான முடிவுக்கு வந்தனர்.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு."

என்ற பாடல் அம் முடிவைத் தெளிவு படுத்துகின்றது. மேலும், அப்பண்டை மக்கள், இயற்கையிலுள்ள அழகினைக் கண்டு வியந்து நின்று விடாமல், உலக இயற்கையில் மறைந்து ஊடுருவிக் கிடக்கும் உயிர்ப் பொருளின் இயல்பைக் கண்டறிந்து களிப்படைந்தனர். அதனை மனத்தால் நினைத்தனர்; வாயால் வாழ்த்தினர்; மெய்யால் வணங்கி வழிபட்டனர். அதனோடு நின்று விடாமல் கூர்ந்து ஆராய்வாராயினர்.

4. நிலம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகைப் படும். இவற்றிற்கு வேறாக, உயிர்கள் என்பவை உண்டென்று மக்கள் தெரிந்தனர். அதன்பின், கடவுள் என்பது ஒன்று உண்டு என்று தெரிந்து கொண்டனர். இவ்வாறு பண்டை மக்கள் உயிர், உலகம், கடவுள் என்ற மூன்றைப் பற்றி ஆராய முற்பட்டனர்.

"மக்கள் தாமே ஆறறிவுயிரே"
"மாயோன் மேய காடுறை
உலகமும்"
"கடவுள் வாழ்த்தொடு கண்ணிய
வருமே,"

எனத் தொல்காப்பியத்திலும் இம் முப்பொருளின் உண்மை தெளியக் கிடக்கின்றது.

மேலே கூறிய முப்பொருள்களில், உயிர் ஒன்றே எதனையும் அறியத்தக்கது. உயிருக்கு வேறாக இருப்பவை உலகமும், கடவுளும். உயிர்கள் விரும்பினால் உலகத்தையும் அதன்பின் கடவுளையும் அடையக் கூடும். ஆனால் மக்களில் பலர் உலகப் பொருள்களை விரும்பினர். வேறு சிலர் கடவுட் குணங்களை அடைய எண்ணினர். திருக்குறளில் கடவுளின் இயல்பு வெகு நுட்பமாக ஆராயப் பட்டிருக்கிறது. இதன் மூலம் பண்டை மக்கள் தெளிந்த உணர்வுடையதைக் கடவுளெனக் கருதினர். கடவுளது உணர்வுத் தெளிவை அடையும் நோக்கமாகவே வாழ்ந்தனர். இதற்கு "பரிபாடல்" என்ற சங்கநூல் சான்றாகும்.

5. உலகம் முதன் முதலில், கல் வடிவமாக இருந்ததென்பது அறிஞரின் கருத்து. சூரியனிடமிருந்து உலகம் ஒரு தீப்பிழம்பாகப் பிரிந்து வந்ததென்றும், அது ஆறியபோது மேடும் பள்ளமுமான ஒரு பெருங் கல்லாக இருந்ததென்றும், அன்னவர் கருதினர். அப்பெருங்கல் சூரிய வெப்பத்தால் பலவிடங்களிலும் பிளந்து, ஒன்றின் மேல் ஒன்று மோதி; விழுந்து, சிறு கற்களாக மாறி, பின் மண்ணாய்,



அதன் பின் மண்ணுய்த் தோன்றின. இம்மாறுதல் நிகழ்வதற்குள் இடையில் எவ்வளவோ காலம் கழிந்திருக்க வேண்டும். கல்தோன்றி மண் தோன்றாத காலத்திலேயே பண்டை மக்கள் தோன்றி யிருக்க வேண்டுமென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அவர்கள் தோன்றிய இடம் மலைப் பிரதேசம். அதன்பின், அவர்கள் காட்டுப் பிரதேசத்திற்குச்சென்றனர்.

இவ்விரு இடங்களிலும் மக்கட்கு இயற்கை வாழ்வு மிகுதியாக அமைந்து வந்தது. மற்ற இடங்களில் செயற்கை முயற்சிகள் மிகுதியாக இருந்தன. மலைகளிலும், காடுகளிலும் இறைவனின் இன்ப அருள் நன்றாக விளங்கிற்று. மலைப்பக்கம் தோன்றிய இறைவனது தோற்றம் சிவந்த இளைய வடிவம். மக்கள் அதை "சேயோன்" என அழைத்தனர். சேயோன் செந்நிறமானவன் அவனை "முருகன்" எனவும் கூறுவர். பின்பு 'சேயோன்' என்பது சிவம் எனவழங்கலாயிற்று. காட்டிடையே தோன்றிய இறைவனது தோற்றம் பசுமையான அழகியவடிவம். மக்கள் அதை 'மாயோள்' என அழைத்தனர். 'மாயோள்' பின்பு மாயோன் என்று வழங்கலாயிற்று. இவையாவும் சான்றோர் கூற்று. மலைக் காட்சிகளில் வீரத் தோற்றத்தையும், காட்டுவளங்களில் மெல்லிய எழில் விளங்குதலையும் மக்கள் கூர்மையாக அறிந்து உணர்ந்தனர். அவ்வுணர்வு ஆண்மை பெண்மை நினைவுகளை உண்டு பண்ணின.

6. "மாயோன் மேய காடு உறை
உலகமும்
சேயோன் மேய மைவரை
உலகமும்"

என்ற தொல் காப்பிய உரைகள் சான்றுகள் ஆகும். இவைகளையெல்லாம் உற்றுநோக்கும்போது தெளிவு உணர்வான கடவுளை மக்கள் சேயோனாகவும், மாயோனாகவும் அழைத்து வழிபட்டனரென்று தெரியவருகின்றது. பண்டைமக்கள் இறைவன் ஆண்வடிவு ஒருபக்கமும், பெண் வடிவு மற்றொரு பக்கமுமாக விளங்குகின்றான் என்பதை எப்படியோ அறிந்திருந்தனர். இதற்குச் சான்று ஐங்குறுநூறு என்ற சங்கநூலேயாகும்.

காலம் செல்லச் செல்லப் பேராற்றல் வாய்க்கப் பெற்ற முழு முதற் கடவுளுக்குக் குறிகளும், கோயில்களும் வகுக்கப் பட்டன. அடையாளங்கள் இருப்பின், மனத்திற்கு எதுவும் எளிதாகப் புலப்படக் கூடும். பொதுவான அறிவு உடையவர்களுக்கு இறைவனின் இருப்பும், இயல்பும் தெரிவது அரிது. நுணுகி அறிபவர்களுக்குத் தான் அவரது உணர்வு நிலைகள் நன்கு விளங்கக் கூடும். அதற்காகத்தான் இறைவனுக்குக்குறிகளும், கோயில்களும் முன்னோர் வகுத்தனர். புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய தமிழ்நூல்கள், கோவில்களும் வழிபாடுகளும் இருந்து வந்தமையை விளக்கமாகக் கூறுகின்றன. ஆகவே கடவுள் வழிபாடு தக்க நல்லுணர்ச்சிகளோடு உயர்ந்தோங்கிப் பொலிய, கடவுளின் இயல்பை உணரவேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும்.

---

லோகாயத தார்மிக, ஆத்மீக முன்னேற்றத்துக்கு கல்வி அஸ்திவாரம் போன்றது. மாணவர்கள், வாழ்க்கை என்னும் சர்வகலாசாலையில் தேர்ச்சி பெற உதவும் கல்வியே உண்மைக் கல்வியாகும். உலக விஷயங்களைப்பற்றிய அறிவு பெறுவதும், நடத்தையை அபிவிருத்தி செய்வதுமே பரிக்ஷைகளில் தேறுவதைவிட முக்கியமானது.

# திருப்பாவை - திருவெம்பாவை *

(சென்ற இதழின் தொடர்ச்சி)

*இஃது, சென்ற (1953) ஆண்டு, ஜனவரிமீ 10, 11-ம் நாட்களில் அம்பத்தூர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிற்கூடிய "திருப்பாவை - திருவெம்பாவை" மகா நாட்டில், சென்னை தியாகராய நகர் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் ஹைஸ்கூல் ஆசிரியர், ஸ்ரீமான் திரு. ரா. கோவிந்தராஜ ஐயர், B.A.L.T. நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

## 4. திருப்பாவை-திருவெம்பாவை நூற்பெயர்க்குக் காரணமும் பாவைப் பிரபந்தத்தின் இலக்கணமும்

"பாவை" என்பதற்கு, பிரதிமை (அழகிய வடிவம்) என்பது பொருள். இங்கு, மணலாற் செய்யப்பட்ட காத்யாயனீ (மஹாகாளி)யின் வடிவத்தைக் குறிக்கிறது. பிறகு, இச்சொல், அம்மணலாற் செய்யப்பட்ட பாவையைக் குறித்துச் செய்யப்படும் நோன்பிற்கு ஆகி, அதன் பின்னர் அந்நோன்பைக் குறிக்கும் நூலை (பிரபந்தத்தை)ச் சுட்டுகிறது. "பாவை" என்ற பதம் 'நோன்பு' என்ற பொருளிலேயே வழங்கப்பட்டுள்ளது. உதாரணமாக, "நாமும் நம் பாவைக்கு—செய்யும் கிரிசைகள் கேளீரோ", "நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்", "பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம் புக்கார்" எனவரும் திருப்பாவைப் பாசுரங்களில் எல்லாம் "பாவை" என்னுஞ்சொல் "நோன்பு, விரதம்" என்ற பொருளிலேயே பயன்படுத்தப் பட்டுள்ளதைப் பார்க்கின்றோம். இனி, இப்பாட்டுக்களின் இறுதியில் 'பாவாய்' என்ற சொல் வருதலால், 'பாவை' என்பதற்கு முன் 'திரு' என்னும் மங்கலமான அடைமொழியைச் சேர்க்க "திருப்பாவை" என ஆயிற்று என்றும், 'திரு'வுடன் 'எம்' என்பதனையுஞ் சேர்க்க 'திருவெம்பாவை' என ஆயிற்று என்றும் கூறுவர். அன்றி, "பாவாய் = கண்மணி போன்றவளே! எல் = சொல்வதை ஏற்றுக்கொள், ஓர் = சொல்லியதை ஆராய்க" எனவும் தனித்தனியே பதத்தைப் பிரித்துப் பொருள்கொள்வாரும் உளர் எனினும், அச்சொல் எல்லாப் பாசுரங்களிலும் இயன்று ஒத்த பொருள் வரவேண்டும். ஆதலின், 'ஏலோர் எம்பாவாய்' என்பதனை, பாத பூரணத்தின் பொருட்டு அதாவது அடி நிரப்புவதற்காக, வந்த தொடர் என்றே கொள்ளுதல் சால்புடைத்தெனக் கூறுவர் சான்றோர். 'பாவை' என்ற பிரபந்தத்து ஒவ்வொரு செய்யுளின் ஈற்றிலும் இவ்வாறு வருவது மரபு. வெண்டளையால் இயன்ற கொச்சகக் கலிப்பாவாற் பாடுவதும், ஈற்றடிதோறும் 'ஏலோரெம்பாவாய்' என்பது ஓரணியாய் வருவதும் பாவைப் பிரபந்தத்தின் இலக்கணம் என்ப. "திருவெம்பாவை" என்பது, வெண்டளையால் வந்த இயற்றரவிணைக் கொச்சகக் கலிப்பாவால் இயன்றதொரு பிரபந்தம்.



## 5. இனி, இப்பாவை நோன்பு, எப்போது, ஏன், எவ்வாறு கொண்டாடப்படுகின்றது என்பதனை நோக்குவோம்

புண்ய பூமி எனப்போற்றப்படும் நம் பரதகண்டத்தில் பண்டைக் காலந் தொட்டு மக்கள், தத்தம் வருணாசிரம நிலைகட்கு ஓதப்பட்ட கர்மானுஷ்டானங்களைச் செய்து வினைமாசுகள் விலகி, சித்தசுத்தி ஏற்பட்டு, அந்தக்கரணங்கள் தூயனவாய் நல்வாழ்வு நடத்தி வந்துள்ளனர். இல்லறத்தார் செய்யும் நோன்புகள், சாந்த்ராயணம், ஏகாதசி, எனப் பல உள. அவற்றுள் 'பாவை' நோன்பும் ஒன்று. இதனை, 'மார்கழிநோன்பு, மார்கழி நீராடல், காத்யாயனீ விரதம், தைந்நீராடல்' எனவுங் கூறுவர். மேலும், இதனைப் 'பாவையாடல்' எனவும் 'அம்பாவாடல்' எனவும் சில நூல்கள் கூறுகின்றன. 'மாஸானாம் மார்க சீர்ஷோஹம்' என ஸ்ரீமத் பகவத்கீதையில் சிறப்பாகச் சொல்லப்பட்ட மார்கழி மாதத்தில் பூர்ணிமையில் இந்நோன்பு தொடங்கப்படும். 'மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால்— நீராடப்போதுவீர்! போதுமினோ நேரிழையீர்!' என ஆண்டாள் முதற் பாசுரத்தில் அருளிச்செய்தார். வாதவூரடிகளும், இறுதிப்பாசுரத்தில், 'போற்றியா மார்கழி நீராடேலோர் எம்பாவாய்' எனத் திருவாய் மலர்ந்தனர். நாடு வளங்குன்றிய நாளில், மழைபொழியவும், இளங்கன்னியர், தாம் இன்னியல்புவாய்ந்த கணவர்களைப் பெற்று அறநெறிநின்று இம்மை இன்பங்களை எய்தவும், காத்யாயனீ தேவியைக்குறித்து மார்கழி முழுவதும் நோற்பர். அதன்பொருட்டு, அவர், வைகறையில் துயிலொழிந்து எழுந்திருந்து ஒருவரை ஒருவர் துயிலெழுப்பிச் சென்று நதீதீரத்தை நண்ணி, நீராடி, தேவியின் வடிவமொன்றை மணலாற் சமைத்து தத்தம் விருப்பங்கள் நிறைவேறும் வண்ணம் வணங்குவது வழக்கம். நோன்பினை மேற்கொள்வோர் செய்வன பலவுள.

"காப்பது விரதம்" என்றார் ஔவைப் பிராட்டியார் ஆத்திச்சூடியில். வினைமாசு தீர்ந்து அந்தக் கரணங்கள் தூயவாதற் பொருட்டு விரதங்கள் காக்கப் படுகின்றன, செய்யப்படுகின்றன. "இன்ன அறங்களைச் செய்வேன்" எனவும், "இன்ன பாவங்களைச் செய்யேன்" எனவும் தானே கொள்ளும் உறுதிப்பாட்டை யுடையது நோன்பு. அவ்வுறுதிப் பாட்டுடன் முயல்வோர்க்கு இடையிடையே ஊறுகள் பல உளவாதல் இயற்கை. அவ்வூறுகள் வந்துற்ற காலத்தும் உள்ளஞ் சிறிதும் உடையாது எடுத்த காரியத்தை முடிக்க வேண்டும். தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும், "உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை—அற்றே தவத்திற் குரு" எனக் கூறினார். எடுத்த காரியத்தின் இடையே உளவாகின்ற ஊறுகள் அக்காரியத்தின் சிறப்பினை, மேம்பாட்டினையன்றோ விளக்குகின்றன? எவ்வாற்றானும், அவ்வினை செய்து எய்துதற்குரியது என்பதனைவலியுறுத்துகின்றன. மஹாகவி காளிதாஸர், ("ஹேம்ந: ஸம்லக்ஷ்யதே ஹ்யக்னௌ விசுத்தி: ச்யாமிகாபி வா") "பொன்னின் உயரிய தன்மை நெருப்பிலே நன்கு காணப்படும்" எனக் கூறினார். உண்மையே. பொன்னைத் தீயிலிட்டு, காய்ச்சக் காய்ச்ச, சுடச்சுட, தன்னுடன் கலந்திருந்த மாசு மறு, குற்றங்கோது நீங்கி, அஃது ஒளிவிடுகின்றது, பிரகாசம் பெருகுகின்றது. அவ்வாறே, நோன்பினை மேற்கொண்டவர்க்கு, துன்பங்கள் இடையூறுகள் வருத்த வருத்தத் தம்மாட்

டிருந்த பாவங்கள் நீங்கி அந்தக்கரணங்கள் தூயவாகின்றன; உண்மைப் பொருளாகிய ஞானம் உண்டாகின்றது. இதனை, "சுடச் சுடரும் பொன் போல் ஒளிவிடும் துன்பம்—சுடச் சுட நோற்கிற் பவர்க்கு" என்ற குறள் இனிது எடுத்துக் காட்டுகின்றது. "கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்ற லின்—ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு" எனத் தமிழ் மறை மொழியும் ஆதலின், இவ்வாறு நோற்றலின் பயன், எடுத்த காரியம் எளிதில் இனிமையாக முடியும் என்பது நன்கு விளங்கும்.

அந்நோன்பினைக் கன்னியர் எவ்வாறு நோற்பர், என்ன, என்ன செய்யவேண்டும், இன்ன வின்ன செய்தல் ஒண்ணாது என்பதனை, சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாருடைய சொற்களாலேயே காண்போம்.

"வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்கு
செய்யுங் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமனடி பாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யா தனசெய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையுங் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்."

இவ்வாறு நோன்பினை மேற்கொள்வார், உறுதிப் பாடுடையவராய் இறுதி வரையில் சிலவற்றைச் செய்தலும் சிலவற்றைச் செய்யாதொழிதலும் வேண்டு மென்பது ஒருதலை. இதற்குச் சான்றாக ஒன்று கூறுவேன். மகப்பேறு இன்றி வருந்திய மன்னர் பெருந்தகை திலீபன், அக்குறையினை நீக்கிக் கொள்வான் கருதி, வசிஷ்ட மகரிஷி வசிக்கும் வனத்தை யடைந்தான். நிறைமொழி முனிவர் பெருமான் யாது மொழிந்தார்? "காட்டிற் கிடைக்குங் காய், கனி, கிழங்கு, வேர் இவற்றையே யுண்டு, நந்தினீ என்னும் இந்நற் பசு மகிழ்வுற்று அருளும் வரை அதனைப் பின்பற்றி ஒழுகும் விரதத்தினை (நோன்பினை) மேற்கொள்க" என்றார் (*ரகுவம்சம்) எண்ணிய எண்ணியாங் கெய்தும் தன்மையும், வேண்டிய வேண்டியாங் செய்தப் பெறும் ஆற்றலும் படைத்து வைத்தும் தவத்தலைவராகிய வசிஷ்ட பகவான், திலீபன் அப்போது மேற்கொண்டிருந்த நோன்பினை யுன்னி, அரசனுக்கு அளிக்கப்பட வேண்டிய உண்டி உறையுள் முதலியனவற்றை உதவாமல், காட்டிற் கிடைக் கும் பொருள்களைக் கொண்டே, அவ்வரசனுக்கு வேண்டிய எல்லாவற்றையும் காய், கிழங்கு புற்படுக்கை முதலியன அமைத்தார். (ஸத்யாமபி தப꞉ஸித்தௌ நியமாபேக்ஷயா முனி꞉। கல்பவித் கல்பயாமாஸ வன்யாமேவாஸ்ய ஸம்விதாம்॥) இதனால் விரதம் காக்கப்படும் முறை இனிது விளங்குமன்றோ?

## 6. திருவெம்பாவை

மாணிக்கவாசக சுவாமிகள், நினைக்கவே பேரின்பப் பெருவாழ்வு நல்கும் தனிச்சிறப்புப்பெற்ற திருவண்ணாமலை சென்று, பேரொளிப்பிழம்பாய் (ஜோதிஸ்வரூபமாய்) விளங்கும் சிவபெருமானை வணங்கிக் கொண்டு சில காலம் ஆண்டுத் தங்கியிருந்தார். அந்நாட்களில் மார்கழி மாதம் வந்துற்றது. அப்போது திருவாதிரைத் திருநாளுக்கு (ஆருத்திரா தரிசனம்) முற்படப்

* "வன்யவ்ருத்திரிமாம் ஸஸ்வதாத்மானுகதேன காம்
வித்யாமப்யஸனேனேவ ப்ரஸாதயிதுமர்ஹஸி ॥



பத்து நாட்கள் உள்ள பருவத்தே, மகளிரெல்லாம் வைகறையில் எழுந்திருந்து இல்லந்தோறுஞ் சென்று ஒருத்தியை ஒருத்தியும் பலருமாகத் துயில் உணர்த்தி, அழைத்துச்சென்று ஒன்றுகூடி; திருவாதிரைத் திருநாள்வரை, "மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேரென்னக்கை யாற் குடைந்து குடைந்து" நீராடக்கண்ட அடிகள், அம்மகளிர் கூறியதாக 'திருவெம்பாவை' யைப் பாடியருளினார், எனக் கடவுண்மாமுனிவர் இயற்றிய திருவாதவூரர் புராணத்தில், திருவம்பலச் சருக்கம் கூறுகின்றது.

இம்மாதத்தில், கோபகன்னிகையர், ஒருவரை ஒருவர் வைகறையிற் றுயில் எழுப்பி நீராடி கண்ணபிரானைத் தங்கணவாகப் பெற வேண்டியது போலவே, சிவனடியாரைத் தமக்குக் கணவராகப் பெற வேண்டுகின்றனர் சைவமகளிர். இறைவனிலும் இறைவனடியாரே ஏற்ற முடையவர் ஆதலின் இச்சைவமகளிர் சிவனடியாரைத் தங்கணவராகப் பெற விழைந்தனர் போலும். இதனை,

"முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம், அங்கவர்க்கே பாங்காவோம்,
அன்னவரே எங்கணவர் ஆவார்; அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்;
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்,
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய்"
"உங்கையிற் பிள்ளை யுனக்கே அடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்,
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்,
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க,
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க,
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க;
இங்கிப் பரிசே, எமக்கெங்கோன் நல்குதியேல்,
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய்"

என்ற திருவெம்பாவைப் பாசுரங்கள் இனிது விளக்குகின்றன.

இத்திருவெம்பாவைப் பகுதி, "சத்தியை வியந்தது" என்ற தலைப்பின் கீழ், திருவாசகத்தில் அமைந்துள்ளது. இதனால், உலக மாதாவாகிய 'உமா' (பார்வதி) தேவியின் வணக்கமே திருவெம்பாவையில் பேசப்பட்டுள்ளது என்பது விளங்கும். "சத்தியை வியந்தது" என்ற இத்தலைப்பினையும், மார்கழி நீராட்ட நோன்பில், காத்யாயனீ வணங்கப் படுவதாகப் பகரும் பாகவதப் பகுதியையும், அப் பாகவதப் பகுதியை ஆதாரமாகக் கொண்டெழுந்த ஆண்டாள் "திருப்பாவையை"யும் ஒரு சேரவைத்துக் கருதுங்கால், மணிவாசகப் பெருமான் பாடிய "திருவெம்பாவை"யும் அத் தேவியின் விரதத்தை மகளிர் கொண்டாடிய விரதத்தையே விளம்புகின்றது எனச் சாற்றுதல் சாலவும் ஏற்றமுடைய தாகும் என்க. ஆனால், "சத்தியை வியந்தது" என்பதற்கு, "உலகத்தின் படைப்பிற்குக் காரணமாய் நின்ற, அம்பிகை, கணும்பிகை, கௌரி, கங்கை, உமை, பராசக்தி, ஆதிசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, என்ற நவசக்திகளின் கூட்டமாகிய சக்தியை வியந்தது" எனப் பொருள்

# கல்வி நம் செல்வம்!

S. S. ராகவன், ராசேந்திரம் அஞ்சல் நிலையம், மருதூர் (வழி) திருச்சி ம. வ.

"அள்ள அள்ளக் குறையாததும், அழிக்க முடியாததும், அழிவு என்பதில்லாததும், அந்நியர் திருட முடியாததும், ஆன செல்வத்துள் செல்வம்! கல்விச் செல்வம்!!

கல்விச் செல்வம், பொருட் செல்வம் இரண்டும் சிறந்த செல்வங்கள் எனக் கூறப்படுகிறது.

"செலவு செய்யின் வளருங் கல்வி பிளவு என்றும் பிரியா கல்வி" இருட்டில் விழுந்ததோர் பொருளை இங்கிதமாக எளிதில் காட்டிடும் விளக்கினைப் போல...அஞ்ஞான இருட்டறையிலே ........மெய்ஞ்ஞான மதியதிலே...... ஆயிரம் ஆயிரமாகப் பதுங்கிய கருத்துக்களை அப்படியே அள்ளி வெளியே இழுத்து வந்து அறிவை யூட்டி, ஆயச் செய்து இன்ப இயலுணர்வு கூட்டுவது கல்வியல்லவா?........

"வித்தை தரும் விநயம்
விநயம் தரும் பண்பு
பண்பு தரும் பொக்கிஷம்
பொக்கிஷத்தால் புண்யம்
புண்ணியமதால் பேரின்பம்......

அடைந்து சுகமாக வாழலாம். கைக்குக் கொடையளிப்பது அழகு; மதிக்குக் கல்வி பெறுவது அழகாகும்!

அறம், பொருள், இன்பம், வீடு இவற்றைக் கொடுத்து உலகினிலே நல்ல புகழையும் நிலை நிறுத்தும். பெரிய துன்பம் நேர்ந்த விடத்தும் துணை செய்யும். ஆகவே; சிறிய வாழ்நாளுடைய மக்களுக்கு உறுதியாகிய

---

கூறுவார் சிலர். அன்றி, மனோன்மணி, சர்வபூததமனி, பலப்பிரமதனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, ரௌத்ரி, சேட்டை, வாமை என்ற ஒன்பது சக்திகளுள் முன்னின்றவர் பின்னின்றவரைத் துயிலெழுப்புவதாகவும், அதனால் பிரபஞ்ச சிருஷ்டி தொடங்குங் காலம் மார்கழி மாதம் என்றும், அக்காலத்து நிகழும் அந்தச் சக்திகளின் இயக்கங்களையே (பிரேரகங்களையே) திருவாதவூரடிகள் "திருவெம்பாவை"யில் மகளிர் ஒருவரை ஒருவர் துயிலுணர்த்துவதாகக் கூறினர் எனவுஞ் சில்லோர் சொல்லா நிற்பர். எனினும், பின் வருவனவற்றால் காத்தியாயனீ (மஹாகாளி, சத்தி) விரதமே திருவெம்பாவையிற் சுட்டப்பட்டுள்ளது என்பது தெற்றென விளங்கும்.

நவசத்திகளைப் பற்றிய குறிப்புகள் திருவெம்பாவையில் வியக்தமாக, வெளிப்படையாக யாண்டுந் தரப்பட்டில. மகளிர் மழையினை விழைதலும், சிவனடியாரைத் தங்கணவராகப் பெற வேண்டுதலும் இன்ன பிறவுமே விரித்துரைக்கப்பட்டுள்ளன. மழைக்கடவுளை வேண்டும் 'முன்னிக் கடலைச் சுருக்கி' என்னும் பாசுரத்தில் பராசத்தியாகிய உமாதேவியாரின் உறுப்புக்களே மேகத்தின் நிறம், மின்னல், முழக்கம், வானவில் முதலியவற்றிற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளன. பதினொன்காம் பாசுரத்தில் 'பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்—பாதத்திறம்பாடி ஆடேலோர் எம் பாவாய்' என உமையம்மையின் திருவடிகளே வணங்கப்பட்டுள்ளன. இன்னோரன்ன எடுத்துக்காட்டுகளால் திருவெம்பாவையும் திருப்பாவையே போன்று காத்யாயனீ விரதத்தினையே தன்னகத்துக் கொண்டது என்பது விளங்கும்.

(தொடரும்)



துணை கல்வியைக் காட்டிலும் சிறப்புடையது வேறொன்றும் இல்லை.

மேலும்;

"விண்ணிற்கு அணியாவது வெண்ணிலா மண்ணிற்கு அணியாவன் மன்னவன். தலைவிக்கணி தலைவன் ஆவன்—ஆனால் தண்மைக் கல்வி நம்மோர்க் கணியே!" என்பது அறிதல் வேண்டுவது நிச்சயம்.

கல்வியையும், செல்வத்தையும் சிறுகச் சிறுகச் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறின்றேல் ............

"கல்வியும் செல்வமும்
கொள்வது கடிதே!"
"பிச்சை எடுத்தாவது
இச்சை கொண்டு
கற்கவேண்டும் கல்வியை!
குற்றமின்றி
குணமும் தங்கக்
கூறவேண்டும் கல்வியை!!"

## கல்வியிலே நம் கடமை:

கற்க வேண்டியது எல்லாம் கல்வி தான்! ஓரேமன நிலையிலிருந்து கொண்டு படிப்பதிலிருந்து கல்வியறிவு வளர்கிறது. கல்வியினாலே பல விதமான நன்மை நமக்குக் கிடைக்கிறது.

சில மனிதர்கள் இருக்கின்றனர்; அவர்கள் கல்வியறிவே யில்லாதவர்கள் என்ற காரணத்தாலே........ அறிவாளிகள் செய்கின்ற காரியங்களிலே........அறிவாளிகளோடு சமமாக இருக்க முடியாமல் போகிறது. அவர்கள் காட்டிலேவாழும் மிருகங்களுக்கு நிகராக அவரவர்களது வாழ்க்கையைக் கழிக்கின்றனர்!

"இளமையிற் கல்" என்ற தெள்ளு தமிழ் இளமை துவக்கத்திலேயே கல்விக்கு மிகுந்த அவசியம் ஏற்படுகிறது என்பதை வெளியாக்குகிறதல்லவா? கல்வியினால் மனத்தெளிவும், புத்தி கூர்மையும் ஆகிறது. அதன் உதவியாலே மனிதன் பல அரும் பெரும் நல்ல உபயோகமுள்ள வேலைகளைச் செய்ய முடியும் என்பதை மேனாட்டு அறிஞர்கள் கண்டு பிடித்த ரேடியம், ரேடியோ, போட்டோ கிராப், மைக்ராபோன், டெலிபோன் முதலிய அரிய சாதனைகளைக் கண்டால் நமது ஐயமெல்லாம் அகன்றிடும்,

மாபெரும் அறிஞர் ஸர். இராதாகிருஷ்ணன் அவர்கள் மேனாடு முதலியவைகளில் சென்று பல நல்ல கருத்தோவியங்களை ஆங்குள்ள பலர் கூடிய சபையிலே கொம்மாளத்தோடு கூறி கௌரவமடைந்து வருவதற்குக் காரணம் என்னவென்றால் கல்வித் துறையிலே.........காலா காலத்திலே,........நல்ல திறமையைப் பெற்றதினால் அல்லவா அவர் பேச யாவரும் அசையாது கேட்கிறார்கள். இதைப்போல் இன்னும் எத்தனை எத்தனையோ பேர்கள் இருக்கிறார்களென்றால் கல்வியின் மேம்பாட்டைப் பற்றிக் கூறவேண்டுமா?

இளம் வயதிலே எந்த விதமான பழக்கம் (அப்யாசம்) கல்வியிலே ஒருவனுக்கு இருக்கின்றதோ அதற்குத் தகுந்தவாறு அவனுக்கு அவனது வாழ்க்கையிலே பயன் உண்டாகிறது. ஏனெனில், குழந்தைப் பருவத்தில் இயற்கைக் குணம் எவ்வாறு உண்டாகிறதோ........; "விளையும் பயிர் முளையிலே"

தொட்டில் பழக்கம்—

என்பது போல அதுவும் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்த வண்ணமே வரும். அது அவர்களை விட்டு விடுவதில்லை. பள்ளிகளிலே ஏட்டுப் படிப்பு மூலம் கற்பது ஏற்பட்டிருக்கிறது. புஸ்தகங்கள் பல படிக்க நேரிடுகிறது. ஆனால்; அதிலேயே கவனமாக ஊன்றிப்படிக்காது போனால் பயனுண்டோ? அவ்

வாறு ஏதேனும் பயன் கிடைத்தாலும், மிகக் குறைவாகத்தான் கிடைக்கும். இதற்கெல்லாம் முதற் காரணம் "கல்வி மனதிற்குக் கிடைக்கிறது......மேலும் மனதிலே தங்கவில்லையானால்......அவன் கொஞ்சமேனும் கற்றுக் கொள்ளவே முடியாது. ஆதலால்; மனதை நிலைநிறுத்திப் படிப்பது முக்கிய கடமையாகும். ஆனால்; படிப்பதிலே உழைப்பின் அவசியமும் ஏற்படுகிறது. கஷ்டப்பட்டு உழைத்துப் படிக்கா விட்டால் படிப்பே ஆகாது.

உழைப்பே தருவது உயர்வன்றோ! வீணில் உண்டு திண்ணை தேய உறங்குவது அறிவீனமாகும். அவர்களை அம்மாதிரி நிலையிலே பார்த்து விட்டால் திட்டவோ.........திருத்தவோ வேண்டும். உடலைப் பேணுவதா ஒருவனின் பிறப்பு?........

"உழைப்பவர் என்றும், பிழைப்பவர் உழையார் என்றும் பிழையாரே!!

உழைப்பில்லாதவன் வாழ்வு குற்றமென்கிறார் ஒருவர். உழைப்பிற்கு ஒருவரும் அஞ்சுவது கூடாது.

தேனீக்களைப் பாருங்கள்! எத்தனை சிறிய உயிர் உள்ள ஜந்து! ஆனால்; பெரிய தேன் கூடொன்றைச் செய்துகொண்டு நிறைய மதுவை மனிதர்களுக்குக் கொடுக்கிறது.

ஆழ்கடலிலே அநேக தீவுகள் இருக்கின்றன. அவைகள் பூச்சிகளிடமிருந்து உண்டாகின்றன.

இன்னும் பகலிலே ஓயாது ஓடியாடிப் பாடும் பறவைக் கூட்டங்களை பாருங்கள்!! இந்தப் புழு பறவைகளிடமிருந்து உயர்ந்த உபதேசமதை மனதில் தெரிந்து கொள்ள வேண்டும்.

தினந்தோறும் கொஞ்சம் கொஞ்சமாக உழைத்து வருவோமானால் சில நாட்களிலே கரையான் புத்துகளைப் போலே "பெரிய செயல்கள் பல விளைந்து விடுகின்றன. ஆனால், செய்து கொண்டே இருக்க வேண்டும், முதலில் ஆரம்பித்து பிறகு விட்டு விட்டுப் போவது அழகல்ல.

ஒரோர் துளி ஜலம் விழுவதினாலே குடம் நிரம்பி விடுகிறது. உழைப்போடு கல்வியையும் சிறுகச் சிறுகப் பழக்கம் செய்து வந்தால்......சில காலத்திலேயே மனிதன் பெரிய படிப்பாளியாகி விடலாம்.

படிக்கும் சமயத்தில் எல்லா விஷயங்களையும் மனதிற்கு இழுத்து வந்து" ...அதிலேயே ஊன்றி மனதை இழைத்துப் படிப்பது நல்லது.

உலகிலே இப்பெருமை பரந்த நாட்டின் உயர்வும், தாழ்வும் அதன் கல்வித் திட்டத்தையும், அத்திட்டத்தைச் சார்ந்து நடத்தி வைப்பதையும் பொறுத்திருக்கிறது ......என்றால் மிகையாகுமா .. ...

## வேண்டுங்கல்வி

பாரத நாட்டிலே எல்லோருக்கும் பொதுவாக வேண்டிய கல்வி ஒன்று. அது படிப்பாகவும் இருக்கலாம். தொழிற் கல்வியாகவும் இருக்கலாம். காந்திஜி அவர்கள் நிர்மாணித்த கல்வி அனுசரித்திருந்தால் மிக்க மேம்பாடுடையதாயிருக்கும் இந்நாடு!

பார்புகழ் பெற்ற பாரதியாரும் சமூகத் துறையிலே கல்விக்கு அழியாத ...ஆரும்புகழத்தக்க அருமையான இடம் அளிக்கின்றார். பாரதி கண்ட கல்வியும், காந்தி கண்ட கல்வியும் இணைபிரியா திட்டமாகும்.

கவிஞர் கண்ட பல கனவுகளும் நனவாகும். இக்காலத்தே... அவர் கல்வியதுவும் நனவாகும் என்பதில் என்ன சந்தேகம் ..?

புதுமைப் புரட்சிக் கவிஞரோ— "கல்வியை எவரும் பெறவேண்டும் .. . ...அது பொதுசொத்தாகும்" என்கிறார். மகான் காந்தியோ—



பாமரர் முதல் பணமுள்ளவர் வரை கல்வியைக் கைத்தொழில் கலைகளுடன் சேர்த்துப் பரவச் செய்ய வேண்டும். அது வாழ்விற்குப் பெரும் ஆதாரமாகி நல்ல நல்ல பலன்களை அடைவிக்கும். இக்கல்வி திட்டத்தை ஊக்கத்தோடு கைக்கொண்டால் நம் நாடு பண்பாடு உடையதாகி, அறிவு வளத்திலே சிறப்புடையதாகி அந்நிய நாடுகளுக்கும் எவ்விதத் துறையிலும் ஈடு காட்டி இணையில்லா நல்லுதவி புரியும் உயர் நாடாகத் திகழும் என்பது உறுதி என்கிறார்."

"வாழ்கின்ற மக்களுக் கெல்லாம் பயிற்றுவிக்கப் படுங்கல்வி தொழிற் கல்வியாக அமையவேண்டும்.

"தீமையில்லாத தொழில் பல புரிந்து தேர்ந்த நல்லறிவைப் பெற வேண்டும்" அப்பொழுது எல்லாரும் ........

"அண்ணல் அமரன் வாழ்ந்த அவனியிலே . அருங்கவி வாழ் பெரும் பூங்காவிலே... .....அன்னையின் இன்பச் சுதந்திர நாட்டினிலே ...ஆன்மீகப் பொழிலிலே...சமத்துவ நிலையிலே சமுதாயச் சுவர்க்கத்திலே...ஈடிணையிலாக் கல்விமான்களாகத் திகழ முடியும். இம்மாதிரியானவைகளை ஒவ்வொரு கிராமங்களிலும், எல்லா இடங்களிலும், முக்கியமாகப் பரப்பி பண்பு போற்றும் நாடாக ஆக்க வேண்டுவது கடமையும், முறையுமாகும்!

'வீடுதோறும் கலையின் விளக்கம் வீதிதோறு மிரண்டொரு பள்ளி' இருக்கவேண்டும் என்று கட்டளையிடுகிறார் நம் கவிச்செல்வர்! 'வாழ்க்கை வாழ்வதற்காகக் கல்வி... வாழ்வு மூலம் கல்வி' என்ற கருத்துக்கள் பொதிந்து கிடக்கும் இந்த ஆதாரக்கல்வித் திட்டம் ஏழையர்களின் அயர்ச்சிக்கு...கூக்குரலுக்கு ...சிந்தும் கண்ணீருக்கு...தவிப்பிற்கு சிறந்த சஞ்சீவியாகும்!!...

பாரதப் பெருஞ்செல்வியின் நாடான இப்புதுமை நாட்டின் மேம்பாட்டிற்கு இன்றியமையாத தொன்றாகும்.

எதிர்கால சந்ததிகளும், சுதந்திர மணிகளும்...மகிழ்ந்து வாழவேண்டுமானால்...சமூகம் சிதறாது சிறப்படைந்து விளங்கவேண்டுமானால்... சுயதேவைத் திட்டமும் பூர்த்தியாக வேண்டுமானால்...பொதுவாக மக்களையும் மகிழ்விக்கச்செய்து ... தரத்தையும் வளப்படுத்த வேண்டுமானால்... இதுவே பயன்பெறத்தக்க அரும் நோக்கமாகும்.

பழம் பெருங்காலத்தே வாழ்க்கையிலே அடிப்படையாக பயன் படுத்திய கருவி 'கல்' என்னும் கருவியே யாகும். அக்காலத்தவர்கள் அக்கல்லாலான கருவி மூலம் தொழில் பல புரிந்து பெரும்பெரும் அரிய விஷயங்களை கற்றுணர்ந்தனர். ஆகையால்; வாழ்க்கை சிறக்கும் கல்வி வளம் கற்றுணர்ந்தனர். ஆகையால், வாழ்வு செழிக்கும் கல்விவளமை பெறவேண்டும் வாழ்நாளை வீண் நாளாக்காது கற்பதோ மிக்க நல்லது. சமயமோ கிடைப்பது அரிது. சந்தர்ப்பத்தை விட்டுவிட்டால் சுகமடைவது முடியாது' ஆனதால்; இருக்கும் நேரத்தை அமிர்தமென எண்ணி (வீணே கடத்திடாது) இன்பந் துய்க்க அருங் கல்விகளையும், கலைகளையும் கற்றுச் சிறந்த வல்லுனர்களாகி, புகழொடுவாழ வகைதேட வேண்டும்.

அறிவுக்கு எப்படி இலக்கிய ரஸனைகள் அவசியமோ அதுபோல், பிழைப்புக்கு வழிவகுத்துக் கொள்ளக் கைத்தொழில் கல்வியும் ஓர் அம்சம் ஆகும்!

எவரும் எல்லாக்கல்விகளையும் கற்றுக்கொள்வது மிகமிக நல்லது. ஒன்றிலின்றேல் ஒன்றில் கிடைக்கும் பிழைப்பு.

சிலர் கல்வி வாசனையே இல்லாக் கசடர்களாக இருக்கின்றனர்-மற்றும் சிலர் அந்நிய நாட்டுப்பாஷையில் மட்டும் தேர்வுபெற்று, பட்டம் பதவியை யெல்லாம் ஏற்கிறார்கள். பிரமாத சோபையுடன் திகழ்கிறார்கள். இன்னுஞ் சிலர் ஒருமொழியில் மட்டும் தேர்ந்த அறிவுபெற்று, மற்றுமுள்ள முக்கியமாகத் தேவையான உலகபாஷை முதலிய சிலவற்றை அறியாதிருக்கின்றனர். அல்லது; உலகபாஷை சிறிது தெரிந்தவர்களாகவும் இருப்பது சரியேயல்ல...வழக்குள்ள பாஷையிலும்,...மற்றுமுள்ள மொழிகளிலும்,...அன்போடு இன்னும் பலகலைகளிலும் (தொழில்) ஆர்வமுற்றுப் படித்து அறிவுத்திறன் கொண்டிருந்தால் ... அதைவிட வேறெது வேண்டியது அவன் வாழ்க்கையிலே?...

இந்தக்காலத்திலே!... காந்தீய சகாப்தத்திலே...கல்விமுறை மேலும் சீர்பாடடையும் இப்பொன்னாட்டிலே ...ஒவ்வொருவரும் தொழிற்கல்வி முதலியவற்றிலும் ஏட்டுக்கல்வியிலே ...பல மொழிகளிலும் நன்கு கற்றுத் தெளிந்த வல்லவனாதல்வேண்டும்.

'சோம்பித்திரிபவர் வாழ்வில் நிதம் சூழ்ந்திடும் துயர்ச்சுடரே!' ஆதலால் சோம்பலை யகற்றி அச்சமின்றி இச்சைவாழ்வு கொள்ள எவையும் கற்றுணர்தல் வேண்டும்.

'வறுமைப் பிணியொழிப்போம் வளம்படத் தானுழைப்போம்' என்று மார்தட்டி வீறகொண்டெழ வேண்டும்.

'சிறுமைத்தனம் நீக்கிச் சிறந்த தொண்டாற்றுவோம்'! என்று இடையறாத ஊக்கங்கொண்டு வேகமாகச் செல்லவேண்டும். அப்பொழுதுதான் நாடும் பொன்னாடாகும்! நாமும் இன்னலகற்றி இன்பமுடன் வாழலாம்!

## கல்வியின்றேல்

இம்மேன்மைதங்கிய கல்வியின்றேல் அவர்களது வாழ்க்கை 'பூமியிலே மிதிபடும். தூசியினைப்போல்' வாழ வகைதெரியாது தவித்து, இன்னல் பலபெற்று, இறக்கவேண்டி இறுதிவழி இழுத்துச்செல்லுகின்றது.

கல்லாத ஒருவனை யாராவது நோக்கினாலும் அவன் தன் தலையைத் தூக்காது 'ஆளைக்கண்ட ஆமையைப்போல்' கீழே சுருதி தாழ்த்திக் கொண்டு அவமானத்துடன் செல்வதைக் கண்டால்...அந்தோ பரிதாபகரமாகும் என்பதையும் கூறவேண்டுமா?... கூசுகிறதே.

'பகலில் ஆந்தை பார்க்காது இரவில் பதுங்கும் காகம், பார்க்காது! படிப்பேயில்லாப் பதரோவென்றால் பகலிலுமிரவிலும் பாரானன்றோ?...

உருவ மைப்பும்<br>
உடல் கட்டும்<br>
உயர் குலமும்

ஊடு செல்வமும் இருந்தாலும் கல்வியின்றேல் நல்ல மணமில்லா மலர் போன்று மதிப்பாரல்லாதவராவர். 'வெண்மதியில்லா விண்ணைப்போலும் கோபமில்லாக் கோமகன் போலும் மக்களில்லா வாழ்வினைப்போலும் தந்தியில்லா வீணைப் போலவும் தாமரை பூவாத் தடாகம்போலும் காவலில்லாப் பயிர்கள்போலும் கரையேயில்லா ஏரியைப்போலும் அச்சாணியில்லா வண்டிபோலும் செல்வம் இல்லா ஏழையர்போலும் கட்டுரை வாராக் கவிஞன் போலும்' ...ஆகும் கல்வியறிவில்லா வாழ்வு!

இன்னுமொன்று...<br>
'கல்லாத மாந்தரையுங்<br>
கடுங்கோபத் துரைகளையும்



ஒருநாளும் நம்பொணாது...<br>
என்கிறார். ஏனெனில்; கல்லாதவனிடம் சென்று நாம் ஏதும் வாய்கொடுத்துவிட்டால் அவன் ஏடாக்கான பதிலைத்தான் நமக்கு அளிப்பான் அல்லவா? நல்லுரை அவன் அழகியவாயினூடே ஊராது இறுதியிலே நான்காவது உபாயம் (தண்டோபயம் என வடமொழியாளர்கள் கூறுவார்களே) செய்வதற்கு அடிகோலுவான்...அதனால்தான் அவர்களை நம்பக்கூடாது.

'கல்லான் கல்லுக்கொப்பானவனே' தொழில் கல்வியையோ, படிப்புக் கல்வியையோ தெரிந்தவனாதல்வேண்டும் இந்நாட்களிலே...அவ்விதமிருந்தால் அவரை அநேகர் வரவேற்குமிக்காலத்தே பேசாதிருந்தால் பிழைப்பேது'?

'கற்றவரே யெல்லாமிங் குற்றநாடு'<br>
'ஏனுந் தரும் எழுத்தறிவு'

உருவழகை மனிதனுக் கூட்டுவதுங்கல்வி!...ஒருவருமே காணாதபெட்டியினுள்ள கல்வி ..குருவுக்கும் மேலான குருவாமிந்தக் கல்வி.. பெரும் புகழின்பத்தைச் சேர்க்குமிந்தக்கல்வி... ஒருவருமேயில்லாத வேற்று நாட்டிலே...ஒருவனுக்கு உற்றவனும், மற்றவனுமாயுகக்கு மிந்தக் கல்வி !!

உவகை செய்யும் கல்வி- நம்<br>
ஊடுவந்த கல்வி<br>
உலகையாளும் மன்னன்- யாரும்<br>
உயர்வாய்ப் போற்றுங் கல்வி!

...இந்த...

அழகான கல்வி யில்லான்<br>
அரைமனிதன் ஆவான்-இன்னும்<br>
அவனியிலே பிறந்து மவன்<br>
அதிகபாரமாவனே !! ...

ஆகையால் ;

கல்லாக் கசடர்களைப் போலில்லாது ஒவ்வொருவரும் கற்றுணர்ந்த கனவான்களாகத் திகழ்ந்து கண்யமாக வாழ்க்கையைக் கழிக்கவேண்டும்

பாரதப் பெருஞ்செல்வியின் பொன்னாட்டையும் உயர்த்தி, வறுமை வாயினின்றும் உயிர் தப்பச்செய்து, வளமை நாடாக்கி வண்ணமுடன் இப்பாடலை எங்கெங்கும் ஒலிக்கச் செய்வோமாக !!

(1)

" கல்விசிறந்த தமிழ் நாடு-புகழ்க்<br>
கம்பன்பிறந்த தமிழ் நாடு-நல்ல<br>
பல்விதமாயின சாத்திரத்தின்-மணம்<br>
பாரெங்கும் வீசுந் தமிழ் நாடு !

(2)

வள்ளுவன் தன்னை<br>
உலகினுக்கே-தந்து<br>
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு !—<br>
—நெஞ்சை<br>
அள்ளுசிலப்பதிகாரமென்றோர்- மணி<br>
யாரம் படைத்த தமிழ் நாடு !

(3)

கலைவளர்ப்போம்- நல்ல<br>
காரியங்கள் செய்வோம்<br>
காந்தி வழி சென்றே- நல்<br>
சாந்தியு மேற்போம் !<br>
பயிர் வளத்தால்- எங்கும்<br>
பஞ்சமும் வீழ்த்த<br>
பாரதம் வாழ் மக்கள்<br>
பாங்குடன் சேர்வோம் !!

(4)

எங்கள் நன்னுடனச்<br>
சங்கமுழங்குவோம்<br>
என்றுமே உண்மை நல்<br>
ஒற்றுமை கொள்வோம் !<br>
எங்களன்னை கழல்<br>
ஏற்று வணங்கியே<br>
எங்குமே ஜய நாதம்<br>
எட்டிடச் செய்வோம் !!

# உபநிஷதச் சிறு கதைகள்

(சாந்தோக்கிய உபநிஷதம்)

"ஆறு"

## அஸுரனும் தேவனும் ஆன்மாவை அறியச் சென்ற வகை.

"தீதற்றதும், மூப்பற்றதும், இறப்பு இயன்றியதும், துன்பமற்றதும், பசி தாகமின்றியதும், உண்மையான இச்சையும் ஸங்கற்பமுங் கொண்ட ஆன்மாவைத் தேடியறியவேண்டும். அவ்வாறு அறிந்தவன் எல்லா உலகங்களையும் விருப்பங்களையும் அடைகின்றான்" என்று ஒரு சமயம் பிரஜாபதி என்ற ரிஷி கூறினார்.

தேவர்களும் அஸுரர்களும் இதனைச் செவியுற்றனர். "எல்லா உலகங்களையும் விருப்பங்களையும் அடையக்கூடிய ஆன்மாவை நாம் தேடிக்காண்போம்" எனக்கூறிக்கொண்டனர். தேவர்களில் தேவர்கோனாகிய இந்திரனும்,, அஸுரர்களில் அவர்கள் தலைவன் விரோசனனும் ஒருவர்க்கொருவர் தெரியாமல் பிரஜாபதியிடஞ்சென்று 32 ஆண்டுகள் மறைவழியொழுக்க மெனும் பிரம்மசரியத்தை மேற் கொண்டு இருந்துவந்தனர். "எதற்காக இங்கு இருந்துவருகிறீர்கள்" என்று பிரஜாபதி ஒருநாள் கேட்கவே, "தாங்கள் திருவாய் மலர்ந்தருளிய தீதற்ற ஆன்மாவை அறிய விரும்புகின்றோம்" என்றனர்.

அப்பொழுது பிரஜாபதி "கண்ணில் காணப்படும் புருஷனே ஆன்மா. இந்த ஆன்மா அழிவற்றது, அச்சமின்றியது. இதுவே பிரம்மம்" என்றார். கண்வழியே காட்சிகளைக் காண்போனை ஆன்மாவென்று பிரஜாபதி கூற, இவர்கள் உடலின் பிரதிபிம்பத்தை(நிழலை)க் கூறுவதாகக்கொண்டு, "ஆன்மா நீரில் காணப்படுவதா,அல்லது கண்ணாடியில் காணப்படுவதா?" என்று வினவினர். அதற்கு, அவர்களே ஆய்ந்தறிந்து கொள்ளட்டுமெனக் கொண்டு "இவை எல்லாவற்றுள்ளும் காணப்படுவோன் அவனே; ஜலமுள்ள பாத்திரத்துள் நோக்கி, அங்கு காணப்படுவதை அறியுங்கள். அப்பொழுதும் ஆன்மாவை அறியாவிடில் பிறகுவினவுங்கள்" என்றார். இருவரும், "நாங்கள் எங்கள் வடிவத்தைக் கண்டோம். கால் நகம்முதல் தலைமயிர்வரை எல்லாவற்றையும் உள்ளபடி காண்கின்றோம்" என்றனர்.

பிரஜாபதி அவர்களை நோக்கி, "மயிர் களைந்து, நல்லுடையும் ஆபரணமும் அணிந்து முன்போல் நோக்கி, அங்கு காண்பதைக் காலையிற்கூறுவீர்" என்றார். . மறுநாட்காலையில் அவர்கள், "எங்ஙனம் நன்கு அலங்கரித்து, நல்லுடை தரித்துத் தூய்மையுடன் விளங்கினோமோ அவ்வாறே கண்டோம்" என்றனர். "அதுவே ஆன்மா, அச்சமற்றது, அழிவற்றது, பிரம்மம்" என்று பிரஜாபதி கூறினார். இவ்வாறு கூறியதைக் கேட்டதும் உள்ளந்தெளிந்தவர்கள்போல் காணப்பட்ட இருவரும் இல்லம் நோக்கிச் செல்லத் தொடங்கினர். அவர்கள் போவதைக் கண்டு பிரஜாபதி, "ஆன்மாவைக் கண்டறியாமல் இவர்கள் இல்லமேகுகின்றனர். எவன் இதனையே (உண்மைப் பொருளின் சாயலை) உண்மையில் ஆன்மாவெனக் கொள்வனோ அவன் உண்மைக்குப் புறம்பானவன். அவன் அவமதிப்புற்று அழிவை அடைவான்." என்று கூறினார்.



உள்ளத் தெளிவை யடைந்ததாகக் கருதிக்கொண்டு சென்ற விரோசனன் அஸுரர்களிடம் சென்று ஆன்மாவைப் பற்றித் தான் அறிந்து வந்ததை "உடலெனும் ஆன்மாவைப் பெருமைப் படுத்தவேண்டும். அது வழிபடுதற்குஉரியது.இதனைநன்கு உபசரித்தலால் இவ்வுலகையும், அவ்வுலகையும் இரண்டையும் ஒருவன் அடைவான்" என்று கூறினான். அவர்களும் அவ்வாறே பின்பற்றினர். ஆகலின் இன்றும், நம்பிக்கையின்றி, ஈகையில்லாது வேள்வி செய்யாது இருப்போனை "இவன் அஸுரர்களைச் சேர்ந்தவன்; அவர்களது கொள்கையைத் தழுவி நிற்போன்" என்கின்றனர். அவர்கள் உயிர் நீங்கிய உடலை, உணவாலும், ஆடை யாபரணங்களாலும் மேன்மைப்படுத்துகின்றனர். இதனால் அவர்கள் உலகங்களை வென்று விட்டதாகவும் கருதிக்கொள்கின்றனர்.

தேவர் கோனாகிய இந்திரனோ, தேவர்களிடம் செல்வதற்கு முன் சற்று ஆலோசனை செய்ததில் அவனுக்கு ஓர் ஐயம் எழுந்தது. "உடல் அலங்கரிக்கப் பெற்றிருந்த போது அலங்கரிக்கப் பெற்றிருப்பது போன்றும், நல்ல உடைகளைக் கொண்டிருக்கையில் அவ்வாறும், தூயனாக இருந்து காண்கையில் தூயனாகவும் நீரிலும் கண்ணாடியிலும் காணப்படுகிறது. குருடன், முடவன் இவர்கள் அவ்வாறே காணபபடுகின்றனர். உடல் அழிந்து போகுமன்றோ! இதில் ஒருவகை இன்பத்தையும் காணேமே! இது ஆன்மாவாக இருத்தல் பொருந்தாது" என்று பிரஜாபதியிடஞ்சென்று தனது ஐயத்தை வெளியிட்டு அறிவு பெறக் கோரினான்.

உண்மையறிவதற்கான ஐயங்கொண்ட இந்திரனை நோக்கி, 'மீண்டும் விளக்குகின்றேன், மறுபடி 32 ஆண்டுகள் மறைவழி யொழுக்கத்தில் இரு' என்று பிரஜாபதி கூறினார். இந்திரனும் அவ்வாறே இருந்தான். பின்னர், "கனவு நிலையில் பெருமையடைந்து சஞ்சரிக்கின்றவனே ஆன்மா; அழிவற்றவன்" என்று பிரஜாபதி கூறினார். உடனே உள்ளத் தெளிவு பெற்று விட்டதாகக் கருதிக் கொண்டு சென்றுவிட்டான். தேவர்களை அடைவதற்கு முன்பே மீண்டும் அவன் மனதில் ஓர் ஐயம் எழுந்தது. "உடல் குருடு முடம் போன்ற குறைபட்டிருப்பினும் கனவில் அவ்வாறு காணப்படுவதில்லை. என்றாலும், பிறரால் தாக்கப்படுவது போன்றும், துரத்தப்படுவது போன்றும், இறந்தது போன்றும், அழுவது போன்றுமான பலவகைத் துன்பங்களுக்கு உட்பட்டுள்ளது. இதிலும் இன்பத்தைக் காண்பதற்கில்லை. ஆகவே ஆன்மா என்பது பொருந்தாது" என்று உணர்ந்து மீண்டும் பிரஜாபதியை யடைந்து தனது ஐயத்தைத் தெரிவித்தான். அவர், "இன்னும் 32 ஆண்டுகள் மறையொழுக்க வழியில் இரு. மறுபடியும் விளக்குகிறேன்" என்று கூறினார். இந்திரனும் அவ்வாறே இருந்தான்.

பின்பு பிரஜாபதி, "ஸுஷுப்தி யெனும் நல்லுறக்க நிலையில் கனவு காணமல் சாந்தனாகத் தூங்கு கின்றவனே ஆன்மா" என்றுரைத்தார். இதனைச் செவியுற்றதும் உண்மையை அறிந்துவிட்டதாக கருதி வீடு நோக்கிப் புறப்பட்டான். தேவர்களிடம் செல்வதற்கு முன் இந்திரன், "ஸுஷுப்தி நிலையில் தான் இன்னானென்று கூட அறிவதில்லை. மற்றவைகளைப பற்றிய உணர்வுமில்லை. அழிவடைந்தவன் போன்று காணப்படும் நிலையில் இன்பம் எதுவும் இருப்பதாகக் காணேம். ஆன்மா ஒளியும் உணர்வுமுள்ளது என்கின்றனர். ஆகவே இதுவும் உண்மை நிலையல்ல"

என்று அறிந்து, பிரஜாபதியிடஞ் சென்று தனக்கு எழுந்த ஐயத்தை வெளியிட்டான். அப்பொழுது பிரஜாபதி, "இன்னும் ஐந்தாண்டுகள் இங்கு இரு ஆன்மாவை நன்கு விளக்குகிறேன்" என்றார். இந்திரனும் அவ்வாறே ஐந்தாண்டுகள் மறை யொழுக்க நெறியில் இருந்து வந்தான். இவ்விதம் நூற்றோராண்டுகள் கழிந்தன. இந்திரனுடைய விடாமுயற்சியையும், உண்மையறிய வேண்டுமென்ற ஊக்கமிகுந்த ஆர்வத்தையும், ஆய்ந்தறியும் பண்பினையுங்கண்டு மனமகிழ்ந்து பிரஜாபதி பின்வருமாறு உபதேசித்தார் :—

"இந்திரனே! இவ்வுடல் அழிவுற்றது. சாவினால் தாக்கப்படுவது. இறப்பு இன்றிய, உடலற்ற ஆன்மாவின் இருப்பிடம் இது. உடலுடன் கூடிய இவன் விருப்பு வெறுப்புகளால் தாக்கப்படுவதாக அறியப்படுகின்றான். இந்நிலையில் இவற்றினின்று விடுதலை இல்லை. ஆயினும் உடலின்றிய உண்மைப் பொருளை விருப்பு வெறுப்புகள் பற்றா. காற்று, மேகம், மின்னல் முதலியன உடலின்றி, உருவும் வடிவுமில்லாத ஆகாசத்தில் அடங்கியிருப்பினும், சிறிதுகாலம் உருவும் வடிவும் பெற்றுத் தமது காலமும் காரியமும் முடிந்தவுடன் மீண்டும் ஆகாசத்தில் ஒருங்கி விடுகின்றன. அஃதேபோன்று, உள்ளத் தெளிவு பெற்றவன், உடலினின்று வெளிப்பட்டு பரஞ்சோதியை யடைந்து, தனது உருவத்துடன் ஸச்சிதானந்தத்தில் விளங்குகின்றான். இவனே உத்தம புருஷன். வாகனங்களுடனும், உறவினருடனும், உற்றாருடனும், கூடிக் களித்து, மகிழ்ந்து, பிறந்த உடலை பற்றி நினைக்காமல் எங்கும் உலவுகின்றான். வண்டியில் பூட்டிய குதிரை போன்று உடலில் பிராணன் இணைக்கப் பட்டுள்ளது. கண், காது, மூக்கு மனம் முதலியன அந்த ஆன்மா கண்டு, கேட்டு, முகர்ந்து, கருதுவதற்காக அமைந்துள்ள கருவிகள். இந்த ஆன்மாவால் இந்த ஆன்மாவில் எல்லாம் இருப்புக் கொண்டுள."

இந்த உபதேசத்தை இந்திரன் பிரஜாபதியிடமிருந்து பெற்று உண்மையுணர்ந்தவனாகி, தேவர்களிடஞ் சென்று அவர்களுக்கும் கூறினான். தேவர்கள் இந்த ஆன்மாவை உபாஸிக்கின்றனர். ஆகையால் எல்லா உலகங்களையும் விருப்பங்களையும் அவர்கள் அடைகின்றனர். எவர்கள் இந்த ஆன்மாவை அறிந்து உணர்கின்றனரோ அவர்களும் எல்லா வுலகங்களையும் விருப்பங்களையும் அடைகின்றனர்.

"இருண்ட இதய குகையிலுள்ள பிரம்மத்தினின்று பல நிறங்களுடன் பரந்து விளங்கும் உலகை அடைகின்றேன். பரந்த உலகினின்று இதய குகையிலிலுள்ள பிரம்மத்தை யடைகின்றேன். குதிரை உரோமங்களைச் சிலிர்த்து அயர்வையும் புழுதியையும் போக்கிக் கொள்வது போன்று தீவினைகளினின்று விலகி, இராகுவெனும் (இருள்) மறைப்பினின்று சந்திரன் விடுபடுவது போன்று, சரீரத்தை விடுத்துச் செய்வன செய்து, செயல் நீங்கிய பிரம்மலோகத்தை அடைகின்றேன்."

"அருவாகிய ஆகாசம் பெயரையும் உருவையுமுடைய உலகை வெளிப்படுத்துகின்றது. எதனுள் இவையாவும் ஒடுங்குமோ, அதுவே பிரம்மம், அமுதம், ஆன்மா. அந்த லோகத்தை நான் அடைகின்றேன். அந்தணர் முதலாகவுள்ள மூவருணத்தவரின் பெருமையாக நான் ஆவேன். பெருமையின் பெருமையாக நான் ஆவேன். நிலையற்ற பிறவியைத் தரும் கருவை ஒருக்காலும் அடையாதிருப்பேனாக."



# பாசமே நித்தம் விசுமே!

(எஸ். எஸ். ராகவன் அரசர் உயர்நிலைப் பள்ளி, சிவகங்கை)

சொல்வதைச் சொல்லிவிட்டால்—இந்நிலை
தீருமோ புண்ணும் ஆருமோ?
சொல்லவே சொல்லிவிட்டால்—நெஞ்சலை
பாயுமோ? இன்னும் தீயுமோ!

2

சொன்னதைச் சொன்னபின் போமோ—உள்ளுணர்
தேறுமோ? பின்னும் மாறுமோ?
சொல்வதைச் செட்டுடனே—சொன்னால்
சோகமே விட்டுப் போகுமே!!

3

சொன்னதைத் திருத்தி விட்டால்—தனிச்
சிறப்போ? நல்ல மதிப்போ?
சொன்னதைத் திருத்தவெண்ண—திருப்பது
சிறப்போ நம்ம மதிப்போ?

4

யோசித்துச் சொல்லாவிட்டால்—என்னவாம்?
வெறுப்போ? தடை விதிப்போ?
யோசிக்கும் அளவின்றேல்—உன் தலைக்
கிறுக்கோ? பணச் செருக்கோ?

5

திண்ணமொன்று வாழ்வினில்—வரும்
மோசமே நன்மை நாசமே!
மண்ணிலொன்றிடு, வாழ்வினிலே—தரும்
பாசமே நித்தம் வீசுமே!!

---

மேற்கூறியவாறு கருதி உறுதி கொள்வதால் அவ்வாறாகி ஆன்மநிலையில் இருக்கச் செய்யுமென்பது நிறைமொழி மாந்தரின் அனுபவ வாக்காகும்.

இந்த பிரம்ம வித்யையை, படைப்புத்தலைவனாகிய பிரம்மன் படைப்புக்குரிய பிரஜாபதியெனும் ரிஷிக்கு உபதேசித்தார். அவர் நீதி வகுத்த மனுவுக்கும், மூனு மற்ற மாந்தருக்கும் உபதேசித்தார். குருகுலத்தில் முறைப்படி மறைவழி யொழுக்கத்திலிருந்து கல்வி பயின்று விடை பெற்றுப் பின்னர் இல்லறம் நடாத்தி, நன்மகவு பெற்று பொறியடக்கங் கொண்டு புலன்களை ஆன்மாவில் நிலைபெறச் செய்து எல்லா உயிர்களிடத்தும் அன்பு பாராட்டி வாழ்நாளைக் கடத்துகின்றவன் பிரம்ம லோகத்தை அடைகின்றான். அவன் மீண்டும் திரும்ப வருவதில்லை. அழியா ஆன்ம நிலையில் இன்புற்றவனாக இலங்குகின்றான். ஆகவே இவ்வழி பின்பற்றி நிற்பது உயர் மானிடப் பிறவியின் உத்தமப் பண்பாகும்.

செங்கற்பட்டு மாவட்ட ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன் 8 வது மாநாடு 11-4-'53-ல் சைதாப்பேட்டையில் நடந்தவரை வரவு செலவு விபரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | திரு சி. பாலசுப்பிரமணியம் கைபதில் | 26 | 0 | 6 | | | |
| 2. | 11-4-'53-ல் திரு ஆதிகேசவன் மூலம் | 66 | 8 | 0 | | | |
| 3. | திரு A. இராதாகிருஷ்ணன் மூலம் | 13 | 0 | 0 | | | |
| 4. | திரு K. G. இராமன் மூலம் | 6 | 8 | 0 | | | |
| 5. | அச்சுச் செலவு | | | | 17 | 0 | [illegible] |
| 6. | அலேச்சல் செலவு | | | | 35 | 3 | [illegible] |
| 7. | கட்டிடம், வேலைக்காரர் மின்சார விளக்கு முதலிய இதரச் செலவுகள் | | | | 15 | 0 | 0 |
| 8. | தேநீர் உபசரிப்புச் செலவு | | | | 25 | 7 | 0 |
| 9. | பூமாலை, சோடா முதலியன | | | | 8 | 12 | 6 |
| 10. | அஞ்சல் | | | | 8 | 11 | 0 |
| 11. | சாத்தல்வார் | | | | 1 | 15 | [illegible] |
| | ஆக மொத்த வரவு செலவு ரூ... | 112 | 0 | 6 | 112 | 0 | 6 |

R. Adikesava Naicker, கணக்கர்

வரவு செலவு கணக்குகள் யாவும் 26-10-53ல் தணிக்கை செய்யப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

கைபதில் தொகையை பின்னிட்டு வசூல் செய்து ஈடு செய்துக் கொள்ள சிபார்சு செய்யப்படுகிறது.

G. Natarajan, K Govindaswamy. தணிக்கையாளர்கள்.

## செங்கற்பட்டு ஜில்லா கழக ஆசிரியர்கள் வெயிட்டேஜ் விஷயமாக அனுப்பவேண்டிய மனு பாரம்

(1947ல் சம்பள உயர்வு கொடுத்தபோது சர்வீஸான ஆசிரியர்களுக்கு 4 ஆண்டுக்கு ஒரு வெயிட்டேஜ் வீதம் கொடுத்தபோது, விடுபட்டுப்போன ஊழியத்தைக் கணக்கிட்டு சம்பள உயர்வு கொடுக்க மனு பாரத்தை பூர்த்தி செய்து திரு S. V. துரைசாமி முதலியார் கழக கல்வி அதிகாரி பனகல் கட்டிடம், சைதாப்பேட்டை 15, என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். நமக்கும் தகவல் தெரிவிக்கவும்.)

C. பாலசுப்பிரமணியம், தலைவர், செ. ஜி. ஆ. ஆ. யூனியன்.

1. ஆசிரியர் பெயர். முகவரி. யோக்கியதாம்ஸம்
2. உத்தியோகத்தில் அமர்ந்த தேதி சம்பளம்
3. காயமாக்கின உத்திரவின் எண்ணும் தேதியும் சேமிப்பு எண்
4. ஊழியத்தின் விபரம்

| A | B | C |
|---|---|---|
| பள்ளியின் பெயர் | சம்பளம் | ஊழியத்தின் காலம் |

| D | E |
|---|---|
| எடுத்த லீவின் விபரம் | சம்பளப் பிடிப்பு இருந்தால் தகவல் |

5. 31-12-1946 முடிய ஊழிய காலம் எவ்வளவு?
6. 31-12-1946ல் வாங்கிய சம்பளம் என்ன?
7. 1-1-1947ல் நியமித்த சம்பளம் என்ன?
8. 1-1-1947க்கு முன் உள்ள ஊழியத்தில் 4 வருஷங்களுக்கு ஒரு உயர்வு வீதம் எத்தனை சேரவேண்டும்?
9. எத்தனை கிடைத்துள்ளது?
10. இன்னும் எத்தனை சேரவேண்டும்?
11. ஆசிரியர் கை எழுத்தும் தேதியும்

Edited and Published by A. K. S. Sarma, 87. Acharappan St., Madras.
Printed by Sri A. R. Parthasarathy, at the Social Printers,
393, Mint Street, Madras.

# ஆதாரக்கல்வி

ஆண்டு சந்தா ரூ 3-0-0

தனிப்பிரதி அணா 0-4-0

ஏப்ரல் 1954 கலை 12

## பொருளடக்கம்

பக்கம்
1. புத்தாண்டு செய்தி —தலையங்கம் 1
2. ஆதாரக் கல்வியும் ராமராஜ்யமும் —ஆச்சாரிய வினோபா 3
3. நல்லோர் சேர்க்கையே கல்வி —ஆச்சாரிய வினோபா 6
4. [illegible]ஷதச் சிறு கதைகள் —'ஆசி' 9
5. 21-2-54ல் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கூடத்தில் 9-வது மகாநாட்டன்று அரசியலாருக்கு அனுப்பும் தீர்மானங்கள் :— 10
6. 21-2-54ல் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கூடத்தில் 9-வது மகாநாட்டன்று மேனேஜ்மெண்டாருக்கு அனுப்பும் தீர்மானங்கள் :— 11
7. சென்னை கல்வி விதிகள் திருத்தங்கள் சர்க்கார் விளக்கம் 12
8. [illegible]வே[illegible] —விஜயலக்ஷ்மி பண்டிட் 13
9. சென்னை இந்து சேவா சங்க ஆதாரக்கல்வி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 16
10. சென்னை இந்து சேவா சங்க மாணவிகள் வாசித்தளித்த பிரிவு உபசாரத் தாள் 20
11. ஆரம்ப ஆசிரியர்களின் சம்பள உயர்வு விஷயமாக இவ்வேண்டுகோளை சமர்ப்பிக்கின்றோம் 21
12. சோம்பல் 24
13. அம்பத்தூர் இந்து சேவா சங்க ஆதாரக்கல்வி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆண்டு நிறைவு விழா 26
14. திருவூர் அரசினர் ஆதாரப் பள்ளி வெளியேறும் பிள்ளைகளுக்கு ஆதாரக்கல்வி ஆசிரியர் A.K.S. சர்மா ஆற்றிய சொற்பொழிவு 27
15. தர்மமூர்த்தியான தாசரதி 28
16. ஆதாரக்கல்விப் பயிற்சிக் கலாசாலை சொற்பொழிவு 30
17. ராஜாஜி சர்க்காரின் சாதனைகள் 31

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
APR 1954

## ஆதாரக்கல்வி காரியாலயம்

நெ. 87, ஆச்சாரப்பன் தெருவு,

சென்னை-1.

Registered No. M 5171

சென்னை நகர ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் மகாநாடு மேமோரியல் ஹாலில் 11-4-54 மாலை, ஸ்ரீ எஸ். பி. ஆதித்தன் தலைமையில் நடைபெற்றது.

மகாநாட்டை டாக்டர் P. வரதராஜுலு நாயுடு ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், 14 வயது வரை கல்வி சர்வ மதத்தினருக்கும் பாரபட்சமின்றி கட்டாயமாகவும், இலவசமாகவும் இருக்கவேண்டுமென்று தான் விரும்புவதாகவும் கூறினார். ஆரம்பக்கல்வி விஷயத்தில் அடிக்கடி பரீட்சார்த்தமான நீதியில் திட்டங்களை அமுல் நடத்திப் பார்க்கும் பழக்கத்தைக் கண்டித்தார். புதிய சீர்திருத்தப்பட்ட ஆரம்பக்கல்வித்திட்டம் சென்னை போன்ற நகரில் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டால் இளம் சிறுவர்கள் ரஸ்தாக்களில் திரிய நேரிடுமாதலால் அதிகப்படியாக விபத்துகள் ஏற்படும் என்றும் சுட்டிக்காண்பித்தார். மேலும், அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் தான் கல்விசம்பந்தமான திட்டத்தைப்பற்றிய முடிவுகூற லாயக்கானவர்கள் என்பதையும் விளக்கமாகச் சொன்னார்.

ஸ்ரீ ஆதித்தன் ஆசிரியர்களின் ஊதிய நிலையை உயர்த்தவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினார்.

### தீர்மானங்கள்.

(1) சம்பளக்கமிஷன் சிபார்சுப்படி ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் சம்பளத்தை நிர்ணயிக்கவேண்டுமென்று சர்க்காரை வற்புறுத்துவதாகவும்,

(2) அரசாங்கமே ஆரம்பக்கல்வியை எடுத்துக் கொண்டு நடத்த வேண்டுமென்றும்,

(3) எயிடெட் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கவேண்டுமென்றும்,

(4) புதிய ஆரம்பக்கல்வித் திட்டம் ஆசிரியர்களின் வேலைப் பளுவை அதிகரிப்பதாயிருப்பதாலும், பல ஆசிரியர்கள் வேலையை இழக்கும்படிச் செய்வதாலும், அந்தத் திட்டத்தை ரத்து செய்யும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்வதாகவும்,

(5) தேர்தல்களில் பொதுத் தொகுதிகளிலிருந்து ஆசிரியர்கள் போட்டியிட அனுமதிக்கும்படி சர்க்காரிடம் விண்ணப்பத்துக் கொள்வதாகவும்,

(6) விசாரணையின்றி ஆசிரியர்களின் சர்டிபிகேட்டுகளைக் கல்வி அதிகாரிகள் ரத்து செய்வதற்கான அதிகாரத்தை ரத்து செய்யவேண்டுமென்றும் இன்னும் பிற தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

### ஸ்ரீராமநவமி உத்ஸவம்.

ஆதாரக்கல்வி கலாசாலை சாரதாமண்டபத்தில் 11-4-54-ல், இவ்வைபவம் நடந்தது. சேவா சங்கம் மாணவ இல்லவாசிகளும், ஆசிரியர்களும், ஆதாரக்கல்வி ஆசிரியப் பயிற்சி மாணவிகளும், பஜனைகளை நடத்தினார்கள் ஸ்ரீமதி வித்வான் எ. வெங்கடலக்ஷ்மி அம்மாள் ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியின் கல்யாண குணங்களைப்பற்றிப் பேசி, வாழ்க்கைக்குதவும் பல காரியங்களை எவ்வாறு கடைப்பிடித்து, வழி காட்டியாகஸ்ரீராமபிரான் விளங்கினார் என்பதையும் எடுத்துரைத்தார்கள்.

(அட்டை 4-ல் பார்க்க)

# ஆதாரக்கல்வி

ஆசிரியர்: அ. கி. சு. சர்மா

கல்வி 6 | ஜய, சித்திரை—ஏப்ரல் 1954 | கலை 12

# புத்தாண்டு செய்தி

விஜய என்ற சொற்பொருட் கேற்ப, சென்ற ஆண்டில், அரசியல், கல்வி முதலிய பல துறைகளிலும் வெற்றி தோல்விகள் கலந்த நிகழ்ச்சிகளையே கண்டோம்.

புத்தாண்டு பிறந்துவிட்டது. இந்த ஆண்டு ஜய. இச் சொல் வெற்றியையே குறிக்கும். ஆனால், பல சங்கடங்களுக்கு இடையே ஊடாடித்தான் வெற்றியை அடைய நேரிடும்.

ராஜாங்க நடப்பில், பரஸ்பர சச்சரவுகளும், த்வேஷமும் அடக்கியாளும் திறமையும் அதிகப் படக்கூடும். உலகில் சமாதானம் ஓங்கும். யுத்தக் கிளர்ச்சிகள் ஏற்பட மார்க்கமில்லை. நல்ல விளைவுகள் ஏற்பட்டு, பண்டங்களின் விலை இறங்க வழியுண்டு. விரவினாற்போல் நல்ல மழையும் பெய்யும். நாட்டிற்கு க்ஷேமம் ஏற்படும். கலைகளுக்கு விருத்திக் குறைவும், பயிர்களுக்குப் பூச்சி புழுக்களால் சேதமும், வித்தியா விஷயமாய் பல கோளாறுகளும் ஏற்பட இடமுண்டு. ஆனால், திறமையும், நேர்மையும், ஒழுக்கமும், தெய்வபக்தியும் உள்ள நபர்கள் எத்துறையில் ஈடுபட்டாலும் வெற்றியே காண்பார்கள். எனவே, நாட்டின் நலனுக்கும், உலக சமாதானத்துக்கும் உழைக்கும் பலரக தொண்டர்கள் இத்தகைய பண்புகளில் ஈடுபட்டு நலனைக் காண்பார்களாக.

புதிய ஆண்டோடு நம் ராஜ்யத்தில் ஒரு புதிய மந்திரி சபையும் ஸ்ரீ காமராஜ் தலைமையில் பிறந்திருக்கிறது. முதன் மந்திரியாக வந்திருப்பவர் மனித இயல்பை அறிந்தவர். கட்சி ஸ்தாபனத்தை அடக்கி ஆள்வதற்குரிய சக்தி வாய்ந்தவர். நிர்வாகத்துறையிலும் இப்பொழுது பொறுப்பை ஏற்றுக்கொண்டு விட்டார். ஏற்கனவே, பிரிந்து தனிக்கட்சிகளாக இயங்கிவந்த இரண்டு கட்சிகளை மீண்டும் காங்கிரஸுடன் இணைத்துக்கொண்டார். ராஜாஜி மந்திரி சபையில் ஸ்தானம் வகித்தவர்களில் ஐவரையும் புதிய மந்திரிசபையில் சேர்த்துக்கொண்டார். தான் ரேடியோ மூலம் தெரிவித்த புத்தாண்டு செய்தியில், மக்கள் ஆதரவை நம்பியே பொறுப்பை ஏற்றுக் கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். மந்திரிசபை நியமிப்பதிலும், யூனியன் சர்க்காரைக் கலந்து கொண்டுதான் செய்தார். இத்த

கைய கூட்டுணர்ச்சியுடனும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடனும், உருவாகிய மந்திரிசபை, புதியதாயினும், காங்கிரஸ் வழியைத் தழுவியதே. காங்கிரஸ் லட்சியங்களில் ஊறிய ஸ்ரீ காமராஜ், நிர்வாகத்தின் நேர்மையில் கண்ணும் கருத்துமாயிருந்து சர்வோதய லட்சியப்பாதையை விட்டு விலகா வண்ணம் கடவுள் அருள் புரிவாராக.

## உடனே ரத்து செய்க

புத்தகசாலை டைரக்டராக ஒரு அதிகாரியை சர்க்கார் நியமிக்க வேண்டும் என்று புத்தகசாலைச் சட்டம் கூறுகிறது. எனினும் கல்வி இலாகா டைரக்டரே அந்தப் பொறுப்பையும் சேர்த்து வகிக்கும் தற்போதைய ஏற்பாட்டை உடனே ரத்து செய்தாலொழிய, ஸ்தலக் கமிட்டிகள் திறம்பட, துரிதமாக இயங்க இயலாது. எனவே, புத்தகசாலைகளுக்கென ஒரு முழுநேர டைரக்டரை நியமனம் செய்வதில் சர்க்கார் இனியும் தாமதம் செய்யக்கூடாது.

மேலும், ஸ்தல புத்தகசாலைக் கமிட்டிகள் பலவழிகளில் உருவான ஊழியம புரியவும் சர்க்கார் வேண்டிய வசதி செய்து கொடுக்கவேண்டும்.

புத்தகசாலைச் சட்டப்படி சென்ற சில வருஷங்களாக ஸ்தல ஸ்தாபனங்கள் மக்களிடமிருந்து வசூலித்து வருகின்ற கணிசமான தொகை தேங்கிக்கிடக்கிறது. தேவையான பணமிருந்தும் அது முறைப்படி உபயோகப்படாமலிருந்து வருவதற்கு நிர்வாகத்துறையிலுள்ள முட்டுக்கட்டையே. அதைத் தகர்த்து எறியவே, மேற்சொன்ன ஏற்பாட்டை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவர, புது சர்க்காரை வற்புறுத்துகிறோம்.

... ... ...

## சர்க்கார் தலையீடு அதிகம்

சென்னை ஆசிரியர் சமாஜம் **59** வது மகாநாடு **10-4-54**-ல் கூடிற்று செகண்டரி கல்வி கமிஷன் சிபார்சுகளை சீக்கிரம் அமுல் நடத்துமாறு ராஜ்ய யூனியன் சர்க்கார்களை கேட்டுக்கொள்வதாக ஒரு தீர்மானத்தை அம்மகாநாடு நிறைவேற்றியது. செகண்டரி கல்வி முறையை தீவிரமாக பூரணமாக திருத்தியமைக்கா விட்டால் ஆதாரக்கல்வி போதனைக்கு ஏற்ற சரியான தரமுள்ள ஆசிரியர்கள் கிடைக்கமாட்டார்கள். ஆகவே, கமிஷன் சிபார்சுகளை தாமதமின்றி யூனியன், ராஜ்ய சர்க்கார்கள் அமுல் நடத்தவேண்டும் சமீப காலத்தில் தனிப்பட்ட கல்வி ஸ்தாபனங்களில் சர்க்கார் தலையீடு அதிகமாகிவிட்டது அனாவசிய சந்தேகமும் கொள்கின்றனர். இதை விடுத்து சுதந்திரமளித்து, சுயமுயற்சிக்கு ஊக்கமளித்தால், அவை என்றும் ஒத்துழைக்கும் என்பதில் ஐயமில்லை.



# ஆதாரக் கல்வியும் ராமராஜ்யமும் — ஆச்சார்ய வினோபா

(மொழிபெயர்ப்பு : பண்டிட் ஜி. சுப்பிரமணியம்)

*இது, சென்ற 1953 ஆம் நவம்பர் மீ அஸ்ஸாமில் நடந்த ஆதாரக் கல்வி மகா நாட்டிற்கு வினோபாஜி அனுப்பிய செய்தியின் மொழிபெயர்ப்பு. ஆதாரக்கல்வியின் அடிப்படைத் தத்துவத்தை விளக்கி, அதை அரைகுறையாக அனுஷ்டிப்பதில் உள்ள ஆபத்துக்களையும் வினோபாஜி இங்கு விளக்குவது ஆதாரக்கல்வித் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் சிந்தனைக்குரியதாகும்.*

## பாபுஜியின் ராமராஜ்யத்தின் உருவம்

மகாத்மா காந்தி 1937-ம் ஆண்டு, அதாவது சுதந்திரம் அடைவதற்குப் பத்து வருஷங்களுக்கு முன்னதாகவே, ஆதாரக்கல்வியின் கருத்தை நாட்டிற்குச் சமர்ப்பித்தார். சுயராஜ்யம் என்றால், அன்னியர் ஆட்சி அகல வேண்டும் என்று மட்டும் காந்திஜி கருதவில்லை. ஒரு புதிய சமூகம் ஏற்பட வேண்டுமென்றும், அதில் சுரண்டல் இருக்கக்கூடாது என்றும், அதில் மத்திய ஆட்சி குறைந்தபட்ச அளவில் இருக்க வேண்டுமென்றும், அதில் ஒவ்வொரு மனிதனுக்கும் தன் மலர்ச்சிக்கு முழு வாய்ப்புக்களும் கிடைக்க வேண்டும் என்றும், அப்பேர்ப்பட்ட ஒரு சமுதாயத்தை அவர் சுயராஜ்யம் என்றும் கருதினார். சுயராஜ்யமென்றால் அதில் ஒவ்வொருவனுக்கும் தன்னுடைய ராஜ்யம் என்ற உணர்ச்சி ஏற்படவேண்டும். இதையே அவர் ராமராஜ்யம் என்றும் சொன்னார்.

## புதிய கல்விக்கும் பழைய கல்விக்கும் வித்தியாசம்

"நயீ தாலிம்" என்றால் புதிய மதிப்புகளை ஏற்படுத்துவது என்றாகும். பழைய கல்வி, திருட்டைப் பாவம் என்று கருதிற்று; நயீ தாலிம் திருட்டை மட்டும் பாவம் என்று கருதாமல் தேவைக்கு அதிகமாகச் சேர்த்து வைப்பதையும் பாவம் எனக் கருதுகிறது. பழைய கல்வி உடலுழைப்பின் மதிப்பையும் அறிவின் மதிப்பையும் பிரித்துக் கூறுகிறது; ஆதாரக்கல்வி இவ்விரண்டின் மதிப்பையும் சமமாக மதிப்பதுடன், இவ்விரண்டையும் ஒரு முகப்படுத்துகிறது; பிரிக்கமுடியாமல் செய்கிறது. பழைய கல்வி பட்டத்திற்கு மதிப்புக் கொடுக்கிறது; ஆதாரக்கல்வி பட்டத்தைச் சமத்துவத்தின் பணியாளாகக் கருதுகிறது. பழைய கல்வி லக்ஷ்மி, சக்தி, சரஸ்வதி மூவரையும் தனித் தனி தேவதையின் உருவங்களாகப் பூஜிக்கிறது. ஆதாரக்கல்வி மனிதத் தன்மையைப் பூஜிப்பதுடன் இம்மூவரையும் மக்களின் சேவைக்குச் சாதனமாகக் கருதுகிறது.

## "சேவை" யின் ஊழல்

சுயராஜ்யமென்றால் ஏதோ, ஆட்சியை மாற்றுவதென்பது அர்த்தம் இல்லை; ஆனால் ஆட்சியை அகற்றி அதற்குப் பதிலாகச் சேவையை நிலைநாட்டுவது என்பதாகும். தற்போது ஒரு சிலர் இவ்விரண்டையும் சேர்த்துவைக்கப் பார்க்கிறார்கள். "சேவை செய்ய ஆட்சிதேவை என்பது நம் லட்சியம்" என்கிறார்கள் தலைவர்கள். "ஆட்சி வேண்டுமானால் சேவை செய்யவேண்டும் போல் இருக்கிறது" என்று சொல்லுகிறார்கள் சீடர்கள். தலைவர்கள் கூறுவதைச் சீடர்கள் இம்மாதிரி விக்யானம் செய்கிறார்

கள். இதன் பயனாக இன்று நாட்டின் எல்லா அரசியல் கட்சிகளும் ஆட்சியின் மோகத்தில் வீழ்ந்து சேவையைப் பாரத சேவா சமாஜத்திடம் ஒப்படைத்துவிட்டார்கள்!

## ஆதாரக் கல்வியின் புதிய மதிப்பு

சுயராஜ்யத்தின் உண்மையான பொருளை நாம் உணர்ந்தோம் என்றால் பழைய ஆட்சி முறிந்தவுடன் பழைய முறைக் கல்வியும் முறிந்திருக்கவேண்டும். ஆனால் புதிய ஆட்சியில் பழையகல்விநடைபெறுகிறது. வேலையில்லாத்திண்டாட்டம் பெருகுகிறதென்றும், அதன் காரணமாக மாணவர்கள் கட்டுப்பாடு இல்லாமல் போகிறார்களென்றும் தெரிந்தபின் தலைவர்கள் ஆதாரக்கல்வியின் பக்கம் கவனம் செலுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதும், கட்டுப்பாடு ஏற்படுத்துவதும் ஆதாரக் கல்வியின் முக்கியமல்ல. இதன் முக்கிய லாபம் வாழ்க்கையில் புதிய மதிப்பை ஏற்படுத்துவதாகும். இந்தப் புதிய மதிப்பில் காந்த சக்தி யிருக்குமானால் தான் ஆதாரக் கல்வியின் உண்மையான குணங்களைக் காணலாம்.

## அரைகுறை ஆதாரக்கல்வி

இன்று ஆதாரக்கல்வியை அரைகுறையாகஏற்றுக்கொண்டிருப்பதைப் பார்த்தால் இந்த அடிப்படையில் இதை ஏற்றுக்கொள்வது ஆபத்து. பல ஆண்டுகளாக இந்நிலையை நான் பார்த்து வருகிறேன். இன்று ஆதாரக் கல்வி வியாபகமாக நடத்தப்படுகிறதென்றால் அது அந்தந்த மாகாண சர்க்காரின் மூலம் நடைபெறுகிறது. எல்லா இடங்களிலும் "ஆதாரக் கல்வி" என்ற கேலிக்கூத்து நடைபெறுகிறது என்பதுதான் இதன் பலன். ஆதாரக்கல்வி என்பதின் வாழ்க்கைத் தத்துவம் ஒன்று உண்டு. இதை ஏற்றுக்கொள்ளாமல் அரைகுறையாக அனுகிக் கேலிக்கூத்தாக நடத்தினால், இதனால் ஆதாரக்கல்வி கெட்ட பெயர் எடுக்குமே யல்லாமல் வேறு பயனை எதிர்பார்க்க முடியாது. இன்று இதுதான் நடைபெறுகிறது. சர்க்கார் சார்பாக ஆதாரக் கல்வி பரிசீலனை செய்யப்படும் பற்பல ராஜ்யங்களில், பீஹார் மகாணத்தில் நடப்பது ஒருக்கால் சிறந்ததெனக் கூறலாம். ஆனால் அங்கும் நான் கண்ட அளவிலே ஆதாரக் கல்விக்குக் குழி தோண்டப்படுகிறதோ என்ற பயம்தான் உண்டாகிறது.

## சர்வ சேவா சங்கத்தில் தாலிமி சங்கம் கலந்துவிட வேண்டும்.

ஆதாரக்கல்வி என்பதைச் சர்க்கார் பராமரிப்பில் விட்ட நாமே இந்த மோச நிலைக்குக் காரணமாவோம். நாமே அங்கங்கு ஆதாரக்கல்வியின் சிறந்த கேந்திரங்களை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் நாம் நம்முடைய பல ஸ்தாபனங்களைத் தனித்தனியாக நடத்தி வந்தோம். காந்திஜி இவ்விஷயத்தைக் கண்டார்; எல்லா ஸ்தாபனங்களையும் ஐக்கியப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் கொண்டார். ஆனால் அவருடைய சீடர்கள் இது வரையில் இதை ஒப்புக்கொள்ளவில்லை. இப்போது சர்க்கா சங்கம் சர்வ சேவா சங்கத்துடன் இணைந்தபின் அவர்களுக்கு வழி பிறந்தது: ஆதாரக்கல்வி தன் உண்மையான பிரகாசத்தை வெளிப்படுத்த வேண்டுமானால், தன் சுத்தமான உருவத்தைக் காட்டவேண்டுமானால், தாலிமி சங்கமும் சர்வ சேவா சங்கமும் ஐக்கியமாக வேண்டும். அதுவரை சர்வ சேவா சங்கமும் தாலிமி சங்கமும் உயிரற்றவையாகவே இருக்கும்; முண்டமும் தலையும் தனித்தனியாக இருக்



கும் உடலின் நிலைதான் இச்சங்கங்களுக்கும் இருக்கும்.

## சிந்திக்க வேண்டிய பிரச்னை

சுயராஜ்யம் கிடைத்த ஆறு ஆண்டுகளுக்குப் பின் அரைகுறையாகவாவது நயீ தாலிம் முறையை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று இன்று நம் தலைவர்களுக்குத் தோன்றுகிறது. இதில் மட்டும் எனக்கு ஆச்சரியமென்பதில்லை. ஆனால் ஐக்கியத்தைச்சதா பேசிக்கொண்டிருக்கும் நமக்கு இச்சங்கங்களின் ஐக்கியம் தேவை என்பது புலப்படவில்லையே. இதைப் பார்த்தால் மிகமிக ஆச்சரியமாக இருக்கிறது. சர்வோதயக் காரர்கள் காங்கிரஸின் நிர்வாக அதிகாரிகளாகலாம், அரசாங்கத்தின் மந்திரிகளாகலாம். அரசியல் எதிர்க் கட்சிகளும் அமைக்கலாம்; ஆனால் தங்களுக்குள் ஐக்கியம் ஏற்படுத்திக் கொள்ள முடியாது! இந்த நிலைமை சிந்திக்கக்கூடியது தான்.

## ஒற்றுமை மனப்பான்மை தேவை

சர்க்கார் அதிகாரிகள் மூலமாக இது வரை நடந்துவந்த ஆதாரக் கல்வி இரண்டு வகைப்படும். ஒரு வகையில், வேண்டுமென்றே ஆதாரக் கல்வியைக்குறைகூற அது மிக பணச் செலவுள்ளது என்றும், அறிவு குறைவாகவே ஏற்படக்கூடும் என்றும், பெற்றோர் கோபத்தை ஏற்படுத்த வேண்டு மென்றும், மாணவர் அதிருப்தியை வளர்க்க வேண்டுமென்றும் நிரூபிக்கப்படுகிறது. இது நல்ல பொருளை முறையற்ற வகையில் அமுல் நடத்துவது என்பது வெளிப்படை. இதைப் பற்றி அக்கறை கொள்ளவேண்டியதில்லை. மற்றொரு வகை காரியசாத்தியமானது. ஆனால் இம்முறையில் புதிய மதிப்பை ஒப்புக்கொள்ளாமல், பழைய மதிப்புகளை அப்படியே வைத்துக் கொண்டு ஆதாரக் கல்வியிலிருக்கும் சில குணங்களுக்காக அதை ஏற்றுக்கொள்வதாகும். இது காரியசாத்தியமாக இருப்பினும் ஆதாரக் கல்வியின் உண்மை உருவம் இதில் வெளிப்படாது. எனவே புதிய மதிப்புகளின் அடிப்படையில் எவ்வளவு சுத்தமாக ஆராய்ச்சி நடத்தமுடியுமோ அது நடத்தப்படவேண்டுமென்பது அவசியம். இதனால் தான் நயீ தாலிம், சர்வ சேவா சங்கம், பூமிதான யக்ஞம் ஆகியவை மூன்றும் ஒன்றுசேர வழி செய்யவேண்டும்.

நாடு அடிமைப்பட்டிருந்தபோது தேசீயக் கல்வி என்ற லட்சியத்துடன் ஆங்காங்கு சுதந்திரமான வித்யாபீடங்கள் அமைந்தன. இப்போது சுயராஜ்யம் வந்தபின் நம் கலாசாலைகளெல்லாம் தேசிய கலாசாலைகளாகவே ஆகிவிட்டன என்று மக்கள் நினைக்கிறார்கள். இப்படி எண்ணுகிற மாத்திரத்தில் காரியம் பூர்த்தி ஆகிவிடுவதில்லை. மும் முறையில் அவை அமைக்கப்படும் என்றும் நம்புகிறோம். அப்படியிருந்தும் சர்க்கார் சார்பில் தனிப்பட்ட கல்விக்குச் சுதந்திரமான முறைகள் செய்யப்படுவதன் அவசியம் இருந்துவரும். கிராமந்தோறும் அந்தந்த நிலைக்குத் தக்கபடி தனிப்பட்ட கல்வி நிலையங்கள் மக்கள் சார்பில் நடைபெறவேண்டும். இதற்கு மாறாக நாட்டின் கல்விமுறையெல்லாம் சர்க்கார் ஆட்சி முறையிலேயே வந்து விடுமானால் குழந்தைகளின் அறிவும் ஓர் குறிப்பிட்ட அச்சில் வார்த்ததுபோல் ஆகிவிடக்கூடிய அபாயம் ஏற்படும். இந்த நோக்கத்தைக்கொண்டும் ஆதாரக்கல்வி சர்க்காரின் சார்பில்லாத வகையிலே தனிப்பட்ட ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

இது நாமெல்லாம் யோசிக்கவேண்டியது அவசியம்.

(சர்வோதயத்திலிருந்து)

# நல்லோர் சேர்க்கையே கல்வி

ஆச்சாரிய வினோபா

உழைப்பு, சம்பத்து, புத்தி, நிலம், மனம் ஆகிய ஐந்து சக்திகளும் மனிதர்களுக்கு வரப்பிரசாதங்கள். சில வெளியே காணப்படுகின்றன; சில உள்ளுக்குள் அடங்கியிருக்கின்றன. நிலம், பணம் (அதாவது சம்பத்து) வெளியேயும், உழைப்பு கொஞ்சம் வெளியேயும் கொஞ்சம் உள்ளேயும் இருக்கின்றன. சரீரத்தின் மூலம் உழைப்பு உண்டாகிறது. உயிர் சஞ்சாரம் செய்யாவிடில், மனத்தின் ஊக்கம் இல்லாவிடில் சரீரத்தினால் ஒன்றும் நடக்காது. ஆனால் சரீரம் என்பது பஞ்சபூதங்களால் ஆக்கப்பட்டிருக்கிறது. புத்தியும் அன்பும் சரீரத்திற்குள் அடங்கி இருக்கின்றன. உள்ளேயிருக்கும் இந்த இரு சக்திகளும் வெளியேயுள்ள உழைப்பு, சம்பத்து, நிலம் என்ற சக்திகளுக்குள் குறைந்தோ அதிகமாகவோ இருக்கின்றன. புத்தியேயில்லாத மனிதர்கள் இருக்கமாட்டார்கள். பைத்தியங்களிடத்தில்தான் புத்தி இருக்காது. மற்ற மனிதர்களிடம் ஏதோ, குறைந்தோ அதிகமாகவோ இருக்கும்.

புத்தி நன்கு வளர்ச்சியுறுவதற்கு நல்ல மனிதர்களுடைய சேர்க்கை வேண்டும். இதுவே கல்வியாகும். இன்று போதிக்கும் கல்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. பள்ளிகளுக்குச் சென்று புத்தகம் படிப்பது எழுதுவது முதலியன கல்வியே அல்ல என்பது என் அபிப்பிராயம். கல்வி என்பதற்கு முக்கியப் பொருள், நல்ல மனிதர்களின் சேர்க்கையே. சமூகத்தில் ஒவ்வொருவருக்கும் நல்லவர்களின் சேர்க்கை கிடைத்துவிட்டால் அப்பொழுதே சமூகம் முன்னேறிவிடும். ஆகையால் குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை, ஒவ்வொருவரும் நல்லவர்கள் சேர்க்கையின் தத்துவத்தைக் கேட்க வேண்டும், ஞானத்தைச் சர்ச்சை செய்ய அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும். இதுவே கல்வி என்று நான் கூறுகிறேன்.

இவ்விதத் திட்டம் ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கவேண்டும். இது இல்லாவிடில் தேசம் முன்னேற்றமடையாது. இதற்காக ஒரு திட்டம் தயாரித்துக் கொடுத்தேன். சில நாட்கள் அதன்படி நடந்தது. அது நடைபெற்றபொழுது தேசம் முன்னேறி வந்தது. ஆனால் இப்பொழுது மறுபடியும் விழுந்து விட்டது. இன்று கல்வி என்பது கல்லூரிகளுக்குள் அடங்கிவிட்டது; அது கிராமங்களுக்குச் செல்லவில்லை. எவ்விதம் கல்வி புகட்டப்பட வேண்டுமோ அவ்விதம் புகட்டப்படவில்லை. ஏனெனில் கல்வி பணத்தை அடிப்படையாகக்கொண்டு போதிக்கப் படுகிறது. அது எல்லாவிதத்திலும்



பணத்தையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. அது நல்ல மனிதர்களுடன் சேர்க்கைக்கு ஆதாரமாக அமைய முடியாது. அது நம் தேசத்திற்கு உபயோகமற்றதாக அமைந்துவிட்டது. இனி சமீபத்தில் எல்லா இடங்களிலும் கல்லூரிகள் திறக்கப்படப் போவதில்லை.

ஞானவான்கள் சரீர உறுப்புகள் தளராதிருந்தால் ஞானத்தைப் பிரசாரம் செய்யப் பல இடங்களிலும் சுற்றிக்கொண்டேயிருக்கவேண்டும். இது பழைய முறை. இன்று நான் அவ்விதம் சுற்றிக்கொண்டிருக்கிறேன். அதனால் மக்கள் என்னை விரும்பி எனக்கு மரியாதை கொடுக்கிறார்கள். ஏனெனில் ஞானப் பிரசாரம் செய்து சுற்றிக்கொண்டிருக்கும் முறையை இக் காலத்திலும் நான் அனுஷ்டிப்பதால்தான். ஆனால் பண்டைய நாட்களில் பெரிய பெரிய மகான்களாகிய ரிஷிகள் கிராமம் கிராமமாக ஞானத்தை உபதேசித்துக்கொண்டு சுற்றிக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய கால் தூசிக்குக்கூட நான் சமமாக மாட்டேன். துளசிதாஸ் சொல்லியிருக்கிறார், "ஹே! கங்காமாதாவே, உன் கரையில் இறைவன் நாமத்தை ஜபம் செய்து கொண்டு சுற்றிக்கொண்டிருக்க எனக்கு வேண்டிய புத்தியைக் கொடு."

இவ்வித உபன்யாசகர்கள் கிராமம் கிராமமாகச் சுற்றி வந்தனர். அவர்கள் மக்களுக்கு ஞானத்தை உபதேசித்து வந்தார்கள். ஞானம் என்பதைப் புஸ்தகப் படிப்பால் புரிந்துகொண்டுவிட முடியாது. அது இத்தகையவர்களிடமிருந்து கேட்பதினால் தான் சித்தியாகும் இதனால்தான் கேட்கும் சக்திக்கு அதிக மகத்துவம் கொடுத்திருக்கிறார்கள். கிராமவாசிகளுக்கு இந்த உபன்யாசங்களால் ஞானம் கிடைத்து வந்தது. அப்பொழுதுதான் நல்ல முறையில் பிரசாரம் நடைபெற்று வந்தது. இப்பொழுது ஏதோ சிறிதளவு ஞானம் பெற்றுவிட்டால் உடனே கிராமத்தை விட்டு விட்டு, நகரத்திற்கு ஓடி அங்கிருந்து கிராமத்தைச் சுரண்டுகிறார்கள். பசுவுக்குத் தின்பதற்குப் புல் போடுகிறோம். குழந்தைக்கு புல் கொடுக்காமல் பால் கொடுக்கிறோம். அதேவிதம் இந்த உபன்யாசகர்கள் மக்களிடையே அவர்கள் நன்கு புரிந்து கொள்ளும் முறையில் உபன்யாசம் செய்து வந்தார்கள். இத்தகைய வேலையை நம் கல்லூரிகள் செய்யமாட்டா. சில கிராமங்களில் இரண்டு மூன்று மாதம் தங்கிப் பச்சிலை மூலிகை வைத்தியம் தெரிந்திருந்தால் அதை கிராமவாசிகளுக்கு இனமாகப் பயன் படுத்தி வந்தார்கள். இன்று ஜனங்களுக்குத் தெரியாத ஞானம் அந்தக்காலத்தில் நன்கு தெரிந்திருந்தது. இதனால் வேதம் நிலைத்து நின்றது தர்மம் தழைத்தோங்கியது. இந்ததேசமே ஸ்திரமாக இருக்கமுடிந்தது. இதுவே காரணம் என்பது என் கருத்து.

இப்பொழுது புதிதாக இதற்காகத் திட்ட மிட்டால்தான்

ஞானம் கிராமங்களுக்குக் கிட்டும். ரேடியோ முதலியவற்றால் பிரயோசனமில்லை. இவைகளுக்கு நான் மதிப்புக்கொடுத்த போதிலும், அநுபவஸ்தர்கள் சொல்லும் தத்துவங்களை நேரிடையாகக் கேட்கக் கொடுத்து வைத்த காதுகள் புண்ணியம் செய்தவை. ரேடியோ மூலம் கேட்ட காதுகள் அவ்வளவு புண்ணியம் செய்யவில்லை. நம் முன்னோர்கள் இதற்காகச் செய்த ஏற்பாடுகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும். கிராமம் கிராமமாகச் செல்ல வேண்டும். இதனால் கிராமவாசிகளுக்குக் கஷ்டமிருக்காது, உபகாரமாகவே இருக்கும். எழுத்தறிவிப்பு இயக்கத்தை ஆரம்பிப்போமானால் கோடிக்கணக்காகப் பணம் தேவைப்படும். இவ்விதம் இருக்கத் தகுதியான அறிவு பெற்ற நகரவாசிகள் நல்லொழுக்க முள்ளவர்களாக இருந்தால் அவர்களின் குமாரர்கள் குடும்பத்தைப் பாதுகாக்கச்சக்தி பெற்றிருந்தால், கிராமம் கிராமமாக இறைவனின் நாம ஜெபம் செய்துகொண்டு சுற்றிக்கொண்டிருக்கவேண்டும். அப்பொழுது தான் இந்த தேசம் ஞானத்தின் பலத்தில் நிலைத்து நிற்கும்.

---

## 'காமகோடி' அனுபந்தம்—15

1. யாரிடமும் இனிமையாகப் பேசு. கோபமுடைய பாம்புகூட இனிமையான குழலின் கீதத்தில் அடங்குகிறது.

2. உள்ளமாகிய சிம்மாதனத்தில் உண்மை யென்னும் கடவுளை ஏற்று. உண்மையே பேசு.

3. தினமும் ஒரு ஏழைக்காவது சோறு போடு. ஏதாவதொரு நன்மை செய்.

4. காலை, மாலை, நடுப்பகல் மூன்று வேளைகளிலும் உன் இஷ்ட தெய்வத்தை வணங்கு. உன் பாவங்கள் பறந்தோடும்.

ஸ்ரீ ம. க. ச. துண்டு பிரசுரம்.



# உபநிஷதச் சிறு கதைகள்

(ப்ருஹதாரண்யக உபநிஷதம்)

## "ஆசி"

### வேள்வியில் வேத விழுப்பொருளைக் கருதுதல் வேதாந்த நோக்காகும்

[ப்ருஹதாரண்யக உபநிஷதம் பொருளடக்கத்தைக்கொண்டும் விரிவைக் கொண்டும் மிகப் பெரிதாகும். மிகப்பெரிதும், அரண்யத்தில் படிக்கப்பட வேண்டுவது மாகலின் ப்ருஹதாரண்யக மெனப் பெயர் பெற்றது. இது சுக்ல யஜுர்வேதத்தைச் சார்ந்தது.]

வேள்விகளிற் சிறந்து விளங்குவது அச்வமேத மெனப்படுவது. இவ் வேள்வி பிரம்ம லோகத்தையடைய உதவுகின்றது; இது குதிரையைக் கொண்டு செய்யப்படும் பெரியதொரு வேள்வியாகும். வேள்விக் குதிரையின் உறுப்புகளை எங்கு மளாவிய பரம்பொருளின் படைப்புப் பொருள்களுக்கு ஈடுபடுத்தி, சிலையிற் சிவனைக்கருதி வழிபடுவது போன்று உபாஸனை செய்வதால் வேள்விப்பயனை யடையக்கூடுமென்று கருதப்படுகின்றது.

வைகறை நேரத்தைக் குதிரையின் சிரமாகவும், கதிரவனைக்கண்ணாகவும், காற்றைப் பிராணனாகவும், அனலை வாக்காகவும், ஆண்டை உடலாகவும், விண்ணுலகைப் பின்புறமாகவும், ஆகாசத்தை வயிறாகவும் புவியைக் குளம்பாகவும், திசைகளை இருபக்கங்களாகவும், மூலைத்திசைகளை விலாப் புறத்து எலும்புகளாகவும், வசந்தம் முதலாகவுள்ள பருவங்களை உறுப்புகளாகவும், மாதங்களையும் இருபிறைகளையும் கணுக்களாகவும், இரவு பகல்களைப் பாதங்களாகவும், விண் மீன்களை எலும்புகளாகவும், மேகங்களை ஊனாகவும் மணலைச் சீரணமாகாத உணவாகவும், ஆறுகளை இரத்தக் குழாய்களாகவும், மலைகளை ஈரல்களாகவும் மரஞ் செடிகளை உரோமங்களாகவும், முற்பகலை உந்திக்கு மேலுள்ள பகுதியாகவும், பிற்பகலை உந்திக்குக் கீழுள்ள பகுதியாகவும், மின்னல்களைக் கொட்டாவி விடுவதாகவும், இடி இடிப்பதை உடற் சிலிர்ப்பாகவும், மழையைச் சிறு நீராகவும் சொல் அல்லது ஒலியைக் கனைத்தலாகவும் கருதவேண்டும். அன்றி, பகலை வேள்வியில் குதிரைக்கு முன்னால் வைக்கப்படும் பொன்கலமாகவும், இரவை பின்னால் வைக்கப்படும் வெள்ளிக்கல மாகவும், கீழ்க்கடலை பொன்கலம் வைக்கப்படு மிடமாகவும் மேற்குக்கடலை வெள்ளிக்கலம் வைக்கப்படும் இடமாகவும் கருதவேண்டும். பொன் வெள்ளிக் கலங்கள் மஹிமான் (பெருமைகொண்டன) எனப்படும். ஏனெனில் இவை வேள்விக்குதிரையின் சிறப்பை அறிவிப்பனவே போன்று முன்னும் பின்னும் முறையே கதிரொளி போன்றும் மதிநிலவு போன்றும் ஒளிமிகுந்து விளங்குகின்றன. வேள்வித்தலைமை கொண்ட இக்குதிரை தேவர்களையும், கந்தர்வர்களையும், அஸுரர்களையும், மாந்தர்களையும் நிலைகட்கு ஏற்ப, சுமந்து செல்கின்றது. ஸமுத்திரமெனும் பரமாத்மாவே இதன் தோற்றமாகும். தோற்றத்தின் காரணமும் பரமாத்மாவே.

இவ்வாறு கருதி உபாஸனை செய்வதால் பரமாத்மாவின் உருநிலை அறிந்து உயர்நிலை பெறுவர். இவ்வகை உபாஸனை புருஷ உபாஸனை எனப் பெயர் பெறும். இதனை அச்வ உபாஸனை என்றும் கூறுவர்.

## 21-2-54-ல் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கூடத்தில் 9-வது மகாநாட்டன்று காலை 9-மணிக்கு யூனியன் தலைவர் திரு. C. பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் கூடிய மகா சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு அரசியலாருக்கு அனுப்பும் தீர்மானங்கள் :—

### தீர்மானங்கள்

4 அரசாங்கத்தாரால் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அளிக்கப்பட்டுவரும் கல்வி நிதியை முன் கூட்டியே ஜில்லா போர்டுக்குக் கொடுத்து ஆசிரியர்களுக்கு பிரதிமாதமும் குறித்த தேதியில் சம்பளம் கொடுக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

5. ஆசிரியர் குழந்தைகளுக்கு கல்லூரி படிப்புவரை இலவச கல்விவசதி செய்து தரும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறோம்.

6 ஆரம்ப ஆசிரியருக்கு சட்ட சபையில் பிரதிநிதித்துவம் அளிக்க அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

7. ஹையர் கிரேடு ஆசிரியர்கள் S. S. L. C. பூர்த்தி செய்தவுடன் அன்னாருடைய சான்றுத்தாளை செகண்டரி கிரேட்டு ஆசிரியராக மாற்ற அரசியலாரை கேட்டுக் கொள்கிறோம்.

8 ஆரம்பக்கல்வி புத்தக அங்கீகாரக் குழுவில் (Text-Book Committeo) ஆரம்ப ஆசிரியர்களுக்குபிரதிநிதித்துவம் அளிக்க அரசியலாரை வற்புறுத்துகிறோம்.

9. ஆசிரியர்கள் எங்கு வேலை செய்தாலும் அந்தந்த கிரேட்டுக்கு எற்றபடி ஒரே விதமான சம்பள திட்டம் கொடுக்குமாறு அரசியலாரை வற்புறுத்துகிறோம்.

10. எல்லா ஆரம்பப் பள்ளிகளையும் அரசாங்கமே எடுத்து நடத்துமாறு கோருகிறோம்.

11. நோய் விடுதி சம்பந்தமாய் 1933-க்கு முன் வேலையில் அமர்ந்த ஆசிரியர்கட்குக் கொடுக்கும் சலுகைகளைப்போல் 1933-க்குப்பின் வந்த ஆசிரியர்களுக்கும் ஒரே விதமான சலுகை செய்து தரும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறோம்.

12. மத்திய அரசாங்கத்தை விகிதப்படி சம்பளமும் பஞ்சப்படியும் வழங்க வசதி செய்யும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறோம்.

13. பஞ்சாயத்துப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்கட்கும் சம்பளமும், ஆண்டு உயர்வும் இதர மேனேஜ்மெண்டில் கொடுப்பது போல் வழங்க வசதி செய்யும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறோம்.

14. ஜில்லா போர்டு ஆசிரியர்கள் தங்கள் பிற்கால ஜீவியத்தின் பொருட்டு எடுத்துக் கொள்ளும் லைப் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸிக்காக செலுத்த வேண்டிய பிரிமியத்தைச் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் பிராவிடெண்டு பண்டுக்காக அதிக சந்தா செலுத்தும் பட்சத்தில் மேனேஜ்மெண்டாரே அதை ஏற்று செலுத்தி உதவி புரிய கேட்டுக் கொள்கிறோம். இது சம்பந்தமாய் முன்பு அமுலில் இருந்த உத்தரவை மத்தியில் அரசாங்கத்தார் திருத்தியதன் பயனாக ஆசிரியர்கட்கு வீண் கஷ்டம் ஏற்பட்டுள்ளதை தவிர்க்கவேண்டுகிறோம்.



## 21-2-54 சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கூடத்தில் 9-வது மகாநாட்டன்று காலை 9-மணிக்கு யூனியன் தலைவர் திரு. C. பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் கூடிய மகா சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு மேனேஜ்மெண்டாருக்கு அனுப்பும் தீர்மானங்கள் :—

### தீர்மானம்

1. முன்னிருந்த மாதிரி ஒவ்வொரு பள்ளிக்கும் பெருக்குபவர்களும் ஆயாள் நியமனமும் எற்படுத்துமாறு வேண்டுகிறோம்.

2. இவ்வாண்டு பள்ளி நாட்களும் சங்க நாட்களும் சேர்ந்து 220 போக அதிகமுள்ள நாட்களை கோடை விடுமுறையோடு சேர்த்து விட அனுமதி ஒவ்வொரு பள்ளி தலைமைக்கும் கொடுக்க வேண்டுகிறோம்.

3. 2-12-53-ல் தூது கோஷ்டி தந்த விளக்கத்தின்படி 5-ம் வகுப்பு பொது சோதனையை இவ்வாண்டு முதல் நிறுத்தி விடும்படி கோருகிறோம்.

4. சேமிப்பு நிதி தொகையில் கடன் கொடுக்கும் விஷயமாய் சமீபத்தில் ஜில்லா போர்டார் பிறப்பித்துள்ள உத்திரவானது ஆசிரியர்களின் அசௌகரியத்தை அதிகப்படுத்துவதால் அந்த உத்திரவை தளர்த்தி கடன் கேட்கும் ஆசிரியர்களுக்கு அவர்களுடைய சேமிப்பு தொகையிலிருந்து உடனுக்குடன் கடன் கொடுத்து உதவுமாறு வேண்டுகின்றோம்.

5. ஆசிரியர் கோரும் இடம் தவிர அனாவசியமாக எவரையும் மாற்ற வேண்டாம் என கேட்டுக் கொள்கிறோம்.

6. வீடு கிடைக்காத கிராமங்களில் ஆசிரியர்கள் வெளியூரிலிருந்து வர அனுமதிக்க வேண்டுகின்றோம்.

7. முன்னம் கொடுத்தபடி கைத்தொழில் ஆசிரியர்களுக்கு பஞ்சப்படி தந்திட கோருகிறோம்.

8. பள்ளியில் களவு போகும் பொருள்களின் மதிப்பை ஆசிரியர்களிடம் வசூலித்தல் கூடாது என கேட்டுக் கொள்கிறோம்.

9. ஒவ்வொரு ஆசிரியருக்கும் பாடக் குறிப்புப் புத்தகம் வழங்க கேட்டுக் கொள்கிறோம்.

10. ஆசிரியர் (Table Copies) யையும் கட்டிய பிராந்தியத்திலுள்ள பள்ளிகளில் ஏழைப் பிள்ளைகளுக்கு வழங்கும் புத்தகங்களை பள்ளி துவக்கத்திலேயே கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

11. ஒய்வு பெற்ற ஆசிரியர்கள் எல்லோருக்கும் (Gratuity) அவசியம் வழங்கக் கேட்டுக் கொள்கிறோம்.

12. ஆசிரியருடைய ஊதிய வயது 55-ஐ 60 ஆக்க கேட்டுக் கொள்கிறோம்.

13. 1947-ல் சம்பளம் உயர்வு கொடுத்த போது சிலருக்கு விட்டுப் போன (Waitage) யை கணக்கிட்டுக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

14. மாவட்டத்தின் கீழ் வேலை செய்யும் ஆதார பாடசாலையின் சாதல்வார் தொகையை அதிகப்படுத்தித்தர கேட்டுக்கொள்கிறோம்.

# சென்னை கல்வி விதிகள் திருத்தங்கள் சர்க்கார் விளக்கம்

சென்னை கல்வி விதிகளில் 98 (பி) 154 பிரிவுகளுக்கு செய்யப்பட்ட திருத்தங்கள் சம்பந்தமாகச் சில பத்திரிகைகள் தவறாகப் புரிந்து கொண்டதனால் தான் அவை கண்டனம் தெரிவித்திருக்கின்றன என்று சென்னைச் சர்க்கார் ஒரு அறிக்கையில் கூறுகின்றனர்.

பழைய விதிகளில் தலைமை ஆசிரியர்கள் சம்பந்தமாக நிர்ணயிக்கப்பட்ட அதே காரணங்களுக்காகவும், அதே முறையிலும், ஆசிரியர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வசதி செய்வதே விதி 98 (பி)யைத் திருத்தும் நோக்கம். கடமையில் தவறுவதும், காரியங்களை ஒழுங்காகச் செய்யாததும் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கான காரணங்களாகும். 154-ம் விதியில் கண்டுள்ள முறைப்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று திருத்தம் கூறுகிறது.

ஆசிரியர்களின் சர்டிபிகேட்டுகளை ஸஸ்பெண்டு செய்யவும், ரத்து செய்யவுமே பழைய 154-ம் விதியில் வகை செய்யப்பட்டுள்ளது. அதே காரணங்களுக்காக தலைமை ஆசிரியர்களது ஆசிரியர் சர்டிபிகேட்டுகளையும் ஸஸ்பெண்டு செய்யவும் ரத்து செய்யவும் திருத்தம் அதிகாரமளிக்கிறது. நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான காரணங்கள் முன்போல் தான் உள்ளது. அதாவது ஒழுங்கீன போக்கு வேலையை சரியாகக் கவனிக்காமல் இருத்தல், சீர்குலைக்கும் வேலைகள் ஆகியவை இந்த விதியின் கீழ் தண்டனை விதிக்கு முன் விசாரணை நடத்த வேண்டிய முறை பற்றி நிர்ணயித்து விதி விரிவாக்கப்பட்டிருக்கிறது. இது விதியில் செய்யப்பட்டுள்ள நல்ல மாறுதல் அல்லவா?

எற்கனவே நடை முறையில் அனுசரிக்கப்பட்ட முறைதான் தற்போது விரிவாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இரு விதிகளின் கீழும் பழைய விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க என்ன காரணங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்களும் தலைமை ஆசிரியர்களும் அனுசரிக்க வேண்டிய விதிகள் இருக்கின்றன. இவற்றில் அவர்களது கடமைகளும் அதிகாரங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆகவே ஒரு குறிப்பிட்ட ஆசிரியரோ தலைமை ஆசிரியரோ கடமையில் தவறிவிட்டாரா என்பனவற்றை சுலபமாக முடிவு செய்யலாம். பள்ளிக்கூட மானேஜ்மெண்டுகள் ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் உரிமையை தற்போதைய திருத்தங்கள் பாதிக்கவில்லை.

பூர்வாங்க ரிப்போர்ட் கட்டத்திலும், குற்றங்கள் பற்றிப் பதில் தெரிவிக்கப்படுவது பேரில் ரிப்போர்ட் செய்யும் கட்டத்திலும் மானேஜ்மெண்டுகளில் தங்கள் குறிப்புகளைத் தெரிவிக்கலாம். மானேஜ்மெண்டுகளில் கீழ் ஒரு ஒப்பந்தம் பேரில் வேலை செய்யும் ஆசிரியர்களை திருத்தங்கள் பாதிக்கும் என்றும் கூறமுடியாது. இரு தரப்பினரையும் ஒப்பந்தம் கட்டுப்படுத்தும். குறையுள்ளவர் கல்வி டைரக்டருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம். ஒரு அறிக்கை சமர்ப்பிப்பது தவிர ஆசிரியருக்கு தம் கட்சியை எடுத்துரைக்க சந்தர்ப்பம் இல்லை என்று கூறுவதும் தவறு. 154-ம் விதிக்கு செய்யப்பட்டுள்ள



# இதுவே வழி

**விஜயலக்ஷ்மி பண்டிட்**

உலகம் குழம்பி இருந்த காலத்தில் நாம் சுதந்தரம் அடைந்தோம். மகா யுத்தம் முடிந்தகாலம் மீண்டும் சண்டையும், மரணபயமும் ஏற்படாதிருக்க வழியென்ன என்று மக்கள் தேடியலைந்த காலம். உலகத்தின் போக்கு நம்மையும் பாதித்தது. நாம் தனித்திருக்க முடியுமா? ஆகவே தனித்திருக்க சுதந்திரம் கிட்டியதால் ஏற்பட்ட பிரச்சனைகளுடன் சர்வதேசப் பிரச்சனைகள் சிலவற்றையும் சமாளிக்க வேண்டியதாயிற்று. நமது வெளிநாட்டுக் கொள்கையில் வெற்றி குறித்து நீங்கள் மகிழ்ச்சியடைகையில் காந்திஜீ அன்று சுதந்தரப் போராட்டக் காலத்தில் வகுத்துக் கொடுத்த தேசீயக்கொள்கையின் விளைவே அது என்பதை மனதில் கொள்ள வேண்டும். இன்று சர்வதேச அரங்கில் இந்தியா தன் பங்கைப் பெருமையுடன் செலுத்தி வருகிறது.

பிரமாதமான பிரச்னைகள் நம் முன்னிற்கின்றன. எல்லா மக்களுக்கும், போதிய உணவு ஜாகை வசதி, கல்வி, சுகாதார வசதி வாழ்க்கையில் சம சந்தர்ப்பம். இதுவே நம் நாட்டைப் பொருத்தவரை சுதந்திரத்தின் உண்மைப் பொருள். எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் கிடைத்தால் தான் பாடுபட்டுத் தேடிய சுதந்திரத்தை நீடித்துக் காக்கத்தகுந்த தலைவர்களையடைந்து பயிற்சியளிக்கமுடியும். அமைதியற்ற சூழ்நிலையில் தேசீயக் கொள்கையொன்றை வகுப்பதென்பது எளிதான காரியமல்ல. அதை செய்து காட்டியிருக்கிறோம் என்பதில் நாம் அனைவரும் உண்மையில் பெருமைப் படலாம்.

பலி லட்சியங்கள் உயர்ந்த சித்தாந்தங்கள் சிதைந்தன. ஆனால் இந்தியாவில் மகாத்மா காந்தி நமக்கு சில லட்சியங்களை போதித்தார். இன்று உலக அரங்கில் இந்தியா மதிக்கப் படுகிறதென்றால் அதற்குக் காரணம் அந்த லட்சியங்களே. உலகில் கோடிக்கணக்கான மக்கள் எத்தனை ஆவலுடன், ஆர்வத்துடன் சமாதானத்தை, சந்துஷ்டியை, பாதுகாப்பை விரும்புகிறார்கள் என்பதைப் பலர் புரிந்து கொள்வதில்லை. சண்டையை வெறுக்கிறார்கள் மக்கள். எந்த தேசமும் யுத்தத்துக்குத் தயாராயில்லை. ஆனால் நாம் நம் நாகரீகத்தின் லட்சணம் சமாதானத்தைப் பாதுகாக்க! இதற்காகத்தான் இந்தியா சில சமயங்களில் தனித்திருந்து உபதேசம் செய்ய வேண்டியிருக்கிறது. நம் வாழ்க்கையில் ஒன்

---

திருத்தத்தின் கீழ் அவசியமெனக் கருதப்படும் போதெல்லாம் விசாரணை நடத்தப்படும்.

ஆகவே பழைய விதிகளிலுள்ள குறைபாடுகளை நீக்கவே தற்போது திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கிறதென்பது விளங்கும். பழைய விதிகளின்படி ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது சம்பந்தமான விசாரணைகள் பற்றிய நடைமுறைகள் திட்டமாக நிர்ணயிக்கப்படவில்லை. டிவிஷனல் இன்ஸ்பெக்டர்கள் அல்லது டைரக்டர் அளிக்கும் தண்டனை பேரில் அப்பீல் செய்யவும் முடியாமல் இருந்தது. ஆனால் தற்போது விசாரணை நடைமுறைகளும் அப்பீல் உரிமையும் திட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

றியது அவ்வுபதேசம். செய்யும் கர்மங்களின் பலா பலன்களைத் தவிர்க்க முடியாது. ஒருவித நடவடிக்கை ஆபத்திலேயே கொண்டு விடும் என்று இந்தியா மீண்டும் எச்சரிக்கை செய்து வந்திருக்கிறது. அச்சம் நிறைந்திருக்கும் உலகில் சமாதானம், அன்பு, நேசம் குறித்துப் பேசுவது கஷ்டம். இன்று உலகில் ஒரு நாடு இன்னொரு நாட்டைக்கண்டு பயப்படுகிறது. ஜனங்கள் ஒருவரையொருவர் கண்டு பயப்படுகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் எந்தத் தகராறையும் தீர்த்து வைப்பது சுலபமாயில்லை.

உடன்பாடு காண பல முறை முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் வல்லரசுத் தலைவர்கள் கூடிப் பேசியும் பலன் காணவில்லை. பர்மூடாவில் மேற்கு வல்லரசுத் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை. திரும்பவும் ஜினிவாவில் கூட்டம் நடைபெறப் போகிறது. ஆசியாவின் முக்யப் பிரச்சனைகளில் சிலவற்றிற்கு அக்கூட்டத்தில் முடிவு கிடைக்க வேண்டும் என்பது தான் நம் அவா, நம் பிரார்த்தனை, ஆனால், நாம் நம் தேசங்களில் தகுந்த சூழ்நிலை ஏற்படுத்தினால் ஒழிய தலைவர்கள் பிரச்சனைகளில் தீர்வு காண்பது மட்டும் பிரயோசனப்படாது. சந்தேகமும், சச்சரவும், நிறைந்த சூழ்நிலையில் உடன்பாடு காண்பது எளிதல்ல. ஆகவே, இந்தியாவில் நம் பொறுப்பு மகத்தானது. நம் முன்னிற்கும் பெரிய பிரச்சனைகளை சமாளிக்க முயன்று கொண்டிருக்கிறோம். அதே சமயத்தில் சர்வதேசப் பிரச்னைகளில் முடிவு காணவும் இந்தியா வழி காட்டும் என்று உலக மக்கள் எதிர் பார்க்கின்றனர்.

## ஐ. நா. சபையின் நம்பிக்கை

ஐக்ய நாடுகள் சபை குறித்து இந்தியாவில் சிலருக்கு நம்பிக்கையே இல்லை. பிரச்சனைகளை அலசிப் பார்த்து தீர்த்து வைக்க ஐ நா. சபை சட்ட மன்றமல்லவே? சண்டையில் போய் முடியக்கூடிய பிரச்சனைகளுக்கு சமாதானமாக முடிவு காணப் பல நாடுகள் சேர்ந்து ஆலோசனை நடத்தும் சபை அது. முடிவுகளை அச்சபை பலவந்தப் படுத்தவும் முடியாது. தீர்மானம் நிறைவேற்றலாம். உலக நாடுகள் நல்ல படியாக அவற்றை அமுல் நடத்த வேண்டுமே என்று எதிர்பார்க்கத்தான் முடியும். அசட்டை செய்தால் அல்லது ஒரு குறிப்பிட்ட நாடு சபையின் யோசனையைப் புறக்கணித்தால் சபை எதுவும் செய்வதற்கில்லை. ஆனால் உலகில் இன்று நம்மை வருத்தும் இன்னல்கள் தீர ஐக்ய நாடுகள் சபையே வழி.

காந்திஜி தலைமையில் சுதந்திரப் போராட்டம் நடத்தினோம். குறுகிய நோக்குடன் இருந்ததில்லை. அப்போராட்டத்தை அன்னியர் ஆதிக்கத்திலிருந்து விடுபட விரும்பிய அனைவருக்காகவும் நாம் போராடினோம். உலகெங்கும் மக்களுக்குச் சம சந்தர்ப்பம் கிடைக்க நாம் போராடினோம். இங்கிருந்து ஆங்கிலேயரை விரட்டி விட்டு நம் அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு மட்டும் போராடவில்லை. பரம்பரைப் பண்பாடு காரணமாக பரந்த லட்சியம் கொண்டிருந்தோம். சுதந்திரம் கிடைக்கும் என்று நாம் கனவு கண்ட காலத்திலேயே நமக்குத் தகுந்த அரசியல் முறையை வகுத்தனர் நம் தலைவர்கள். ஜனநாயகம் நாம் மேற்கிலிருந்து காப்பியடித்த லட்சியமல்ல. சுதந்திரம் கிடைக்க எத்தனையோ காலத்துக்கு முன் நாமே தீர்மானித்த விஷயமது.



நம்முடைய சொந்த வாழ்க்கை முறையிலிருந்து லட்சியம், தத்துவங்களிலிருந்து வகுத்திருக்கும். அக்கொள்கைப்படியே அரசியலை வகுக்கும் வரை பாடுபட்டும் வந்திருக்கிறோம். ஆகவே அந்த ஜனநாயகம் நன்கு இயங்கச் செய்யும் பெரும் பொறுப்பு நமது.

## வேறு வழி கிடையாது

சுயநல நோக்குடன் கவனித்தாலும் நமக்குப் பயனளிக்கக் கூடியது ஜனநாயக முறையே. வழியில் பல தடங்கல்கள் இருக்கின்றன. கஷ்டங்களைச் சமாளிக்க மன உறுதி வேண்டும். ஆனால் இந்த ஜனநாயக முறையின் மூலம் நாம் நம் கருத்துகளுக்கு, விருப்பங்களுக்கு உருவளித்து உலகில் உரிய ஸ்தானத்தை அடைய முடியும். மக்களுக்குச் சுதந்திர உரிமையை அளித்தது இந்த ஜனநாயக முறையே. ஒரே சீரான நாட்டையோ உலகையோ நாம் விரும்பவில்லை. பன்மையில் ஒருமை காணவே உழைக்கிறோம். இந்தியாவிலுள்ள பலவேறு மதங்கள், பழக்க வழக்கங்கள், மொழிகள் எல்லாம் இணைக்கப்பட வேண்டும். அப்படி ஒன்றுபட்டு ஏற்படும் பலம் அணுகுண்டு, ஜலவாயு குண்டு பலத்தைவிட மகத்தானதாக இருக்கும். அதுவே நமக்கு வாழ்வு தரும். உலகில் இந்தியா உயர்வடைய இவ்வித ஒற்றுமை அவசியம். அதற்குத் தடையாக இருக்கக்கூடும் எவ்வித பிளவு சக்திக்கும் நாம் இடமளிக்கக் கூடாது. இந்தியா உலகுக்கு வழி காட்ட வேண்டி இருக்கிறது. உலகில் தன் கடமையை அது செய்ய வேண்டும். ஜனநாயக மார்க்கத்திலேயே இது சாத்யம். நமது பண்பாட்டுக்கு உகந்ததில்லாத வேறு எந்த முறையும் எத்தனை கவர்ச்சிகரமாயிருந்தாலும் பலன் அளிக்காது, என்பதை மக்கள் உணரவேண்டும்.

எஞ்சியிருக்கும் பிளவுகளை, வேற்றுமைகளை, சுரண்டல் சக்திகளை ஒழித்துக் கட்டி இந்திய மக்களின் வாழ்வு மலர வழி செய்தால் தான் பாரத நாட்டின் தேவைகளை, உலகில் தேவைகளை சமாளித்தவர்கள் ஆவோம். அதை மறந்து கவர்ச்சிகரமான இதர கொள்கைகளை மனதில் கொண்டு மனதைப் பறி கொடுத்தால் பரம்பரைப் பண்பாடுக்குத் துரோகமிழைத்தவர்களாவோம்.

## நாடு பலம் பெற வேண்டும்.

இன்று உலக நாடுகள் ஆயுதப் போட்டியில் ஈடுபட்டிருக்கின்றன. இந்தப் போட்டி யுத்தத்தில் முடிவதைத் தடுக்க வேண்டும். முதலில் நம்நாடு பலம் பெறவேண்டும். பலவீனப்படுத்தும் விஷயங்களை எல்லாம் ஒழித்துக் கட்ட வேண்டும். நமது அரசியல் சட்டம் அருமையானது. அதுகண்டு உலகமே வியந்திருந்தது. ஆனால் நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைத்து இந்திய மக்கள் ஒவ்வொருவரின் வாழ்வும் சந்துஷ்டி நிறைந்ததாகச் செய்யவில்லை என்றால், இந்த நாடு எனது நாடு என்று பெருமைப்பட்டு, அதனைப் பாதுகாக்க உடல் பொருள் ஆவி அனைத்தையும் தியாகம் செய்யும் உணர்வை ஒவ்வொருவரிடமும் ஏற்படுத்தவில்லையென்றால் வெறும் அரசியல் சட்டம் இருந்து என்ன பயன் ?

உலக சக்திகளை உணரவேண்டும். அப்போதே உலகின் உயர்வுக்கு உதவ முடியும். காந்திஜி போதித்த லட்சியங்களைவிடாதுகடைபிடித்துதவ வேண்டும். லட்சியம் புனிதமானதாக மகத்தானதாக இருப்பது மட்டும் போதாது. அதை அடையும் வழியும் நல்லதாக இருக்கவேண்டும். வழியும் லட்சியமும் இரண்டும் உயர்வாக இருக்க வேண்டும். வெறுமனே தலைவர்களைக் கௌரவித்துப் பயன்

# சென்னை இந்து சேவா சங்க ஆதாரக்கல்வி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை

அம்பத்தூர்

## முதலாண்டு அறிக்கை

சென்னை இந்து சேவா சங்கத்தின் நிர்வாகக் கமிட்டி தங்களாதரவில் நடத்தப்பெறும் ஆதாரக்கல்வி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் 1954 மார்ச்சுத்திங்கள் வரை ஏற்பட்ட ஆண்டறிக்கையை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது.

**தோற்றுவாய் :—**

சீர்குலைந்த சமுதாயத்தின் சிக்கல்களையும் கெடுதிகளையும் நீக்கிச் சுதந்திரப் பாரதத்தில் நீதி பொருந்திய புதிய சமூக அமைப்பிற்கு வழி வகுத்து, நாட்டின் நல் வாழ்விற்கும் தனி நாகரீகப் பண்பாட்டிற்கு முகந்ததாகி, நாட்டு மக்களின் பொருளாதார, சமூக, ஆன்மத் துறைகளில் ஒருமித்த ஒழுங்கான வளர்ச்சியை அளிக்கும் கல்வியே அண்ணல் காந்தியளித்த ஆதாரக்கல்வியாகும். அக்கல்வியை ஆதரித்துப் பரப்பத் தொண்டர்கள் தேவை. குறிப்பாக ஆசிரியத் தொண்டர்கள் அதிக அளவில் தேவை. இத்தேவையினை உணர்ந்து செயல் முறையில் செய்து காட்டவே, பல கல்வி நிலையங்களைப் பரந்த முறையில் நடாத்தி வரும் சென்னை இந்து சேவா சங்கம் 1-7-1952-ல் மேனம்பேடு கிராமத்தில் 80 மாணவிகளைக்கொண்ட ஆதாரக்கல்வி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை ஆரம்பித்தது. இக்கலாசாலையைச் சென்னை ராஜ்ய தொழிலமைச்சர் கனம் ஸ்ரீ டாக்டர் U. கிருஷ்ணராவ் அவர்கள் தலைமையில், சென்னைக்கல்வி உதவி அதிகாரி ஸ்ரீ டாக்டர் M. D. பால் அவர்கள் திறந்து வைத்துச் சிறப்பித்தார்கள்.

**இருப்பிடம் :—**

ஆதாரக்கல்வி, மனிதனின் முக்கிய தேவையான உணவையும் உடையையும் நல்கி ஆன்மப் பயிற்சியினை முறையே யளிப்பது. இதற்கு வேண்டப்படுவது அமைதியும் ஆனந்தமும் அளவளாவும் கிராமச் சூழ்நிலையே. ஆகவே இக்கலாசாலை சென்னை-திருவள்ளூர் வழியில் 11-வது மைலிலுள்ள மேனம்பேடு கிராமத்தில் 2½ ஏகரா பரப்புள்ள

என்ன ? அவர்கள் உபதேசப்படி நடந்து கொள்வதல்லவா முக்கியம் ? விடுதலைப் போராட்ட காலத்தில் கனவு கண்ட நவ இந்தியாவை காந்திஜி காட்டிய வழியில் சிருஷ்டிக்க முடியுமா ? இதுவே இந்தியா எதிர் நோக்கி இருக்கும் சவால். தலைவர்கள் முயற்சியால் மட்டும் லட்சியம் ஈடேறி விடாது. பாமர மக்களின் உழைப்பினால் தான் லட்சிய சித்தியடைய முடியும். தலைவர்களது உபதேசத்துக்கு மதிப்புக்கொடுத்து அவற்றின்படி நடக்க வேண்டும். அதுவே இன்று உலகம் உய்வடைய, ஜனநாயகம் தழைக்க, சமாதானம் மலர வழி. சின்னஞ்சிறு வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு உழைத்து நவ இந்தியா, சிருஷ்டியில் புது உலக சிருஷ்டியில் உதவவில்லையேல் நாம் நம் கடமையில் தவறியவர்கள் ஆவோம்.



இடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இக்கிராமம் விவசாயிகளும், தொழிலாளர்களும் நிறைந்த கிராமம். இனிய வாவிகளும் நெடிய வயல்களும், பார்க்குமிடமெங்கும் பசுமையான தோற்றமும், கண்கவர் கவின் பெறு இயற்கையின் வனப்பும், ஆடி அசைந்து ஆகத்தைத் தழுவும் அமுதாறும் தென்றலும் கொண்டது இக்கிராமம். இக்கிராமத்தின் அண்மையில் நெசவினைப் பேணும் மக்கள் வாழும் திருமுல்லை வாயில் அமைந்திருப்பது இக்கலாசாலைக்கு ஏற்றதேயன்றோ!

**மாணவிகள் தொகை :—**

தற்பொழுது இப்பள்ளியில் முதல் வருடத்தில் சேர்க்கப்பட்ட 80 மாணவிகளும். இரண்டாம் வருடத்தில் சேர்க்கப்பட்ட 40 மாணவிகளும் சேர்ந்து 120 மாணவிகள் இருக்கிறார்கள். இம்மாணவிகள் பலவேறுபட்ட சாதி, சமய, ஊர், மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். சாதி சமய, இனப்பாகுபாடற்ற சமதர்ம சமூக முறையிலே பயிற்சி பெறச் செய்து பண்படுத்தப் படுகிறார்கள்.

**ஆசிரியைகள் :—**

ஆதாரக்கல்வி பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அகப்படுவது தற்காலத்தே அரிதாக இருக்கிறது. அதனினும் கிராமங்களிலுள்ள பயிற்சிக் கலாசாலைகளுக்கு அப்பயிற்சி பெற்ற ஆசிரியைகள் அகப்படுவது அரிதினும் அரிதாக இருக்கின்றது. எனினும் பயிற்சிப்பள்ளி நிர்வாகத்தார் தக்க ஆசிரியைகளை இக்கலாசாலையில் நியமித்திருக்கிறார்கள். ஆசிரியைகளைக் கிடைக்குமாறு செய்ய கல்வி இலாகாவும் உதவி புரியவேண்டும். இம் முட்டுப் பாட்டை நீக்க ஆதாரக் கல்விப் பயிற்சிக் கல்லூரிகளையே கிராமங்களில் அமைக்க வேண்டும் என்பதை அறிவிக்க விரும்புகின்றோம். கிராமங்களில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளை நிறுவினால் தான், அவர்களும் அத்தகு சூழ்நிலையின் வாழ்க்கையைக் கண்டு, கிராமங்களிலுள்ள ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பணியாற்ற முன்வருவார்கள்.

**பள்ளி வேலைகள்: —**

**மாணவிகளில்லம்:**—மாணவிகள் குடும்பம் போல ஒற்றுமை புணர்ச்சியுடன், குழுக்களாகப் பிரிந்து தங்கள் உணவைத் தாங்களே தயாரித்துக் கொள்கின்றனர். உணவு விடுதிச் சுத்தம், பாத்திரம் தேய்த்தல், சாமான்களைப் பாதுகாத்தல், வேண்டியதை வெளியினின்றும் பெறுதல், காய்கறி நறுக்குதல், தண்ணீர் நிரப்புதல், போன்றவைகள் எல்லாவற்றையும் தாங்களாகவே செய்து கொள்ளுகின்றனர். இல்லத்தின் கணக்குகள், உணவுக்கட்டண விகிதங்கள் யாவற்றையும் அவர்களே மேற்பார்வை யிடுகின்றனர். விரதங்கள், விருந்துகள், விழாக் கொண்டாட்டங்கள் போன்றவைகளை முறையாக அனுஷ்டிக்கின்றனர். சிறந்த பொறுப்புள்ள குடும்ப வாழ்க்கையைத் திறம்பட நடத்துகின்றனரென்றால் மிகையாகாது.

**தோட்ட வேலை :—**

காய்களும் கனிகளும் கணக்கின்றி விளையும் 2 ஏகரா அளவுள்ள பரந்த தோட்டத்தைப் பெற்றிருக்கின்றனர். அதில் ஆளுக்கோர் பாத்தி அளிக்கப் பட்டுள்ளது. அவரவர்கள் கீரை, காய், கனி, கிழங்கு விளைவித்து தோட்ட வேலையைச் செய்கின்றனர். காய்கறிகளை நிறுத்துப் பார்த்தல், விதைகள், எருவிடல், தண்ணீர் பாய்ச்சல், கொடி வீடமைத்தல், போன்றவற்றை மாணவிகளே திறம்படச் செய்கின்றனர்.

**நூற்பும் நெசவும்:**—பருத்தியை உடைத்து, வில்லடித்து பஞ்சாக்கிப்

பட்டை செய்த நூற்றல் சிறந்த முறை. என்றாலும் முதன் முதலில் இப்படிகளில் பயிற்சி பெறுதல் எளிதன்று. தயாரித்த பட்டைப் பஞ்சு கொண்டே முதலில் நூற்கக் கற்றுக் கொள்ளுதல், நூற்றலில் ஆசையையும் கவர்ச்சியையும் ஊட்டும். இதுவே ராஜாஜி அவர்களுடைய கருத்தாகும். இம்முறையில் நூற்கக் கற்றபின்னரே செடி முதல் துணி வரை ஏற்படும் படிகளைப் பயிற்சிச் செய்ய இயலும். இம்முறையிலே மாணவியர்கள் சிறந்த பயிற்சியினைப் பெற்றதோடன்றி, நல்ல எண்ணுள்ள நூல் நூற்கும் திறமையையும் பெற்றிருக்கின்றனர். நெசவிற்கென்று கல்வி இலாகாவில் அதிக நேரம் ஒதுக்கப்படாததால் குறிப்பிட்ட அளவுள்ள துணியை மாணவிகள் நெய்யமுடியாமற் போகின்றது. இதனைக் கல்வி இலாகா கவனிக்குமென்று நம்புகிறோம்.

## பிற கைத்தொழில்கள் :—

தையல் வேலையும், பூவேலைகளும் கற்பிக்கப் படுகின்றன. பசு பராமரிப்புப் பணியையும் மாணவிகள் செய்கின்றனர். தற்பொழுது 2 பசுக்கள் இருக்கின்றன. பால் பண்ணை அமைப்பு முறையிலும் இது மாணவிகளுக்குப் பயிற்சி அளிக்கிறது.

## தேசீய மொழி :—

இக்கலாசாலையில் தேசீய மொழி கற்பிக்கப்படுகிறது. ஆதாரக் கல்வியில் தேசீய மொழி சிறந்த இடம் பெற்றிருப்பதால் பயிற்சிப் பள்ளிகளில் ஹிந்தி ஆசிரியர்கள் தேவை என்பதை கல்வி இலாகா கவனிக்கும் என்று நம்புகிறோம்.

## இசையும் நாடகமும் :—

இசையும் கற்பிக்கப்படுகிறது. அரசாங்க இசைத் தேர்வுகளுக்குத் தயாராகும் அளவில் தென் இந்திய சங்கீதம் கற்பிக்கப்படுகிறது. இசைப் பகுதியினை ஸ்ரீமதி B. S. வத்சலா அவர்கள் திறம்பட நடத்தி வருகிறார்கள். நாடகங்களும் மாணவிகளால் அவ்வப்பொழுது நடிக்கப் படுகின்றன. ஆதாரக் கல்வித் தத்துவங்களையொட்டிய முறையில் மாதா மாதம் களியாட்ட நிகழ்ச்சிகளையும் மாணவிகள் நடத்துகின்றனர்.

## மன்றங்கள்:—

மாணவிகளின் ஒக்கழுத்தையும் கருத்தையும்வளம்படுத்த சொற்போர் மன்றம், பட்டி மன்றம் போன்ற மன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. அமைச்சர்களைத் தேர்ந்தெடுத்தல் வாக்குரிமையை அளித்தல், அறிக்கைகளைத் தயார் செய்தல், சொற்பொழிவுகளை நிகழ்த்தல் ஆகியவைகளில் மாணவிகள் சிறந்த ஊக்கம் காட்டுகிறார்கள். அவர்களுடைய கட்டுரை வன்மையையும் கலையில் தெளிவையும் வளர்க்க கைப்பிரதி மாத இதழ்கள் தயாரிக்கிறார்கள். அன்றியும் ஆதாரக் கல்வித் திங்களிதழுக்கு சிறந்த விஷய தானத்தை அளிக்கிறார்கள். மாணவிகளாலேயே ஆதாரக் கல்வித் திங்களிதழ் நடத்தப்படும் காலம் அண்மையிலேயேயிருக்கிறதென்பதற்கு ஐயமுண்டோ!

## கிராம சேவை இயக்கம் :—

எழுத்தறிவற்ற கிராம மக்களுக்கு கல்வி யறிவையூட்டி முதியோர் கல்வியைப் பரப்பவும், சமூகத் தப்புரவினை சரிவர செய்யவும் சேரிசுத்தம், ஹரிஜன உயர்வு ஆகியவற்றைச் செய்ய இவ்வியக்கம் ஆரம்பிக்கப்பட்டது. மாணவிகள் மேற்கண்ட வேலைகளை அண்மையிலுள்ள கிராமங்களுக்குச் சென்று செய்திருக்கிறார்கள். இதில் சிறந்த ஊக்கமும் உற்சாகமும் கொண்டிருக்கிறார்கள்.



## விளையாட்டு :—

மாணவிகளுக்குரிய கும்மி கோலாட்டம், நடனம் ஆகியவற்றில் பயிற்சியளிக்கப் படுகின்றன. கைப்பந்து, மேஜை மட்டப் பந்து, கேரம் போன்ற விளையாட்டுகளிலும் மாணவிகள் கலந்து கொள்கின்றனர்.

## ஆரோக்கியம் :—

மாணவிகளில்லத்தில் ஆரோக்யம் திருப்திகரமாகவே இருக்கிறது. மருத்துவ உதவிக்காக மருத்துவச்சாலையும் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. டாக்டர் கல்யாண் அவர்கள் இம்மருத்துவ சாலையின் தலைவராக இருந்து பணியாற்றி வருகிறார்.

## பிற சிறப்புகள் :—

1953-1954 வருடங்களில் முறையே மார்கழி மாதங்களில் இரண்டு திருப்பாவை-திருவெம்பாவை மாநாடுகளை மாணவிகள் நடத்திக் காட்டியது பயிற்சிக் கலாசாலையின் வரலாற்றிலேயே முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய அம்சமாகும். முதல் மாநாடு பல பெரியோர்களின் சொற்பொழிவுகளைக் கொண்டும், பல பஜனை கோஷ்டிகள், பாராயண இசைக்கோஷ்டிகளின் துணை கொண்டும் நூற்றுக் கணக்கான மக்கள் களிக்க மூன்று நாள் அளவில் நடத்தப் பட்டது. பல பெரியோர்களின் தினங்களையும் பொது மக்கள் களிக்க நடத்தி இருக்கின்றார்கள்.

## விடை பெறும் மாணவிகள் :—

பயிற்சிக் கலாசாலையில் இரண்டாண்டுகள் வாழ்க்கைக்கு வேண்டிய யாவற்றிலும் பூரண வசதிகளைப் பெற்றுப் பயிற்சி பெற்ற 80 மாணவிகள் அரசாங்கத் தேர்வுகளை எழுதியிருக்கிறார்கள். சிறந்த முறையிலே தேர்ச்சி பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை. பிரியும் மாணவர்கள், இது காறும் உடனுறைந்து பள்ளியின் பெருமையை நிலை நாட்டியதற்கு எங்கள் வாழ்த்துக்கள் உரியதாகுக. பயிற்சிப் பள்ளியின் பழைய மாணவிகள் என்ற முறையிலும், முதன் முதலாக படித்த மாணவிகள் என்ற முறையிலும் அவர்கள் பயிற்சிப் பள்ளியின் புகழை ஓங்குமாறு செய்வார்களாக. பள்ளியில்லா ஊர்களில் பள்ளிகளை ஏற்படுத்தி ஆதாரக்கல்வியைப் பரப்புவார்களாக.

## எங்கள் தேவை.—

1. பயிற்சி பெற வரும் மாணவிகள் வருடா வருடம் அதிகரிப்பதால் நல்ல கட்டட வசதிகள் எங்களுக்குத் தேவை. அத்துடன் விவசாயத்தை மூலத்தொழிலாக்க நிலங்களும் தேவைப்படுகின்றன.

2. கைத்தொழிற் பகுதி நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருவதால் அப்பகுதிக்கு தேவையானவைகள் வேண்டும்.

3. நல்ல, ஆதாரக்கல்வி பயிற்சி பெற்ற ஆசிரியைகள், கிராமத்தில் வந்துழைக்கும் ஆசிரியர்கள் தேவை.

4. மருத்துவ உதவி முக்கியமாகத் தேவைப்படுகிறது.

முடிவாக இவ்வருடப் பணியை வெற்றிகரமாக முடிக்க எவ்விதத்திலும் ஒத்துழைத்தும் உறுதுணையாயும் இருந்த எல்லோருக்கும் நிர்வாகக் கமிட்டி தன்னுடைய ஆழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

எல்லாவற்றையும் எல்லோருக்கும் கொடுத்தளிப்போன் நல்வழியைக் காட்டுவானாக.

# சென்னை இந்து சேவா சங்கம்

## ஆசிரியர் பயிற்சி கலாசாலை, மேனும்பேடு

## முதலாண்டு மாணவிகள் பள்ளிக்கு வாசித்தளித்த

## பிரிவு உபசாரத் தாள்

செழிப்புமிக்க சீர்மைகொண்ட சென்னைக்கடுத்து பத்து மைலுக் கப்பால், அமைந்திருக்கும் அம்பத்தூரின் கண் 1952-ம் ஆண்டு ஜூன் மீ 28-ந் தேதி யன்று நம் ஆசிரியர் பயிற்சி பள்ளி நம் மாண்புமிக்க மானேஜர் அ. தி. சு. சர்மா அவர்களால் தேசிய கொடியுடன் துவக்கப்பட்டது.

துவக்கத்தில் இல்லத்தவரை பிரிந்து எவ்வாறு இவ் விடுதியின் கண் வாழ்வோம் என்ற அச்சத்திலும் அழுகையிலும் இருந்த நாம் இப்பொழுது ஈராண்டு பயிற்சிகளைப் பெற்று ஆண்டுத் தேர்வினையும் ஆற்றலுடன் நடத்தி விடுதியினை விட்டு விலகுகிறோம் என நினைக்குங்கால் மனம் வருத்தமடைகிறது. இந்த ஈராண்டு பயிற்சியில் பல பல இன்ப துன்ப நிகழ்ச்சிகளும் நிகழ்ந்திருக்கின்றன. பல ஆசிரியர்கள் இன்முகம் கொண்டு நம்மை வரவேற்றனர். வரவேற்பது மட்டுமின்றி வளமிக்க கல்வி செல்வத்தை வழங்கி இருக்கிறார்கள். அவர்கள் நம் அகத்தினின்று என்றும் அழியாத இடத்தினை பெற்றுள்ளனர். அப்படி அவர்களை ஒருசமயம் மறக்கத் தருணம் வாய்ந்தாலும் அவர்கள் ஈந்த கல்விச் செல்வத்தினை மறக்க இயலாது என்பது உறுதி. எதிர்கால மாணவர்களை மாண்புமிக்க மாணிக்கங்களாக மாற்றும் மாசற்ற ஆசிரியப் பணியினை நமக்களித்தனர். அவர்களன்றி அளிப்பதற்கு சிறந்த உறுதுணையாக விளங்கியவர்—விளங்குகிறவர்—விளங்கப் போகிறவர் நம் மதிப்பிற்குரிய மானேஜர் என்பதனை நம் உடலின்கண் உயிர்நிலைப் பெற்றிருக்கும்வரை உள்ளத்தினின்று அகற்ற முடியாது.

பல ஜீவநதிகள் ஒன்றுசேர்ந்து மாபெரும் கடலினில் கலப்பது போன்று பல ஜில்லாக்களினின்று பலதோழியர்கள் நம் அம்பத்தூரினை வந்தடைந்து பயிற்சிபெற்றனர். மானேஜர் அவர்கள் ஆசிரிய பயிற்சிமட்டும் அளித்ததாகத் தோன்றவில்லை. வருங்கால வாழ்க்கை வளமுடன் வளர்க்க வழிகோலியவர் என்று கூறினாலும் மிகையாகாது.

விடுதி வாழ்க்கைக் கடலிலே கல்வியென்னும் மரக்கலத்திலே மிதந்து கொண்டிருந்த நம்மை பல சூராவளிகளும் பயங்கர அலைகளும் தாக்கித் துன்புறுத்தின. அந்த நேரத்திலே

"இடுக்கண் வருங்கால் நகுக—அதனை
அடுத்தூர்வது அஃதொப்பதில்"

என்ற செந்நாப் போதார் செப்பிய சீர்மொழிக் கொப்ப துன்பத்திலிருந்த நம்மை இன்பக்கரைக்கு அழைத்துச் செல்ல கலங்கரை விளக்கமாக திகழ்ந்த நம் மாபெரும் மானேஜர் அவர்கள் என்பதனை அனைவரும் அறிவீர்.

கல்விப் பூங்காவினை ஏற்படுத்தியவர் நம் மானேஜர். அப் பூங்காவிற்கு அணிகலனாக இருந்து அழகினைக் கொடுத்து வளப்படுத்துபவர் நம் வன்மை மிக்க தலைமை ஆசிரியர் அவர்களேயாவர். உடல், உள்ளம் ஆன்மா மனோ, வாக்கு, காயம் ஆகிய மூன்றினையும் நமக்கே அர்ப்பணித்து இரவு பகலென்று



## ஆரம்ப ஆசிரியர்களின் சம்பள உயர்வு விஷயமாக இவ்வேண்டுகோளை சமர்ப்பிக்கின்றோம்.

பல வருடங்களாகவே ஆரம்ப ஆசிரியர்கள் மிகவும் குறைந்த சம்பளத்தில் குடும்ப வாழ்க்கை நடத்த வசதியற்று, கடன் வாங்கி ஜீவனம் செய்யும் நிலையில் இருக்கிறார்கள். இவர்கள் பல ஆண்டுகளாகவே, ஆசிரியர் சங்கங்களின் மூலமாகவும், மகாநாடுகளின் மூலமாகவும், தங்கள் ஊதியத்தை உயர்த்த வேண்டுமென சர்க்காரைக் கேட்டுக்கொண்டு வந்திருக்கிறார்கள். தற்போதும் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அரசியலார் இந்நியாயமான கோரிக்கையை நிறைவேற்றாமல் அதிக நேரம் வேலை செய்ய வேண்டிய புதிய ஆரம்பக்கல்வித் திட்டத்தை புகுத்தி சம்பளப் பிரச்னையைப் புறக்கணித்தது மிகவும் வருந்தத்தக்கது.

சமுதாயச்சிற்பிகள் எனக் கருதப்படும், ஏழை ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று 1953ம் வருடம் ஜூன் மாதத்திற்குப் பிறகு கேட்கும் ஆரம்ப ஆசிரியர்களுக்குச் சர்க்கார் அளிக்கும் பதில், நியாயவாதிகளும், ஜனநாயகவாதிகளும் ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல. தற்போது சம்பளத்தை உயர்த்தினால் அது புது ஆரம்பக்கல்வித் திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்காக லஞ்சம் கொடுத்ததாகும் என்று எதிர்கட்சிக் காரார்கள் கூறுவர் எனக்கூறி அரசியலார் காலத்தைப் போக்குவது

---

பாராது அரும்பணிகளாற்றி வருகின்றனர். விடுதியிலே நம்முடனிருந்து நம்முடன் ஒத்துழைத்து தவறு நேரும் சமயத்தில் இடித்து நன்னெறியில் செலுத்துபவர் நம் விடுதி காப்பாளர் என்பது நம் அனைவரும் அறிந்ததே.

ஆதாரக்கல்வியில் புத்தகப்படிப்பை விட பிறகலைகளுக்கு சிறந்த இடம் அளிக்கவேண்டும் என்ற நோக்கத்தை மனத்தில்கொண்டு அரும் பணியாற்றி வருகின்ற கலையாசிரியர்களின் தொண்டு வியக்கத் தக்கதே. நம் அன்பிற்கு இருப்பிடமாக இருக்கும் முதலாண்டு பயிற்சி மாணவிகள் நம்முடன் ஓராண்டுகளாக உடனிருந்து உவகை ஊட்டினர். நம் பொதுத் தேர்வுக்காக அவர்கள் செய்த தொண்டுகள் நம் வாழ்நாளிலே என்றும் மறக்க முடியாதன.

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனை
சான்றோன் எனக் கேட்டதாய்"

என்னும் பொய்யா மொழிப் புலவரின் வாக்கின்படி நாம் இங்கு பெற்ற கல்வியினை செல்லுமிடங்களுக் கெல்லாம் சீர்மையுடன் வழங்கி சான்றோர் என பிறர் கூறுமாறு திகழ்ந்தோமானால் அதுவே நம் பள்ளிக்குச் செய்யும் கைம்மாறு ஆகும்.

நாம் அரசாங்க ஆண்டுத் தேர்வினை நம் பள்ளியிலுள்ள அனைவரின் ஆசி பெற்று சிறப்புற எழுதியுள்ளோம். முதலாண்டாகப் பயிற்சி பெற்ற நாம் அரசாங்க ஆண்டுத் தேர்விலும் முதன்மையாக வெற்றிப்பெற்று பள்ளிக்கும் பள்ளியின் அனைவருக்கும் ஒப்பற்ற புகழினைப்பெற்று தர எல்லாம் வல்ல இயற்கை அன்னை அருள் புரியுமாறு இறைஞ்சுகிறோம்.

இங்ஙனம்,

**முதலாண்டு ஆசிரிய பயிற்சி மாணவிகள்.**

**1952—1954**

எவரும் ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல. அரசியலார் நினைப்பதற்குமாறாக எதிர்கட்சிக்காரர்களே வரவு செலவு திட்டத்தின்போது பேசுகையில், ஆரம்ப ஆசிரியர்களின் கோரிக்கை பட்ஜெட்டில் புறக்கணிக்கப்பட்டுள்ளதென்றும், அவர்களுக்கு நியாயவாதிகள் ஒப்புக்கொள்ளக்கூடிய முறையில் சம்பளங்களை உயர்த்த வேண்டுமெனவுங் கூறியுள்ளனர். புதிய கல்வித் திட்டத்தினால் அதிக நேரம் வேலை செய்யவேண்டுமே என, ஆசிரியர்கள் சம்பள உயர்வு கேட்கவில்லை. எத்தகைய கல்வித் திட்டமாயினும், ஆசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்படவேண்டும். என பொதுஜன நோக்கத்துடன் பலரும் ஆதரித்து வற்புறுத்தியிருக்கிறார்கள். நியாயமாக அரசாங்கம் புதுக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வருமுன்பே, சம்பள உயர்வு அளித்திருக்கவேண்டும்.

மேலும் சென்ற டிசம்பரில் நடைபெற்ற சட்டசபைக் கூட்டத்தில், கீழ்சபை, மேல்சபை அங்கத்தினர்கள் ஆசிரியர் ஊதியத்தை உயர்த்த வேண்டுமெனப் பேசியுள்ளனர். அதற்கு கல்வி நிதி மந்திரியான கனம் சுப்பிரமணியம், ஆசிரியர் அந்தஸ்து, சம்பள உயர்வுப் பிரச்னைகளை பருளேகர் கமிட்டியின் சிபாரிசுகளை ஆராய்ந்து, இராஜ்ஜியத்தின் நிதி நிலைமையைக் கவனத்தில் கொண்டு, பரிசீலனை செய்வோம் எனக்கூறினார். ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வு அளித்துக் குடும்பக்கவலையை ஒழித்தாலன்றி எத்தகைய கல்வி சீர்திருத்தமும் வெற்றிபெறாது. 1954 55 பட்ஜெட்டில் ஆசிரியர்களுக்கு ஏதாவது கணிசமான அளவுச் சம்பள விகிதம் நிர்ணயிக்கப்படும் என எதிர்பார்த்தோம்.

நம் இராஜ்ஜியத்தின் முக்கியமான சில தினசரிப் பத்திரிகைகளும், வாரப்பத்திரிகைகளும் ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்த வேண்டுமெனத் தலையங்கங்களில் குறிப்பிட்டுள்ளன. பருளேகர் கமிட்டியும், தனது யாதாஸ்தில் 11-வது சிபாரிசில் "செகண்டரி ட்ரெயினிங்பெற்று அதிகப்படி யோக்கியதையுள்ள உபாத்தியாயர்களுக்கு ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து வேலை செய்தாலும் செகண்டரி ஸ்கூலில் கிடைக்கும் ஊதியமே அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்றும்" 13-வது சிபாரிசில், "புதுக்கல்வித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரும் விஷயத்தில் உபாத்தியாயர்களுடைய உத்ஸாகத்தைக் கிளப்பவும், உத்ஸாகம் தளராமல் வைக்கவும். அவர்கள் சம்பளத்தைக் காலதாமதமின்றி உயர்த்த வேண்டும் பணவசதிக்குட்பட்டு உபாத்தியாயர்கள் சம்பளத்தை எவ்வளவு உயர்த்த முடியுமோ, அவ்வளவு உயர்த்த வேண்டுமென நாங்கள் சிபாரிசு செய்கிறோம்.'' எனக்கூறியுள்ளது. சென்னை இராஜ்ஜிய சர்க்காருக்கு உண்மையாகக் குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்தில் ஆர்வமிருந்தால் நிர்வாக வித்தியாசமின்றி எல்லா ஆசிரியர்களுக்கும், அவர்களின் கல்வி யோக்யதாம்சத்திற்குத் தகுந்தவாறு ஒரே விதமான சம்பள விகிதத்தை நிர்ணயிக்குமாறு அரசாங்கத்தை வற்புறுத்து மாறு கேட்டுக்கொள்கிறோம்.

பசியாலும், கடன் தொல்லையாலும், எத்மையாலும் அல்லற்படுகின்ற ஆரம்ப ஆசிரியர்களின் கஷ்டங்களைப் போக்குவது, பொதுமக்கள், பெற்றோர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அரசியலார் ஆகியோரின் கடமையும், பொறுப்புமாகும். மனக்கவலையின்றி ஆசிரியர்கள் வாழ்ந்தால்தான் அவர்களிடம் ஒப்புவிக்கப்படும் இளஞ்சிறுவர்கள், நாளைய பாரதத்தின் நற் பிரஜைகளாகவும்



ஒழுக்கமுடைய சீலர்களாகவும் ஆவர். தற்போது 54-55 பட்ஜெட்டில் ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வு விஷயமாக ராஜ்ஜிய கௌரவ கல்வி ஆலோசகர் ஸ்ரீ G. ராமச்சந்திரன் அவர்கள் ஆசிரியர்கள் ஆச்சரியப்படும் சம்பவம் வெளியிடப்படுமென்றும் பட்ஜட் விவாதத்தைக் கவனிக்கவும் என்று எச்சரிக்கை செய்தும் அதிகப்படியாக நிதி ஒதுக்கியிருப்பதாகக் கனம் கல்வி மந்திரி சட்ட சபையில் அறிவிக்காதது, ஆசிரியர்களுக்குப் பெரிய ஏமாற்றத்தை அளித்துள்ளது. பருளேகர் கமிட்டியின் சிபாரிசுகளை அமுலாக்குவோம் எனக்கூறும் அரசாங்கம், சம்பள விஷயத்தில் மட்டும், கமிட்டி சிபாரிசைக் கவனிக்காமலிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. ஆசிரியர்களின் சம்பள உயர்வுக்கு நிதி நிலைமை இடந்தரவில்லை என இனியும் கூறிக்கொண்டு காலம் கடத்துவது நீதியல்ல என்பதோடு ஆசிரியர்களின் மனக்கசப்பையும் அதிகரிக்கச்செய்து, ஆரம்பக்கல்வி வளர்ச்சியையும் நிச்சயம் தடைப்படுத்தும்.

"தைரியத்துடன் காரியங்களை ஆரம்பித்தால் பணம் எப்படியாவது வந்தேதீரும். இந்தியாவில் மக்கள் தொன்றுதொட்டு கல்வி போதிக்கும் குருமார்களை ஆதரித்தே வந்திருக்கிறார்கள். உபாத்தியாயர்களின் சம்பளம் அதிகரிப்பதற்காகப் பொதுமக்கள் தாராளமாக உதவி செய்வார்கள். தயங்க மாட்டார்கள். கள்குடி கெட்டது என்று ராஜாஜி அபிப்ராயப்பட்டார். சர்க்காரின் வருமானத்தில் கால்பாகம் கள்குடியின் மூலம் என்று தெரியும். ஆனால் நல்ல ஓர் சீர்திருத்தம் செய்ய, வரும்படி நஷ்டமாகிறதே என்று யோசிக்கவில்லை. மதுவிலக்கைக் கொண்டு வந்தார். நஷ்டத்திற்கு ஈடு செய்ய வேறோர் உபாயத்தையும் உடனடியாகக்கண்டு பிடித்தார். உபாத்தியாயர்களிடம் சோர்வுத்தன்மை ஏற்பட்டு வேலையில் உற்சாகத்தை இழக்கும்படியாக விட்டு விடக்கூடாது. அவர்களது சம்பளப் பிரச்னைகளை உடனடியாகக் கவனிக்க வேண்டும்" (1952-ம் ஆண்டு மே மாதம் கல்வி மகாநாட்டில் தெ. இ. ஆ சங்கத்தலைவர் ஸ்ரீ S. நடராஜன் B.A., L.T., பேசியது)

ஆரம்ப ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வு அளிக்க வேண்டுமென்று சட்டசபைகளில் பலதடவைகள் பேசி ஆதரவளித்த உங்களனைவர்க்கும் எங்கள் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மேலும் சட்டசபையில், கல்வி மான்யக் கோரிக்கையின்போது, எங்கள் சம்பள விகிதங்களை உயர்த்துவதற்கும், ஊழிய காலத்திற்கேற்ப, சம்பள உயர்வு கொடுப்பதற்கும் சகல கட்சி அங்கத்தினர்களும், கனம் கல்வி மந்திரியிடம் வற்புறுத்த வேண்டுமென்று பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மேன்மை தங்கிய பிரதிநிதிகளாகிய உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஆரம்ப ஆசிரியர்களிடம் மிகவும் அனுதாபமுள்ள கனம் கல்வி மந்திரியே நிதி மந்திரியாகவும் இருப்பதால் கட்டாயம் கணிசமான சம்பள விகிதம் தவறாமல் நிர்ணயிப்பார் என்று நம்புகிறோம். மீண்டும் உங்களுக்கு ஆரம்ப ஆசிரியர்கள் சார்பில் எங்கள் மனமார்ந்த வந்தனங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**N. S. வெங்கடேஸ்வரன்**
மன்னார்குடி தாலுக்கா
ஆரம்ப ஆசிரியர் சங்கம்.

# சோம்பல்

### 1. மடியராய் உழையாதார் மரம் சவம் ஆவரே

சிற்றெறும் பாதியாச் சீவ கோடிகள்
முற்றுமெய் யுழைத்துயிர் முறையிற் காக்குமால்
சற்றுமெய் யசைவிலாச் சழக்க ராருயிர்
அற்றவோர் சவங்கொன்மற்றசர மேகொலோ.

சிறிய எறும்பு முதல் பெரிய யானை வரை எல்லா உயிரினங்களும் உழைத்து முறையாகத் தம் உயிரைக் காக்கின்றன. உடல் ஒரு சிறிதும் அசையாது மடியராய் இருக்கும் தீயோர் உயிர் சவமோ? அல்லது நிலைத்திணையாகிய மரமோ?

### 2. உழையாத சோம்புவோர் ஒரு பெருந்தீயரே

விடக்குறுஞ் சடம்பல வேலை செய்தற்கா
நடக்கவு மோடவு நனியு றுப்புகள்
மடக்கவு நீட்டவும் வாய்ந்த தாற் சும்மா
கிடக்குமெய்ச் சோம்புவோர் கேடுளார்களே.

இறைச்சி நிறைந்த அறிவில்லாதாகிய இவ்வுடல் வேலை செய்தற் பொருட்டே. உறுப்புகள் நடக்கவும், ஓடவும், மடக்கவும், நீட்டவும் பொருத்தமாக வாய்ந்தன. அப்படியிருந்தும், வேலை செய்யாது அவ்வுறுப்புகளை வறிதே கிடக்கும் செய்வோர் தீயவராவர்.

### 3. குடும்பம் பேணுவோர் கொள்ளார் சோம்பலை

தெளிவுற நூல்பல தினமும் வாசித்து
மிளிருடல் வருந்தியும் வெறுக்கை யீட்டிநற்
கிளிமொழி மனைவியைக் கிளைஞரைப் பல
எளியாரைத் தாங்குவோர்க் கில்லை மந்தமே.

மெய்ந்நூல்களை நாடோறும் தெளிய ஓதி விளங்கும் உடல் வருந்தப் பாடுபட்டுப் பணம் தேடி, கிளிமொழி போன்ற மனைவியையும், கிளைஞர்களையும் பல எளியவர்களையும் பேணி வருவோருக்குச் சோம்பல் உண்டாகாது.

### 4. வறுமை, பாவம், துன்பம் சோம்பலால் வரும்.

மடிசேரு மவர்க்கொரு நாளுமறல்
விடியாதவர் நெஞ்சிடை வெந்துயரே
குடியாகு மறந்தொடர் குற்றமெலா
நெடிதாக வளர்ந்திடு நிச்சயமே.

ஒன்னார்க்கு அடிமைப் படுத்தும் வன்மை வாய்ந்த மடியை மேற்கொள்வார், எப்பொழுதும் வறுமைப் பிணி நீங்கார்; மனதிடத்துக் கடுந்துன்பம் குடிகொள்ளும்; பாவம் சேரும், தீமைகளெல்லாம் வளரும்; இவை உறுதியேயாம்.



### 5. கொடுமையும் களவும் சோம்பரே கொள்வர்.

பாரெல் லாமாள் வேந்தரு நூல்தேர் பண்போருஞ்
சீரெல் லாஞ்சூழ செல்வரு மந்தஞ் சேராரே
நேரில் லாமா பாதகர் தீனர் நெடுஞ்சோரம்
ஊரெல்லாஞ் செய்துய்பவர் மாசோம் புடையாரால்.

உட்கையாள் வேந்தரும், கற்றுவல்ல புலவரும், சிறப்பெய்தும் செல்வரும் சோம்பலுடையவராயிரார். பெரும் பாதகரும், கொடியவரும், ஊரெல்லாம் களவு செய்யும் பெருங் கள்ளரும் மிக்க சோம்புதல் உடையவராவர்.

### 6. உழையாச் சோம்பர் உறுவா பெருவசை

எய்யா வம்பே வல்லிசை மாறி யிறுமென்று
மெய்யா விரதமாழி யோ... கெட் டொழியுந்தம்
மெய்யானதுவே வியர்வை யுறப்பால் வினைகையாள்
செய்யாதவரே நொய்பல வுற்றுத தேய்வாரே.

நெற்றி வியர்வை நிலத்தில் விழ உடம்பு வருந்திப் பாடு படாதவர் பல நோய் உற்று மாய்வர் இசை யிழந்து வசை பெறுவர். கொண்ட கொள்கையும் கெட்டழிவர்.

### 7. உடல் அசையாதார் உறுவர் பெரும்வசை

அசையும் வளிபுவி அசையும் அனல் சலம்
அசையும் மரம்வினை பயிரெலாம்
விசையி னெடுமவை யசைவ திலையெனில்
விளியு மெனல் நிசம் நரர்கள்தந்
தசைகொள் உடல்நிதம் அசைய வினைபல
தரணி மிசைபுரி சிலரெனில்.
இசையும் வலிகெடும் நலிகள் அடு முறும்
இசையின் மிசையொடு வசையுமே.

காற்று நிலம் நெருப்பு நீர் முதலியன அசையும், மரம் பயிர் முதலியவும் அசையும். இவையெல்லாம் விரைவுடன் அசைய வில்லையானால் அழிவெய்தும் என்பது உண்மை. இவை போன்று மக்களும் தம் உடம்பு அசையும்படி உலகில் பல செயல் செய்யாராயின் பொருந்திய உடல்வலி கெடும். துன்பங்கள் வருத்தும். புகழின் மேலாக இகழ்வு பெருகும்.

---

### திருவூர், அம்பத்தூர், ஆசிரியர் பயிச்சிபெற்று, வெளியேறும் பிள்ளைகள் எடுத்துக்கொண்ட உறுதிமொழி

இவ்வாதாரப் பயிற்சிப் பள்ளியில் இரண்டாண்டு சீரியமுறையில் பயிற்சிப்பெற்றேன். ஆதாரக்கல்வியென்னும் அறிவொளி கொளுத்தப் பெற்றேன். நான் பெற்ற இவ்அறிவோளியை நான் செல்லுமிடமெல்லாம் என்னால் இயன்றவரை, பரப்ப முயற்சிக்கிறேன். இது உறுதி உறுதி.

## அம்பத்தூர் இந்து சேவா சங்க ஆதாரக்கல்வி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆண்டு நிறைவு விழா

மேற்படி கலாசாலையின் ஆண்டு நிறைவு விழா பயிற்சிக் கலாசாலை மானேஜர் ஸ்ரீ A.K.S. சர்மாஜி அவர்கள் தலைமையில் 30-3-54 அன்று மாலை நடைபெற்றது. பயிற்சிக்கலாசாலையை விட்டு விலகும் மாணவிகளுக்காக நிழற்படம் எடுத்த பின்னர் தேனீர் விருந்தளிக்கப்பட்டது. பயிற்சிப்பள்ளி மானேஜர் அவர்களுக்கு மாணவிகளால் பிரிவுவுபசார இதழ் வாசித்தளிக்கப்பட்டது.

பின்னர் பயிற்சிப் பள்ளியின் முன்னாள் ஆசிரியர் ஸ்ரீ A. S. குருசுப்பிரமணியம் B. O. L. (Hons); B. T. அவர்கள் சொற்பொழி வாற்றினார். பயிற்சிப் பள்ளித் தலைமையாசிரியை ஸ்ரீமதி. சைப்ரின் B. A. L. T. அவர்கள் ஒரு விளக்கின் துணை கொண்டு பலவிளக்குகளை ஏற்றி வைப்பது போல பயிற்சி பெற்ற ஒவ்வொரு மாணவியும் பல்லாயிரக் கணக்கான பிள்ளைகளை உருவாக்க வேண்டும் என்று கூறினார்.

பயிற்சிப்பள்ளி விடுதிக்காப்பாளர் ஸ்ரீமதி பிருஹந்நாயகி அவர்கள் மாணவிகள் அமைதி, ஒழுங்கு, அன்பு இவைகளைக் கடைப்பிடிக்குமாறு கூறினார்கள். அப்பள்ளி மேற்பார்வையாளர் ஸ்ரீமதி வித்வான் வேங்கடலக்ஷ்மம்மா பேசுகையில் பாரத நாட்டுப் பெண்களின் பெருமையை எடுத்துக் கூறி, சீதை, தமயந்தி, கண்ணகி போன்ற சிறந்த மாதர்களாக விளங்கவேண்டும் என்று கூறினார். பயிற்சிப்பள்ளி கைத்தொழில் ஆசிரியை ஸ்ரீமதி மோஹனாம்பாள் நெசவு ஆசிரியர் ஸ்ரீ சுப்பிரமணிய முதலியார் ஆகியோரும் பேசினர்.

இறுதியாகப் பயிற்சிப் பள்ளி மேனேஜரும், கூட்டத்தலைவர் ஸ்ரீ A. K. S. சர்மா அவர்கள் பேசுகையில், அன்பு அஹிம்சை, அறம் ஆகியவற்றின் அடிப்படையால் உருவாக்கப்படவேண்டிய சமூதாயத்திற்கு-ஆதாரக் கல்வியின் சிறந்த லட்சியத்திற்கு-இப் பயிற்சி பெற்ற மாணவிகள் தொண்டு செய்ய வேண்டுமென்றும், ஆதாரக்கல்விப் பள்ளிகளிலேயே ஆசிரியப் பணியாற்ற வேண்டுமென்றும், கிராமங்கள் தோறும் ஆதாரக் கல்விப் பள்ளிகளை நிறுவி நடத்தும் பணியில் ஊக்கங்கொண்டு உழைத்து சிறந்த தொண்டர்களாக-தேச சேவிகைகளாக வேண்டுமென்றும் கூறினார்கள்.

பின்னர் விடைபெறும் மாணவிகள் சார்பில் தருமாம்பாள், சுந்தரவல்லி, சுந்தராபாய் ஆகிய மாணவிகள் சொற்பொழிவாற்றினார்கள். அவர்களுக்கு நன்றி கூறும் வகையிலே முதலாண்டு மாணவிகளில் ஸ்ரீமதி ஜெயா, கங்காபாய் முதலியோர் பேசினார்கள்.

இறுதியாக நன்றி கூறப்பட்டு தேசிய கீதத்துடன் விழா முடிவடைந்தது.



## திருவூர் அரசினர் ஆதாரப் பள்ளி வெளியேறும் பிள்ளைகளுக்கு ஆதாரக்கல்வி ஆசிரியர் A. K. S. சர்மா ஆற்றிய சொற்பொழிவு

ஆதாரக்கல்வியை வளம்படுத்தும் சூழ்நிலை கிராமீயச் சூழ் நிலை பசும் பயிரும் பண்ணைகளும் பரவியிருக்கும் சூழ்நிலை நூற்பும் விவசாயமும் ஒருமித்து ஓங்கி வளரும் சூழ்நிலை. இச் சுற்றுச் சூழலில் அமைந்துள்ள திருவூரில் அரசினர் ஆதாரக்கல்விப் பயிற்சிப் பள்ளி அமைந்திருப்பது சிறந்த வாய்ப்பேயாகும். இதிற் படிக்கும் மாணவர்களும், பணியாற்றும் ஆசிரியர்களும் பேறு பெற்றவர்களாவர். இப் பள்ளி மாணவர்கள் உண்மையில் விடுதலையடைந்தவர்கள் வருவாய்க்கு மிஞ்சிய செலவும், அதன் விளைவால் வாடும் வறுமையும், வருத்தமும் தன் வளர்ச்சிக்கோ பிறர் வளர்ச்சிக்கோ துணையாக நிற்கும் இயந்திர வாழ்க்கை மோகமும் தாண்டவ மாடும் நவநாகரீக நகரங்களின் பிடியினின்றும் விடுதலை பெற்ற வீரர்களாவர். நகரச் சூழ்நிலையைத் தடுத்து நிறுத்திக் கிராமீயச் சூழ் நிலையிலே சுயமுயற்சி, கூட்டுறவு மூலமாக வாழ்க்கையைப் பெற்று உடல், உள்ளம் உயிர் ஆகிய மூன்றின் ஒருமித்த ஒழுங்கான பூரண வளர்ச்சியைப் பெற்றிருக்கிறார்கள். இது பெறற்கரிய பேறு; இதுவே ஆதாரக்கல்வி பயிற்சி பெற்ற பிள்ளைகளுக்கும் சாதாரணப் பயிற்சி பெற்ற பிள்ளைகளுக்கும் இடையே காணப்படும் பெருத்த வேறுபாடு.

இப்பயிற்சி பெற்ற பிள்ளைகள் இனி செய்ய வேண்டியது யாது? நாட்டின் முதுகெலும்பான கிராமங்களுக்குச் சென்று தொண்டாற்ற வேண்டும். ஆதாரக்கல்விப் பள்ளிகளிலேயே பணியாற்ற வேண்டும். சாதாரணப் பள்ளிகளிலே பணியாற்ற நேரும் போது தான் பெற்ற ஆதாரக்கல்விப் பயிற்சியினை மறக்காது பயிற்சிக் காலத்துப் பெற்ற அநுபவத்தையும் பழக்கத்தையும் பண்படுத்திக்கொண்டு ஏனையோரும் பார்த்துப் பழகி அப் பயிற்சியைப்பெற விரும்புமளவில் தானே முன் மாதிரியான ஆசிரியராகவும்—நூற்பையும், வறிதே கிடக்கும் சிறிய இடத்தில் தோட்டத்தையும் அமைத்தும் சுயதேவைப் பூர்த்தியை வாழ்க்கையிலே அடையும் வண்ணம் தன் மாணவர்கள், சகோதர ஆசிரியர்கள் உணருமாறு செய்தும்—நூல் நிலையங்களிலே ஆதாரக்கல்விப் புத்தகங்களை ஆசிகரிக்கச் செய்தும் இன்னபிறவழிகளை, மேற்கொண்டும் அப் பள்ளிகளை ஆதாரக்கல்விப் பள்ளிகளாக மாற்றும் சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும். இதுவன்றோ ஆதாரக்கல்விப் பயிற்சி பெற்ற மாணவர்களின் உயர்ந்த தொண்டு!

இம்மட்டோ! இப்பொழுது கிராமங்களிலே கட்சிப் பிரதிக் கட்சிப் பூசல்கள் காணப்படுகின்றன. நாஸ்தீகம் பையப் பையப் பரவி வருகிறது. கிராம மக்களின் சமுதாய நலத்தை—ஒழுங்கு வாழ்க்கையை—ஒற்றுமை மனப்பான்மையை இந்நாசகார சக்திகள் சூறையாடி வருகின்றன. இச்சக்திகளை ஒடுக்கி, கடவுள் நெறியைப் பரப்பவும், அறிவைப் பரப்பவும் ஆதாரக்கல்விப் பயிற்சி பெற்ற இளைஞர்கள் முன்வரவேண்டும். சிறந்த அறிவைப் பரப்பும் தொண்டில் ஈடுபடுமுன் அத் தொண்டினைச் செய்ய இளைஞர்கள் தங்களை முதலிலே தகுதியுள்ளவர்களாக்கிக் கொள்ளவேண்டும். ஏனைய துறைகளின் எடுத்துக்காட்டாக கிராமம் எனின் முக்கியமாகப் பஞ்சாயத்து, விவசாயம், சுகாதாரம் ஆகிய துறைகளின்; இலாக்காக்களின் ஒத்துழைப்பைப் பெற்று, அவ்வத்துறைகளில் வெளிவரும்

# தர்மமூர்த்தியான தாசரதி.

உலகில் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று நமக்கு நடத்திக்காட்டிய அருளாளரில் ராமாயண கதாநாயகனாகிய இராமபிரான் முதன்மைப் பெற்றவர். நாடாளவேண்டிய நன்னாளிலே, இராமபிரானைக் காடுசெல்லக் கட்டளையிடுகிறாள் கைகேயி. காடு செல்லென்ற சொல்லைக்கேட்ட இராமபிரானுடைய திருமுகம் வாட்டத்துடனில்லாமல்,

"இப்பொழுது எம்மனோரால் இயம்புதற்கு எளிதோ? யாரும்
செப்பருங் குணத்து இராமன் திருமுகச் செல்விநோக்கின்;
ஒப்பதே முன்பு, பின்பு வாசகம் உணரக் கேட்ட
அப்பொழுது, அலர்ந்த செந்தாமரையினை வென்றது அம்மா!"

அப்பொழுதுதான் மலர்ந்த தாமரையைக் கூடத் தோற்கடிக்கக் கூடியதாயிருந்தது. செல்வம் வந்தடைந்தாலும், மேன்மையடைந்தாலும், ஏழையாகிச் சிறுமையடையும் நிலைவந்தாலும் ஒத்திருக்கும் உள்ளத்தையுடையவன் இராமபிரான் என்கிறார் கம்பர். நம்மில் சிலர் சந்தோஷம் வந்தால் ஒரேயடியாகக் கூத்தாடுகிறார்கள். துக்கம் வந்தால் ஒரே அழுகைதான். அப்படி நிதானமில்லாமல் நடக்கக் கூடாது என்பதைக் காட்டுகிறது இராமபிரானுடைய திருமுகம்.

"பகைவனுக் கருள்வாய் நெஞ்சே" என்கிறார் கவி, தன்னுடைய பகைவனான இராவணன் தோற்று ஸகல பலங்களையும் இழந்து நிராயுதனாக நின்றபோது,

"ஆளை யாவுனக்கமைந்தன மாருத மறைந்த
பூளை யாயின கண்டனை யின்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்."

என்றவாறு "இன்றுபோய் நாளை வா" என்று தனது ஜன்ம விரோதிக்கு இரக்கங்காட்டின இராமன் போன்ற வீரனை எந்த தேசமும், எக்காலமும் காணமுடியாது. கண்டதுமில்லை. காணப் போவதுமில்லை. பகைவருக்கு அருளும் பண்பு இதைக்காட்டிலும் ஏது! ஒருவேளை மறுதினம் இராவணன் திரும்பி வந்து இராமனைச் சரணடைந்தால், விபீஷணனுக்கு இலங்கையைக் கொடுக்கிறேன் என்ற வாக்கைக் காப்பாற்றவேணுமே! வான்மீகர் சொன்னபடி இராவணனே வந்து அடைக்கலம் புகுந்தாலும் காப்பாற்றக் கூடியவன் இராமன்! ஆதலால் தன்னை வந்து சரணாகதியடைந்தால் இராவணனை ஏற்றுக்கொள்ளும் இராமன் இலங்கையை இராவணனிடமிருந்து வாங்கி விபீஷணனுக்குக் கொடுத்துவிட்டுத் தன்னுடைய அயோத்தியை இராவணனுக்கு முடிசூட்டி வைத்துத் தான் தம்பிகளோடு காட்டிலேயே இராமன் இருந்து விடுவாரென்பதைக் காட்டவே "கோசல நாட்டைஉடைய இராமன் கொடுத்துவிடக் கூடியவர்தான்" என்பதை "வள்ளல் (கொடுக்கக் கூடியவன்)" என்கிறார் கம்பர். இராமபிரான் தவிர வேறு யாரிடம் இப்பேர்ப்பட்ட அருளைக் காணப்போகிறோம்?

"தனக்குத் தீங்கு செய்தவரை தண்டிப்பதற்கு வழி ஒன்றேதான்! அது தீங்கு செய்தவருக்கு நன்மை செய்வது" என்கிறார் திருவள்ளுவர். இராவணன் வீழ்ச்சிக்குப் பின் சிறையிலிருந்த சீதாதேவி தன் பரிசுத்தத்தை நிலைநாட்டத் தீக்குளித்தாள். அவ்வேளை தசரத சக்கரவர்த்தியார் தோன்றி யாவரையும் போற்றிப் புகழ்ந்து இராமனுக்கு வரங்கொடுக்க விரும்பியகாலத்தில் இராமபிரான்,

"தீயளென்று நீ துறந்தவென் தெய்வமு மகனும்
தாயும் தம்பியுமாம் வரந்தருக".

என்று கேட்கிறார். தருமவிரோதமாக, மூத்தவன் இருக்க இளையவனாகிய தன்மகன் பரதனுக்கு முடிசூட்டவேண்டுமென்ற வரங்கேட்ட கைகேயி தனக்கு மனைவியல்ல என்றும், அவள் மகன் பரதன் தனக்கு மகனல்ல என்றும் தசரதர் கூறி இருந்தார். அதை ஞாபகப்படுத்தி இராமபிரான் 'கைகேயியைத் தாயாகவும், பரதனைத் தம்பியாகவும்" தனக்கு அளிக்கவேண்டுமென்று வரங்கேட்பதன் மூலம், தசரத சக்ரவர்த்தியார் கைகேயியை மனைவியாகவும், பரதனை மகனாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறார். கைகேயியைப் பற்றிக் கூறவந்த இராமன் அவளை "என் 'தெய்வம்" என்று சொல்லும் பெருமை, தன்னைத் துன்புறுத்தியவர்களையும் நல்லோராக எண்ணும் தன்மையன்றோ!

இவ்வளவு நற்குணங்களையுடைய தருமமூர்த்தியான இராமன் பிறந்த பூமியில் நாமும் பிறந்த பாக்கியசாலிகள். இராமனுடைய வாழ்க்கையை உதாரணமாகக் கொண்டும், அப்பெருமானுடைய திருநாமத்தைச் சொல்லிக்கொண்டும் இன்பமாக இவ்வுலகில் வாழ அவனை வேண்டுவோமாக!

**ஸ்ரீராம்! ஜய ராம்!! ஜய ஜய ராம்!!!**

(காமகோடி)

---

வெளியீடுகளை நன்கு அறிந்து, மக்கள் கூடும் சந்தைகளிலோ பொதுக் கூட்டங்களிலோ அவர்கள் தங்கள் வாழ்க்கையை—சுயதேவைப் பூர்த்தியும் அறிவும் பெற்ற வாழ்க்கையாகத்திருத்திக் கொள்ள உதவும் அரிய விஷயங்களைப் பரப்பவேண்டும். மக்கள் பின்பற்றும் வண்ணம் தங்கள் பேச்சு, நடத்தை ஆகியவற்றிலும் சிறந்து விளங்கவேண்டும்.

ஆதாரக்கல்வியின் சிறந்த லக்ஷியங்களை உருவாக்குவதில்—அந்த லக்ஷிய வாழ்க்கையை ஏற்று நடத்த முடியா வண்ணம் குடும்பக் கவலைகள்—வருவாய்த் தொல்லைகள் சமுதாயச் சீர்கேடுகள்—கல்வித் துறை மாறுதல்கள் போன்ற உருவங்களிலே இன்பதுன்ப விருப்பு வெறுப்புக்கிடமான நிகழ்ச்சிகள் ஏற்படலாம். இவ்வனைத்தும் எதிர்த்து வந்தபோதிலும் மன உறுதி, தன்னம்பிக்கை, சுயமுயற்சியுடன் கூடிய விடாமுயற்சி, ஆகியவைகளைக் கைக்கொண்டு வாழ்க்கையை நடத்தின பாலைவனத்தையும் பசுஞ்சோலையாக்கலாம். பள்ளியில்லாத ஊரை பார்ப்பதற்கும் அரிதாக ஆக்கலாம். எனவே இத்தொண்டாற்ற ஆதாரக்கல்விப் பயிற்சிபெற்ற இப்பள்ளி மாணவர்கள் முன்வருவார்களாக.

## ஆதாரக்கல்விப் பயிற்சிக் கலாசாலை; அம்பத்தூர்.

### ஆண்டுவிழாச் சொற்பொழிவு.

A. S. குருசுப்பிரமணியம் B. O. L. (Hons); B. T.

சுதந்திரம் என்பது வெறும் ஆட்சி மாறுதலல்ல. ஆட்சி மட்டும் மாறி பழைய நிலையிலே யாவற்றையும் கொள்வது சுதந்திரச் செய்கையாகாது. அறிவு, பொருளாதாரச் சுதந்திரமே நாட்டின் உண்மையான சுதந்திரம். நல்லறிவுள்ள மக்கள் நற்றொழில்களைச் செய்யுங் காலத்தேதான் சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும்.

நம் நாட்டில் அன்னிய ஆட்சி ஒழிக்கப்பட்டதாயினும், அம்முறையை இன்னும் நாம் கைவிடவில்லை. தற்பொழுதே தேசீய விழிப்பு பெருமளவில் தோன்றி வருகிறது. அறிவு பொருளாதாரச் சுதந்திரம் பெற்று மக்கள் வாழ கல்வி முறையிலே சீர்திருத்தங்கள் வேண்டும் என்று தலைவர்கள் கூறுகிறார்கள். அச்சீர்திருத்தங்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டு அனைவருக்கும் பயன்பட அண்ணல் காந்திஜி அளித்த ஆதாரக்கல்வி முறையே இன்று நடைமுறையிலே அனுஷ்டிக்கப்படுகிறது

ஆதாரக்கல்வி முறை பாரதப் பண்பாட்டின் பண்பிலே வழியது. பாரதத்தின் முதுகெலும்பு போன்ற கிராமங்களைப் புனர்நிர்மாணம் செய்து பொருளாதாரத் துறையிலே முன்னேற்றம் செய்ய வழி வகுப்பது. தற்கால சமுதாயத்திலே காணப்படும் குறைகளை நீக்கி அன்பு அறம் அஹிம்சை ஆகியவற்றின் அடிப்படையிலே புதிய-நவீன சமுதாயத்தை உருவாக்க வல்லது.

இத்தகைய சிறந்த லட்சியங்களைக்கொண்ட ஆதாரக்கல்வியின் மகத்துவத்தை அரசாங்கம் தற்பொழுதே உண்மையாக உணர்ந்து வருகிறது. பல நூற்றுக்கணக்கான பள்ளிகள் தோன்றி வருகின்றன. இவ்வாதாரக்கல்வி முறையை இன்னும் விரைவிலே குறிப்பாகச் சென்னை ராஜ்யத்திலே பரப்ப ராஜாஜி கல்வித் திட்டமும் உறுதுணை செய்கிறது.

இத்திட்டத்தை வெற்றிபெறச் செய்ய பல வழிகள் இருப்பினும் முக்கியமாகத் தற்போது தேவைப்படுவது தொண்டர்கள். ஆசிரியர் குழாங்கள் நாட்டின் நல்வாழ்வுச் சிற்பிகள். ஆதாரக் கல்விப்பயிற்சி பெற்ற ஆசிரியர்களை அதிகரிக்கச் செய்ய வேண்டும். அவ்வாசிரியர்கள் பணியாற்ற ஆயிரக்கணக்கான ஆதாரக்கல்விப் பள்ளிகளை நிறுவ வேண்டும்.

பள்ளிகளில்லா ஊர்களிலே—ஒவ்வொரு கிராமத்திலும் ஆதாரக்கல்விப் பள்ளிகளை நிறுவ கிராமத்தொண்டாற்ற வேண்டும். எழுலட்சம் கிராமங்களும் எதிர்கால பாரதத்தின் தூண்களாக ஆக்கப்படவேண்டும். ஆ. க. சே வ தொண்டர்கள்-குறிப்பாக ஆசிரியர்கள் அரசாங்கம் இம்முறையை விரைவில் மேன் மேலும் ஊக்கமுடன் பரப்புவார்களாக.



# ராஜாஜி சர்க்காரின் சாதனைகள்

இரண்டு ஆண்டு காலத்தில் ராஜாஜியினால் மகத்தான பல நன்மைகளை சென்னை ராஜ்யத்திற்கு செய்ய முடிந்தது; இந்த நன்மையினால் பாரத நாடு முழுவதுமே நன்மையடைந்தது.

ராஜாஜி முதல்மந்திரி பொருப்பு ஏற்றுக்கொண்ட பின்னர் செய்த முதற்பெருங் காரியம் தானியக் கண்ட்ரோலை எடுத்தது.

அரசியல் தலைவர் ஒருவர் தமது வாழ்நாளில் இத்தகைய ஒரு காரியத்தைச் செய்தாலே போதுமானது. அவருடைய அரசியல் சேவை பரிபூரணமாகி விட்டது என்று சொல்லலாம்.

1947-ம் ஆண்டில் இந்தியா அரசியல் சுதந்திரம் பெற்று விட்டது என்று சொல்லப்பட்டு வந்த போதிலும், 1952-ல் ராஜாஜி தானியக் கண்ட்ரோலை எடுத்த பிறகு தான் மக்கள் "உண்மையில் நாம் சுதந்திரம் பெற்று விட்டோம்" என்று உணரத் தொடங்கினார்கள்.

ராஜாஜி இந்த இராஜ்யத்தில் தானியக் கட்டுப்பாட்டை எடுத்த பிறகு, பாரத நாடு முழுவதிலும் அந்த கட்டுப்பாடு நீங்கியது. மழை இல்லாமையால் நேர்ந்திருந்த பஞ்சத்தைக்காட்டிலும் தானியக் கட்டுப்பாட்டு விதிகளினால் அதிகார வர்க்கம் ஏற்படுத்தி வந்த பஞ்சம் மிகக் கொடுமையாக இருந்தது.

அதிகார வர்க்கம் ஏற்படுத்திய பஞ்சம் நீங்கிய பிறகு தானியப் பஞ்சமும் நீங்கலாயிற்று

தற்போது பாரத நாட்டில் வேறு பல "இல்லைகள்" நிலவி வந்த போதிலும், "அரிசி இல்லை; தானியம் இல்லை." என்ற பேச்சு மட்டும் எங்கும் கேட்கப்படுவதில்லை.

1952-ம் ஆண்டில் தேசம் இருந்த நிலையில் ராஜாஜியைத் தவிரவேறு யாராலும் தானியக் கட்டுப்பாட்டைத் துணிந்து எடுத்திருக்க முடியாது என்பது மக்களின் ஒருமுகமான வாக்கு.

ராஜாஜியை எப்பாடு பட்டாவது முதன் மந்திரி பொறுப்பு ஏற்கச் செய்ய வேண்டுமென்று அந்தக் காலத்தில் பெருமுயற்சி செய்தவர்கள், தங்கள் முயற்சியின் வெற்றியால் விளைந்த இந்த ஒரு பலனை எண்ணியே என்றென்றைக்கும் மனநிறைவு கொள்ளலாம்.

இன்றும் எத்தனையோ அரும் பெரும் சாதனைகளை ராஜாஜியின் ஆட்சி காலத்தில் கண்டோம். ஆறு வருஷத்துத் தொடர்ந்த பஞ்சத்தினாலும் கைத்தறித் தொழில் அடியோடு நசித்துப் போனதினாலும் லட்சக் கணக்கான மக்கள் நிராதரவாகி மடிந்து போகும் நிலையில் இருந்தார்கள். மத்திய சர்க்காருடன் போராடி, கோடிக்கணக்கான ரூபாய் பஞ்ச நிவாரண வேலைகளுக்காகப் பெற்று, பஞ்சத்தினால் ஓர் உயிரும் மடியாமல் காப்பாற்றினார்.

கைத்தறி நெசவுக்கு ஓரளவு பாதுகாப்புப் பெற்றுக் கொடுத்து இடைவிடாத தீவிரப் பிரசாரம்

செய்து மீண்டும் அத்தொழில் புத்துயிர் பெறும்படி செய்தார்.

சென்னை இராஜ்ய சர்க்காரின் பொருளாதார நிலைமை ராஜாஜி பொறுப்பை எற்றுக்கொண்ட போது மிக மிக மோசமான நிலைமையிலிருந்தது.

இரண்டு முறை ராஜாஜி பொது ஜனங்களிடையே கடன் எழுப்பினர். இரண்டாம் முறை ஐந்து கோடி ரூபாய் கேட்டதற்கு ஒன்பது கோடி ரூபாய் கிடைத்தது. அரசாங்கங்களின் பொருளாதார வரலாற்றிலேயே இம்மாதிரி அதிசயம் நடந்தது கிடையாது.

இவ்வாறு இராஜ்யத்தின் பொருளாதாரத்தைச் சீர்திருத்தியபடியால், மத்திய அரசாங்கத்துடன் மன்றாடி, அமராவதித் திட்டம், வைகைத்திட்டம் முதலிய பல பொதுநலத் திட்டங்களைப் புதிதாகச் சேர்த்துக் கொள்ளச் செய்வதில் வெற்றி அடைந்தார்.

தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமாகிய தஞ்சை ஜில்லாவில் 'மிராசுதார்களுக்கும், குடியானவர்களுக்கும் வெட்டுப் பழி குத்துப் பழியாக இருந்த நிலைமையில் விவசாய பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டுவந்து, இருசாராரும் உற்சாகமாக எற்றுக் கொள்ளும்படி செய்தார். நெற்களஞ்சியம்தப்பிப் பிழைத்தது.

ஆந்திரப் பிரிவினைக் கட்டத்தில் ராஜாஜி [illegible] ருந்திரா[illegible] சென்னை நகர் தமிழ் நாட்டைச் சோ[illegible]

யிராது என்பதை உணராதவர் யாருமில்லை.

"இரண்டு வருடகாலம் முதன் மந்திரி ஸ்தாபனம் தூய்மையாக இருந்தது; அரசாங்க நிர்வாகம் நேர்மை தவறாமல் நடைபெற்றது" என்று அவருடைய திட்டங்களை மூர்த்கண்யமாக எதிர்த்தவர்களே சொல்லுகிறார்கள்.

கட்சியைச் சேர்ந்தவன் என்பதற்காக யாருக்கும் பட்சபாதம் காட்டப் படவில்லை. சிபார்சுகளினால் யாரும் சுயநலத்தைச் சாதித்துக் கொள்ள முடியவில்லை. அரசாங்க அதிகாரிகளின் காரியங்களில் அநாவசியமான குறுக்கீடுகள் நடக்கவில்லை.

ஒரு மந்திரி சபை வகுக்கும் திட்டங்களில் சில பூரண வெற்றி அடையலாம்; சில வெற்றி பெறாமலும் போகலாம்.

வேலைத் திட்டங்கள் வெற்றி பெறுவது நாட்டின் சூழ்நிலையையும் மற்றும் பல்வேறு சந்தர்ப்பங்களையும் பொறுத்தது.

ஆனால் "நேர்மையான நிர்வாகம் நடந்தது." என்று பெயர் வாங்குவது மந்திரி பதவி வகிப்பவர்களின் திடசித்தத்தை மட்டுமே பொறுத்தது.

இனி, அரசாங்க நிர்வாகப் பொறுப்பை யார் வகித்தபோதிலும், அவர்கள் இந்த விஷயத்தை மறந்துவிட முடியாது.

அவர்கள் மறந்து விடுவதற்குப் பொது மக்கள் அனுமதிக்க மாட்டார்கள்.

அரசாங்க பதவி வகிப்பவர்கள் நேர்மை தவறி நடப்பதை



## அம்பத்தூர் ஆதாரக்கல்வி ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி பழைய மாணவிகள் சங்கம்

சென்னை இந்து சேவா சங்க ஆதாரக்கல்வி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பழைய மாணவிகள் சங்கம், பயிற்சிக் கலாசாலை மானேஜர் ஸ்ரீ A. K. S. சர்மா அவர்கள் தலைமையில் 28-3-54 அன்று நிறுவப்பட்டது

பயிற்சிபெற்றுப் பள்ளியினின்றும் வெளியேறும் மாணவிகள் பயிற்சிப் பள்ளியோடு இடையறாத தொடர்பு கொள்ளவும், அடிக்கடிப் பள்ளியோடு தொடர்பு கொண்டு அவ்வப்பொழுது மாறும் ஆசிரியத் தொழில் முறையில் விளக்கத்தைப் பெறவும், பள்ளிக் கூடக் கட்டிட வசதி, நூல் நிலையம், எழை மாணவிகள் பராமரிப்பு போன்றவைகளுக்கும் குறிப்பாகப் பள்ளிக்கூடப் பொருளாதார நிலையினை உயர்த்தவும் இப் பழைய மாணவிகள் சங்கம் தொடங்கப் பட்டது.

இச்சங்கம் தொடங்கப்பட்ட அன்றே பள்ளியை விட்டுத் தேர்வு எழுதி வெளியேறும் மாணவிகள் அனைவரும் உறுப்பினர்களாகச் சேர்ந்தார்கள். ஸ்ரீமதி. ஆர். சகுந்தலாபாய் அவர்கள் தலைவியாகவும் குமாரி வி. சுலோசனா அவர்கள் துணைதலைவியாகவும், ஸ்ரீமதி. எச். ஸைப்ரின் B. A. L. T., அவர்கள் செயலாளர், நிதியாளராகவும். குமாரி வி. எம். தமிழரசி அவர்கள் துணைச் செயலாளராகவும், குமாரிகள் ஆர். சகுந்தலா, கே. சகுந்தலா, என். நாராயணி ஆகியோர் கமிட்டி உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு நிர்வாகக் குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இச்சங்க நிர்வாகக் குழு சிறந்த முறையிலே தொண்டாற்றி, இனி வரும் மாணவிகளுக்கு எடுத்துக் காட்டாக விளங்கிப் பள்ளியின் பெபரையும் புகழையும் நிலை நிறுத்துவார்களாக.

---

இனி ஒரு நாளும் பொதுமக்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள்.

சட்ட சபை அங்கத்தினர்கள் தங்கள் இஷ்டப்போல் அரசாங்க அதிகாரிகளை ஆட்டி வைப்பதற்கு இடங் கொடுக்கமாட்டார்கள்.

யார் அரசாங்க பதவிக்கு வந்தாலும் நடு நிலைமை தவறாத நேர்மையான அரசாட்சி நடக்க வேண்டும் என்று அறிவாளிகளாகிய தமிழ் மக்கள் எதிர்பார்ப்பார்கள். இது விஷயத்தில் மிக மிக விழிப்புடனிருப்பார்கள்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக அடுத்தபடி ஆட்சி பீடங்களுக்கு வருகிறவர்கள் இதை நன்கு மனதில் பதித்து வைத்துக்கொண்டு பொது மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகும் முறையில் நடந்து கொள்வார்கள் என்று நம்புகிறோம். (கல்கி)

# சென்னை காதி அபிவிருத்தி கூட்டுறவு சங்கம்

**86, பிராட்வே, சென்னை-1.**

**நூற்பவர்களுக்கோர் செய்தி!**

நம்முடைய கூட்டுறவு சங்கத்தில் உங்களுக்குத் தேவையான பருத்தி, பஞ்சு, பட்டைப்பஞ்சு, கதிர் தக்ளி, வீசனங்கள், கிஸான் சர்க்கா, பெட்டி சர்க்கா நாட்டு ராட்டினம் தறி முதலியன கிடைக்கும்.

நூற்பு பயிர்ச்சியும் கொடுக்கப்படும்.

*விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:*

**சென்னை காதி அபிவிருத்தி கூட்டுறவு சங்கம்**

**86, பிராட்வே சென்னை-1.**

*(ராட்டினங்களும் பழுது பார்க்கப்படும்.)*


*(அட்டை 2-ன் தொடர்ச்சி)*

## தேசிய வாரம்

12-4-54 *மாலை ஆதாரக்கல்வி ஆசியர் பயிற்சிப் பள்ளி மாணவிகள் மன்றத்தின் சார்பில் ஸ்ரீமதி சிப்ரியன் தலைமையில், தேசியவாரம் கொண்டாடப்பட்டது. அவ்வமயம், ஆதாரக்கல்வி ஆசிரியர்,* Sri. A. K. S. *சர்மா அவர்கள், தேசியவாரத்தின் முக்கியத்துவத்தைப்பற்றிப் பேசினார். தேசியத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக திட்டப்பட்டுள்ள பல திட்டங்களில் அனைவரும் பங்கெடுத்துக் கொண்டு, தொண்டாற்றவேண்டுமென்றும் வற்புறுத்தினார்.*

*குமாரி லக்ஷ்மிபாய், (ஆசிரியை, ஸ்ரீ ராமகிருஷ்ண பாடசாலை, பெருமாள் பேட்டை,) இன்னிசை விருந்தளித்தார்கள்.*

*பிரசாதம் வழங்கப்பட்ட பிறகு விடுதி காப்பாளர் குமாரி பிரஹன்னாயகி அம்மையார், ஸ்ரீ ராமாயணத்திலிருந்து, சில கோட்பாடுகளை எடுத்துக் காட்டி ஒரு சிறிய சொற்பொழிவாற்றி, வந்தனோபசாரம் கூறினார்.*

**Edited and Published by A. K. S. Sarma, 87, Acharappan St., Madras.**
**Printed by Sri A. R. Parthasarathy, at the Social Printers,**
**306, Mint Street, Madras-1.**